


புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 நவம்பர் 06, 2008 புரட்சி 7 முழக்கம் 45 விலை : ரூ.2.50


## ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி, மன நோயாம்!

# பார்ப்பன ஏடுகளின் திமிர்

**"இலங்கை ராணுவம் போரை நிறுத்த வேண்டும்"**

- இது முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் ஒருமித்த தீர்மானம்.
- தமிழகக் கலை உலகமே திரண்டு, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடத்திய உண்ணா விரதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் இதுதான்!

*ஆனால், பார்ப்பன ஏடுகள் என்ன கூறுகின்றன?*

*அனைத்துக் கட்சிக் கூட்டத்தை, தமிழக முதல்வர் கலைஞர் கூட்டிய அன்று காலை (அக்.14, 2008) மாலினி பார்த்தசாரதி என்ற இந்து ஏட்டின் ஆசிரியர் குழுவைச் சார்ந்த பார்ப்பன அம்மையார் - கட்டுரை ஒன்றை எழுதினார். அதன் தலைப்பு 'தமிழ் இனவெறியின் ஆபத்துகள்'*

(The dangers of Tamil Chauvinism)

"The Sri Lankan army, just two kilometers away from the LTTE's administrative capital, Kilinochchi, has successfully encircled the Tigers and their leader who are virtually trapped in their bunkers. For the first time in years, the Sri Lankan government appears to be on the brink of a major success in its battle with terrorism. There is now the very real prospect of the capture of the elusive LTTE Chief, Velupillai Prabakaran, who is behind the assassination of a former Prime Minister of India, Rajiv Gandhi."

*"இலங்கை ராணுவம் விடுதலைப் புலிகளின் நிர்வாகத் தலைநகரமான கிளிநொச்சியை நெருங்க இன்னும் இரண்டு கிலோ மீட்டர் தூரம் மட்டுமே இருக்கிறது. இலங்கை ராணுவம், விடுதலைப் புலிகளையும், அதன் தலைவரையும் சுற்றி வளைப்பதில் வெற்றி பெற்றுவிட்டது. உண்மையில் அவர்கள் எல்லாம் பதுங்கு குழிக்குள் தள்ளப்பட்டு விட்டார்கள். பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் முதன்முறையாக இலங்கை அரசு பெரும் வெற்றி முனையை நோக்கிச் செல்வதாக தெரிகிறது. இது வரை தப்பித்துக் கொண்டிருந்த பிரபாகரன், இப்போது பிடிபடக் கூடிய சூழல் உருவாகியுள்ளது. இந்த பிரபாகரன் தான் ராஜீவ் கொலையில் பின்னணியாக இருந்து செயல்பட்டார்."*

*அக்.14 ஆம் தேதி கிளிநொச்சிக்கு, 2 கிலோ மீட்டர் அருகே ராணுவம் நெருங்கிவிட்டது என்று துள்ளிக் குதித்த மாலினி பார்த்த சாரதிகள், இது வரை கிளிநொச்சியை ஏன் பிடிக்கவில்லை என்பதை விளக்க முன் வரமாட்டார்கள்! 'அவாளின்' ஆழ் மன ஆசைகள் அவை!*

*தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இயக்கத்தை முன்னின்று நடத்தும் கட்சிகள் ம.தி.மு.க.வும், பா.ம.க.வும் தான் என்று மாலினி பார்த்தசாரதி, அக்கட்டுரையில் குற்றம் சாட்டுகிறார். (இதற்காகத்தான் 'இந்து' நாளேட்டை பெரியார் திராவிடர் கழகத்தினர் தீயிட்டுக் கொளுத்தினர். அதற்கு பெரியார் திராவிடர் கழகத்தை வன்முறை இயக்கம் என கண்டித்து 'இந்து' ராம் வெளியிட்ட காட்டமான அறிக்கையை, முழுமையாக வெளியிட்ட ஒரே நாளேடு பாமக. நிறுவனர் நடத்தும், தமிழ் ஓசை' தான் என்பதையும் வேதனையுடன் சுட்டிக் காட்ட வேண்டும்.)*

*மாலினி பார்த்தசாரதி மேலும் எழுதுகிறார்:*

For the last decade or so, New Delhi has successfully resisted the various attempts made by the LTTE and its supporters in Tamil Nadu to force it to intervene in the Sri Lankan ethnic crisis. If New Delhi were to express its disapproval, even implicitly, of Sri Lanka's sovereign right to recapture its own national territory from the LTTE, it would weaken the moral authority of India's own actions in regard to its struggle against terrorism and the separatist agitation in Kashmir. This latest campaign in Tamil Nadu masterminded by a desperate LTTE must not be allowed to undermine the sound policy decision upheld by successive Indian governments since 1991 to stay out of Sri Lanka's internal affairs."

*"இலங்கை இனப் பிரச்சினையில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா தலையிட வேண்டும் என்று தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளும், அதன் ஆதரவாளர்களும் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளை நிராகரிப்பதில் புதுடில்லி வெற்றி பெற்று வந்துள்ளது.*

*இந்த நிலையில் விடுதலைப் புலிகளிடமிருந்து, இலங்கை அரசு,தனது இறையாண்மைக்கு உட்பட்ட பகுதிகளை மீட்பதற்கான உரிமை உண்டு. இது இலங்கை அரசின் இறையாண்மைக்கு உட்பட்ட உரிமை. இந்த நடவடிக்கையில் இந்தியா, தனக்கு உடன்பாடு இல்லை என்பதை மறைமுகமாகக்கூட தெரிவிக்கக் கூடாது. அப்படி தெரிவித்தால் காஷ்மீரில் பிரிவினைக்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அது தார்மிக ரீதியாக பலவீனப்படுத்திவிடும். தமிழ்நாட்டில் அண்மையில் தொடங்கியுள்ள இயக்கத்தின் பின்னணியில் இருப்பது விரக்தியடைந்த விடுதலைப்புலிகளின் மூளை; அவர்களே இதைத் தூண்டி விடுகிறார்கள். இந்த இயக்கத்தை தமிழ்நாட்டில் அனுமதிக்கவே கூடாது. 1991 ஆம் ஆண்டு முதல் 'இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதில்லை' என்ற கொள்கையை இந்தியாவில் ஆட்சிக்கு வந்தவர்கள் வெற்றிகரமாக அமுல்படுத்தி வந்துள்ளனர். இந்த சிறப்பான கொள்கையை கைவிட்டுவிடவே கூடாது"*

*விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலைகளைத் திணித்து, சொந்த மண்ணில் அகதிகளாக்கும் கொடுமையான சிங்களப் போரைக் கண்டு, பூரித்து, கூத்தாடி, 'போரை நிறுத்தி விடாதே' என்று எழுதுகிறது, 'இந்து' கூட்டம்.*

*கருநாடகத்திலிருந்து வெளிவரும் டெக்கான் ஹெரால்டு நாளேட்டில், அதன் செய்தியாளரான சென்னையில் இருக்கும் எஸ்.முராரி எனும் பார்ப்பனர் இப்படி எழுதியுள்ளார்.*

*"தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு. கருணாநிதி அனைத்துக் கட்சி கூட்டம் என்ற பெயரில் கூட்டியுள்ள கூட்டம், சுற்றி வளைக்கப் பட்டுள்ள விடுதலைப் புலிகளை விடுவிக்கும் செயல் திட்டத்துக்கான கூட்டமாகியுள்ளது. வடக்கில், புலிகளின் கடைசி கோட்டையான கிளிநொச்சியின் கதவைத் தட்டுவதற்கு, ராணுவம் நெருங்கிவிட்டது" - இப்படி குதூகலித்து எழுதும் பார்ப்பனர்,*

*இன்னும் மேலே போய் ஈழத்தில் நடப்பது இனப் படுகொலையே அல்ல என்று எழுதுகிறார், அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் தீர்மானத்தில் இனப் படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்தி யுள்ளதையே கேலி செய்கிறார்.*

*"அங்கே நடக்கும் சம்பவங்களை அனைத்துக் கட்சிக் கூட்டம் இனப் படுகொலை என்று விவரிக்கிறது"*

(The Resolution have described the happenings as 'genocide') *என்று எழுதுகிறார்.*

*தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த எழுச்சியை இந்த பார்ப்பனர் மன நோய் என்கிறார். அரைகுறைப் பார்வையோடு பார்க்கிறார்கள் என்றும் இலங்கையில் நடக்கும் எதார்த்தத்தை தெரியாதவர்கள் என்று திமிரோடு எழுதுகிறார்.*

(The whole hysteria in Tamil Nadu is based on a blinkered view)

*ஆக பார்ப்பனர்கள் -*

- **போரை நிறுத்தாதே என்கிறார்கள்.**
- **இலங்கை ராணுவம் வெற்றியை நோக்கி முன்னேறு கிறது என்று மகிழ்ச்சி கூத்தாடுகிறார்கள்.**
- **அங்கே நடப்பது இனப்படுகொலையே அல்ல என்கிறார்கள்.**
- **தமிழகத்தில் மூண்டுள்ள எழுச்சியை, மனநோய் என்கிறார்கள்.**

*பார்ப்பன முராரி - பார்ப்பன மாலினி பார்த்த சாரதிகள் இப்படி ஆரிய வெறியோடு நர்த்தனம் ஆடி, தமிழர்களின் வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதை தமிழின உணர்வாளர்கள் அடையாளம் காண வேண்டும்.*

*பார்ப்பான் திருந்தி விட்டான் என்று பேசுகிறவர் கள் இப்போதாவது விழித்துக் கொள்ள வேண்டும்.* +

**- புரட்சிப் பெரியார் முழக்கம் 06.11.2008**

## ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டத்தில் காங்கிரஸ் அடாவடி

### லோகு அய்யப்பன் உள்ளிட்ட 3 தோழர்கள் பொய் வழக்கில் கைது

புதுவையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக அமைதி வழியில் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தியவர்கள் மீது காங்கிரசார் புகுந்து வன்முறையில் ஈடுபட்டதைத்தொடர்ந்து பெரும் பதட்டம் உருவாகியுள்ளது. புதுவையில் அக்.31 அன்று முருகம்பாக்கம் பகுதியிலுள்ள தமிழ் அமைப்பைச் சார்ந்தவர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டத்தை காவல்துறையின் அனுமதியுடன் நடத்தினர். போராட்டம் நடக்க இருப்பதை அறிந்த இளைஞர் காங்கிரசைச் சார்ந்த பாண்டியன் என்ற நபர், உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த விடமாட்டோம் என்று பத்திரிகையில் அறிக்கைவிட்டதோடு, போராட்டம் நடத்தும் இடத்துக்கே வந்து, வன்முறையில் இறங்கினர். போராட்டத்தை ஆதரித்துப் பேசிக் கொண்டிருந்த தமிழ் தேசிய இயக்கத்தைச் சார்ந்த அழகிரியைத் தாக்கினர். காவல்துறை வேடிக்கை

**(3 ஆம் பக்கம்)**

**தலையங்கம்**

# பார்ப்பன பயங்கரவாதம்

குண்டுவெடிப்பு என்றாலே, உடனே இசுலாமியர்களை குற்றவாளிகளாக்கிடும் உளவியலை பார்ப்பனர்களும், ஊடகங்களும், சங்பரிவார்களும் கட்டமைப்பதில் வெற்றி பெற்றுள்ளனர் என்றே கூறலாம். இதில் உளவுத் துறையின் பங்கையும் குறைத்து மதிப்பிட முடியாது. மராட்டிய மாநிலம் நாசிக் மாவட்டத்தில் உள்ள மாலேகாவ்ன் எனும் ஊரில் தொடர்ந்து குண்டு வெடிப்புகள் நடந்து வருகின்றன. 2006 ஆம் ஆண்டில் இசுலாமியர் வாழும் பகுதிகளிலும், மசூதி கல்லறைப் பகுதிகளிலும் சைக்கிள்களில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 37 பேர் இறந்தார்கள். உடனே காவல்துறை இசுலாமிய மாணவர் அமைப்பான 'சிமி' அமைப்பைச் சார்ந்தவர்களைக் கைது செய்தது. இப்போது, கடந்த செப்.29 ஆம் தேதி மோட்டார் சைக்கிளில் வைத்த குண்டு வெடிப்பில் 6 பேர் இறந்துள்ளனர். 30 பேர் காயமடைந்தனர். ஆனால் இம்முறை குண்டு வைத்தது 'இந்து' பயங்கரவாத அமைப்பு என்பதை காவல்துறை கண்டறிந்துள்ளது.

சாத்வீ பூர்ண கேத்னானந்த் சிங் கிரி என்ற இந்து பெண் தீவிரவாதி (வயது 38) கைது செய்யப்பட்டுள்ளார். 18 ஆண்டு காலம் பா.ஜ.க. மாணவர் பிரிவான அகில இந்திய வித்யார்த்தி பரிஷத்திலும் அதைத் தொடர்ந்து விசுவ இந்து பரிஷத்திலும் பொறுப்பில் இருந்த இவர், இரு வருடம் முன்பு கன்னியாஸ்திரி ஆனார். மாலே காவ்னில் குண்டு வெடித்த அதே நேரத்தில் குஜராத்திலும் மொடாசா எனும் ஊரிலும் மோட்டார் சைக்கிள் குண்டு வெடித்து, 16 வயது சிறுவன் இறந்துள்ளான். 10 பேர் காயமடைந்துள்ளனர். இந்த குண்டு வெடிப்புக்கும், இந்த பயங்கரவாத கும்பலான சாத்வி குழுவினரே காரணமாக இருக்கலாம் என்று காவல்துறை கருதுகிறது. இந்த இரண்டு குண்டு வெடிப்புகளிலும் மிகவும் சக்தி வாய்ந்த 'ஆர்.டி.எக்ஸ்' வெடி மருந்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் குண்டு வெடிப்பில் தொடர்புடைய முன்னாள் ராணுவத்தினர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து தரை மட்டமாக்கிய பயங்கரவாதிகள், இதே சங்பரிவார் கூட்டம் தான். ஆனால், இவர்கள் எல்லாம் 'தேச பக்தர்களாக' பார்ப்பனர்களால் மகுடம் சூட்டப்படுகிறார்கள். 2006 இல் மகாராஷ்டிராவில் நாத்தெத் நகரில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த லட்சுமண் – ராஜ் கொண்டாவார் எனும் பொறியாளர் வீட்டில் குண்டு வெடித்ததில், அவரது மகனும், மற்றொரு ஆர்.எஸ்.எஸ்.காரரும் இறந்ததோடு, காயமடைந்த ஒருவர் தப்பி ஓடிவிட்டார். பிறகு கைது செய்யப்பட்டார். அனைவரும் பல்வேறு ஊர்களைச் சார்ந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். ஆகஸ்டு 2008 இல் கான்பூரில் குண்டு தயாரித்துக் கொண்டிருந்தபோது ராஜீவ் மிஸ்ரா, பூபேந்திர சோப்ரா என்ற இரண்டு ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் குண்டு வெடித்து இறந்தார்கள். (இத் தகவல்களை 'குமுதம்' கட்டுரையில் ஞாநி தொகுத்துத் தந்துள்ளார்)

தமிழ்நாட்டில் தென்காசியில் இந்து முன்னணி அலுவலகத்தில் குண்டு வெடித்தது. பிறகு குண்டு வைத்ததே ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தான் என்று காவல்துறை கண்டுபிடித்தது. முஸ்லீம்கள் மீது பழி போட்டு கலவரத்தை உருவாக்குவதே இதன் நோக்கம். ஈரோடு அருகே உள்ள சதுமுகை எனும் ஊரில் 2002 இல் இந்து முன்னணியினரே இந்து கடவுள் சிலைகளை உடைத்துவிட்டு, பெரியார் திராவிடர்கழகத்தினர் மீது காவல்துறையில் புகார் தந்தனர். விசாரணையில் இந்து முன்னணியைச் சார்ந்த இருவர் தான் இதற்குக் காரணம் என்று கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

ஆனால், இஸ்லாமிய மாணவர் அமைப்பான 'சிமி'யை பயங்கரவாத அமைப்பாக பார்ப்பன ஊடகங்களும், சங்பரிவார்களும், உளவு நிறுவனங்களும் சித்தரித்து, பல்வேறு குணடு வெடிப்பு வழக்குகளை 'சிமி' அமைப்பின் மீது போட்டு, கைது செய்து, சித்திரவதை செய்து வருகின்றனர். கைது செய்தவர்களை சித்திரவதை செய்து, ஒப்புதல் மூலம் வாங்கி, அதை ஒன்றையே ஆதாரமாக்கி குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 'டெகல்கா' வார ஏடு (ஆகஸ்ட் 23, 2008) இந்த உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கிறது. 'சிமி' தடை செய்யப்பட்டு விட்டது. ஆனால் ஆர்.எஸ்.எஸ். பஜ்ரங்தள் – விசுவ இந்து பரிஷத் அமைப்புகள் சுதந்திரமாக உலவி வருகின்றன. இவற்றுக்கு தடை போட வேண்டும் என்ற கோரிக்கைகள் கூட முன் வைக்கப்படுவதில்லை. தாயகத்தின் விடுதலைக்காகப் போராடும் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று சித்தரிக்கும் ஜெயலலிதா உள்ளிட்ட பார்ப்பன சக்திகள், இந்து பயங்கரவாதத்தை மட்டும் எதிர்ப்பதில்லை. பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் அவர்கள் சுதந்திரமாக செயல்பட அனுமதித்தவர், அப்போது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா தான். எத்தனை காலத்துக்குத்தான் உண்மைகளை மறைக்க முடியும். உண்மைகள் வெளிவரத் தொடங்கி விட்டன. பார்ப்பன பயங்கரவாத சக்திகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும். கடவுள் மதத்தின் பெயரால் சமுகத்தைக் கூறு போட்டு, ரத்த ஆறை ஓடவிடும் இந்த பயங்கரவாதிகள் தான் உண்மையான தேச விரோதிகள்.

# மக்களிடம் விளக்குவோம்

## (5)

**கேள்வி : இலங்கையில் போராடும் தமிழர்கள் – தமிழகத்திலிருந்து சென்றவர்கள் தானே; வேறு ஒரு நாட்டில் போய் அங்கே போராடுவது நியாயமா?**

பதில் : இது உண்மையல்ல; போராடும் தமிழர்கள் - ஈழத்தின் மண்ணின் மைந்தர்கள்; சிங்களர்கள் இலங்கைக்கு குடியேறுவதற்கு முன்பே, அந்நாட்டின் பூர்வீகக் குடிகள், சங்க இலக்கியங்களான அக நானூறு மற்றும் குறுந் தொகையில், தமிழ் ஈழத்தில், தமிழர்களின் வாழ்க்கையை விளக்கிடும் பாடல்கள் உண்டு.

எல்லாளன் என்ற தமிழ் மன்னன் - இலங்கை முழுவதையும், அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு தமிழர் - சிங்களர் இருவரையுமே 44 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான். (கி.மு.161-117) பின்னர் துட்டகைமுனு எனும் சிங்கள சிற்றரசன் போருக்கு வந்தபோது, எல்லாளன் படைகள் சிங்களப் படைகளை சிதறடித்தன. தந்திரமாக நேருக்கு நேர் தனியாகச் சமரிட இளைஞனான சிங்கள சிற்றரசன் அழைத்த போது, அதில் ஏமாந்த வயது முதிர்ந்த எல்லாளன், போரிட்டு தோற்றான். தனி மனிதன் தோல்வி - தமிழ் அரசின் தோல்வியாகியது. சிங்களர் வெற்றி பெற்றாலும் சில காலமே அவர்கள் ஆட்சி நீடித்தது. மீண்டும், பாண்டிய மன்னன் உதவியுடன் தமிழர் ஆட்சி தமிழ் ஈழத்தில் அமைந்தது. தமிழ் மன்னர்கள், தமிழர் பகுதியிலும், சிங்களர் சிங்களப் பகுதியிலும் ஆட்சி நடத்தினர். தமிழர் ஆட்சி, சிங்களர் ஆட்சிகள் தனித் தனியாக நடந்ததை அக்காலங்களில் வெளியிடப்பட்ட வரைபடங்களே சான்று கூறுகின்றன.

போர்த்துகீசியர்கள் 177 ஆண்டுகளும், தொடர்ந்து டச்சுக்காரர்கள் 112 ஆண்டுகளும், அதைத் தொடர்ந்து பிரிட்டிஷார்கள் 112 ஆண்டுகளும் இலங்கையை தங்கள் காலனிகளாக வைத்திருந்தனர். அப்போதும் தமிழ் ஈழப் பிரதேசம் தனியாகவே இருந்தது. சிங்களர் தமிழர் பிரதேசங்களை ஒன்றாக, தனது நிர்வாக வசதிக்காக இணைத்தது, பிரிட்டிஷ் ஆட்சி தான். இணைப்புக்கு முன் பிரிட்டிஷ் அரசு அனுப்பி வைத்த கோல்புரூக் மற்றும் ஜே.எப்.டிக்சன் என்ற அதிகாரிகள் தலைமையிலான குழு, தமிழர், சிங்களர் என்ற வெவ்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட மக்களாக வாழ்வதால், இரண்டையும் இணைக்க வேண்டாம் என்றே பிரிட்டிஷ் அரசுக்கு பரிந்துரை செய்தனர். அதையும் மீறி பிரிட்டிஷ் ஆட்சி, தனது நிர்வாக வசதியை மட்டுமே கருத்தில் கொண்டு ஒரே நிர்வாகத்தின் கீழ் இணைத்தது. 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது பெரும்பான்மையினராக விளங்கிய சிங்களர்களிடம் அதிகாரத்தைக் கொடுத்து விட்டு வெளியேறி விட்டது.

எனவே, இலங்கையில் இப்போது போராடும் தமிழர்கள், தங்களின் பூர்வீகப் பிரதேசத்துக்காகவே போராடுகிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு தோட்டத் தொழிலாளர்களாக சென்ற தமிழர்கள் இவர்கள் அல்ல. அவர்கள் கொழும்பில் தேயிலைத் தோட்டங்களில் கூலிகளாக வேலை செய்வோர். அவர்கள் மலையகத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இப்போது போராட்டம் நடத்துவது மலையகத் தமிழர்கள் அல்ல; ஈழத்தின் பூர்வீகக் குடிகளான ஈழத் தமிழர்கள்.

## (6)

**கேள்வி : இலங்கையோ மிகச் சிறிய தீவு. இதில் நாட்டை கூறுபோட முடியுமா? ஒன்றுபட்டு வாழக் கூடாதா?**

பதில் : இந்தக் கேள்வியில் நியாயம் உள்ளதாகத் தோன்றலாம்? ஆனால், உண்மை வரலாறுகளை அறியும் போது, தமிழர்கள் தங்களின் தாயக உரிமைக்குப் போராடுவதன் நியாயம் புரியும்.

தொடக்கத்தில் தமிழர் தலைவர்கள், சம உரிமையுடன் ஒரே நேரத்தில் சிங்களர்களுடன் சேர்ந்து வாழவே விரும்பினார்கள். அதிகாரப் பகிர்வு பற்றி கருத்து கேட்க வந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் குழுவிடம் (சோல்பரி ஆணைக்குழு) 1945 இல் சேர்ந்து வாழும் கருத்தையே தமிழர்கள் முன் வைத்தனர். 1970 ஆம் ஆண்டு வரை தமிழர்கள் தங்களின் பூர்வீகத் தாயகத்தைப் பிரித்துக் கொள்ளும் கோரிக்கையை முன் வைக்கவே இல்லை. இலங்கைக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் ஒத்துழைப்பு தந்தனர். இந்தியாவில் அரசியல் நிர்ணய சபையை ஜின்னா புறக்கணித்தது போல் புறக்கணிக்கவில்லை.

இடையில், தமிழர்களுக்கு எதிரான எவ்வளவோ நடவடிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் நடத்தி முடித்தனர். சுதந்திரம் கிடைத்த உடனேயே மலையகத் தமிழர்களின் குடி உரிமைகளைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கினர். அப்போது தான் ஈழத் தமிழரான செல்வநாயகம், தமிழரசு கட்சியைத் தொடங்கி, மலையகத் தமிழர் குடி உரிமைப் பறிப்பைக் கண்டித்தார். 1956 இல் தமிழைப் புறக்கணித்து விட்டு, சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று சட்டம் இயற்றிக் கொண்டார்கள். தமிழ் மட்டுமே படித்திருந்த தமிழர் வேலை வாய்ப்புகள் பறிக்கப் பட்டன. உரிமைக்குக் குரல் கொடுத்த தமிழர்களை சிங்களர்கள் வன்முறையால் எதிர்கொண்டனர். இலங்கை - சிங்களருக்கான ஒற்றையாட்சியாக அறிவிக்கப்பட்டு, பவுத்தம் தான் அரசு மதம் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழர் தலைவர் செல்வாவுடன், தமிழர்களுக்கு சில உரிமைகள் வழங்க ஒப்பந்தம் செய்து கொண்ட சிங்கள பிரதமர் சாலமன் பண்டார நாயகாவை 1959-இல் சிங்கள வெறியர்கள் சுட்டுக் கொன்று ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்தனர். 1960-ல் நீதிமன்றத்தில் சிங்களம் மட்டுமே பயன்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. 1972 இல் உருவான புதிய அரசியல் சட்டம், தமிழர் உரிமைகளை முழுமையாகப் புறக்கணித்தது. அப்போதுதான், இனியும் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலைக்கு தமிழர்கள் உந்தப்பட்டனர். அரசியல் சட்டத்தைத் தீயிட்டுப் பொசுக்கி தமிழர்கள் ஏற்க மறுத்தனர். ஈழத் தமிழர்களின் தலைவர் செல்வா, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தூக்கி எறிந்து விட்டு, தாம் ஏற்கனவே போட்டியிட்டு வென்ற காங்கேசன் துறைமுக தொகுதியில் தமிழர்களுக்கு இனி தனித் தாயகமே வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையை முன் வைத்து களத்தில் நின்று பேராதரவுடன் வெற்றி வாகை சூடினார்.

1976 இல் தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி வட்டுக்கோட்டையில் கூடி தமிழர்களுக்கு தனித்தேசம் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியது. 1977 இல் செல்வா மறைந்தார். தொடர்ந்து தமிழர் விடுதலை கூட்டணி அதே தனி நாடு கோரும் கோரிக்கையை முன் வைத்து தமிழர் பகுதியில் போட்டியிட்டு, 19 தொகுதிகளில் 18 தொகுதிகளைக் கைப்பற்றியது. தமிழர்கள் தங்களின் ஒருமித்த முடிவாக தங்களின் தாயகத்தை உருவாக்கக் கோரினர். புத்த மதத்தைச் சார்ந்த சிங்களர் மட்டுமே - அந்நாட்டின் பிரதமராக வர முடியும் என்று, இலங்கையில் சட்டம் இயற்றப்பட்டு விட்டது. அரசு மதமும் புத்த மதம் என்றாகி விட்டது. இப்படி தமிழர் மொழியையோ, தமிழர் உரிமைகளையோ அங்கீகரிக்க மறுக்கும் ஆட்சியின் கீழ் ஏற்கனவே தனி ஆட்சி நடத்திய மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் எப்படி அடிமைகளாக வாழ முடியும்? (தொடரும்)

# களப்பணிகளில் கழகச் செயல்வீரர்கள்

கோவையில் 25.10.08 ஞாயிறு மாலை சீமான், வைகோ, கண்ணப்பன், அமீர் ஆகியோரை விடுதலை செய்யக் கோரி கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம்



நடைபெற்றது. காவல்துறை அனுமதி மறுத்த போதும், 70க்கும் மேற்பட்ட தோழர்கள் கொட்டும் மழையிலும் உணர்வோடு கலந்து கொண்டனர். அனைத்து தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாநகர தலைவர் ம.ரே.இராசகுமார், செயலாளர் வே.கோபால், அமைப்பாளர் சாஜித், மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி பிரகாசு, சூலூர் வீரமணி, பன்னீர் செல்வம், தமிழ்நாடு மாணவர் கழக; தோழர் பன்னீர்செல்வம், பகுதி செயலாளர்கள் சத்யா, அண்ணாமலை, மாணிக்கம், பூங்கா பாண்டியன், ஈசுவரன், அலுவலக பொறுப்பாளர் சா. கதிரவன், உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் பங்கேற்றனர். மேலும் கழக வழக்கறிஞர்கள் பாலசந்தர், சம்பத் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

### கோபியில்

தமிழின உணர்வாளர்களான தோழர்கள் வைகோ, சீமான், கண்ணப்பன், அமீர் ஆகியோரை கைது செய்யத் தூண்டிய தமிழின துரோகிகள் ஜெயலலிதா, துக்ளக் சோ, சுப்பிரமணிய சாமி, இந்துராம், காங்கிரஸ், இராம கோபாலன்,



எச்.இராஜா, இல.கணேசன் ஆகியோரைக் கண்டித்து 25.10.08 மாலை 4 மணிக்கு பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக மாவட்ட செயலாளர் இராம.இளங்கோவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முதலில் காவல்துறை ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்தது. இருப்பினும் தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ததால் காவல் துறை கைது செய்து கோபியிலுள்ள கே.எம்.எஸ். திருமண மண்டபத்தில் வைத்தது. பின்னர் இரவு 7 மணிக்கு விடுதலை செய்தனர்.

கோபி பேருந்து நிலையம் அருகே நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்த 7 தோழர்கள் அம்பேத்கர் தலைமையில் கலந்து கொண்டனர். 24 தோழர்கள் கைதாகி விடுதலையானார்கள்.

### சத்திய மங்கலத்தில்

ஈழத் தமிழர்களை கொன்று குவிக்கும் சிங்கள அரசைக் கண்டித்தும், சிங்கள இராணுவத்திற்கு உதவும் இந்திய அரசைக் கண்டித்தும், ஈரோடு




மாவட்டம் சத்திய மங்கலத்தில் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக உண்ணாவிரதப் போராட்டம் 18.10.08 அன்று நடைபெற்றது. இதில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக மாவட்ட பொருளாளர் இராம. இளங்கோவன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

மாவட்ட அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி, சத்தி நகர அமைப்பாளர் கோகுல் இராசு, சத்தி ஒன்றிய செயலாளர் இராசேந்திரன், கெம்பநாயக்கன் பாளையம் செயலாளர் இறையிலன் மூர்த்தி, சத்தி நகர செயலாளர் அசோகன் போன்ற பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும், மேலும் பல அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் கலந்து கொண்டு கண்டனக் குரல் எழுப்பினர். மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் மட்டும் 600-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

### சேவூர்

கிளாகுளத்தில் பெரியார் படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கிளாகுளம் பிரிவில் பெயர் பலகைக்கு மாலை அணிவித்து சு. கனகராசு, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்.

சாலைப் பாளையம் நடுநிலைப் பள்ளியிலுள்ள குழந்தைகளிடத்தில் பெரியாரைப் பற்றி 15 நிமிடம்



பள்ளியின் தலைமை ஆசிரியர் உரையாற்றினார். பின் தோழர் கனகராசுவும் உரையாற்றினார். அதன் பின் பள்ளிக் குழந்தைகளுக்கு கழகத்தின் சார்பில் இனிப்பு வழங்கப்பட்டது.

பின் கிளாகுளம் முதல் சேவூர் வரை வழி நெடுக மக்களுக்கு பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய துண்டறிக்கைகளை கழகத் தோழர்கள் வழங்கினர்.

சேவூர் கைகாட்டியிலுள்ள பெரியார் பெயர் பலகைக்கு மாலை அணிவித்து கழகக் கொடியினை அவினாசி ஒன்றிய அமைப்பாளர் அவினாசி ஏற்றி வைத்தார்.

பானியக்காட்டுப்புதூரில் பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது

ஒச்சாம்பாளையம் தொடக்கப்பள்ளியிலுள்ள குழந்தைகளுக்கு கழகத் தோழர்கள் இனிப்பு வழங்கினர். அங்குள்ள ஆசிரியர்கள் கழகத் தோழர்களை வெகுவாகப் பாராட்டினர்.

கிளாகுளம் செயலாளர் கு.செந்தில்குமார், அவினாசி ஒன்றிய அமைப்பாளர் சோமு, கிளை அமைப்பாளர் இரா. கோபால், செயலாளர் சு. கனகராசு, கிளாகுளம் கு. ராசகுமார், கு. செல்வம், பாளியக்காடு புதூர் இராசகோபால், தமிழ் விடுதலை கட்சி மூர்த்தி, கிளாகுளம் முருகேஷ், சத்தி ஒன்றியச் செயலாளர் இராசேந்திரன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### சீர்காழியில்

ஈழத்தின் அவலக் காட்சிகளை சீர்காழியில் கிராமம் கிராமமாக கழகம் ஒளிபரப்புகிறது

ஈழத்தில், தமிழர்கள் மீது, சிங்கள ராணுவம் நடத்தி வரும் ராணுவ வெறியாட்டத்தையும், பல லட்சம் மக்கள் அகதிகளாக வெட்ட வெளிகளில் உழலும் அவலங்களையும் விளக்கிடும் காட்சிகளை வீடியோ குறுந்தகடு வழியாக நாகை மாவட்ட கழகத் தோழர்கள் கிராமம் கிராமமாக ஒளி பரப்பி வருகிறார்கள். கடந்த 24 ஆம் தேதி சீர்காழியில் இரண்டு இடங்களிலும் கொள்ளிடத்திலும் ஒளிபரப்பப்பட்டன. பொது மக்கள் பெருமளவில் திரண்டு, ஈழத்தில் தமிழர்கள் படும் துயரைக் கண்டு கண்ணீர் விட்டு உணர்ச்சி பெறுகிறார்கள்.

மாவட்ட அமைப்பாளர் இளையராசா, மயிலாடுதுறை நகர செயலாளர் சங்கர், கொள்ளிட ஒன்றிய தலைவர் நந்த ராசேந்திரன், நகர தலைவர் பெரியார் செல்வம், நகர அமைப்பாளர் ரமேசு, ஒன்றிய துணை செயலாளர் ராமமூர்த்தி, அன்பு, முருகன், நகர துணை செயலாளர் சந்தோஜ, அருண், ரகுநாத், ஆனந்தபாபு, தனவேந்திரன், சரவணன், தினேஷ்குமார், இன்பசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக நகர செயலாளர் பா. பிரபாகரன் நன்றி கூறினார்.

இயக்குநர் சீமான், அமீர் கைதைக் கண்டித்து, சீர்காழியில் கழக சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துக் கொண்டிருந்தது. செய்தியறிந்த பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், கழகத் தலைவர் லோகு அய்யப்பன் தலைமையில் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து அனுமதி பெற்று நிகழும் உண்ணாவிரதத்தில் கலவரம் செய்வதைக் கண்டித்தனர். விடுதலை சிறுத்தைகள் அமைப்பினரும் ஏராளமாகத் திரண்டனர். காவல்துறை, கழகத் தோழர்கள், விடுதலை சிறுத்தைகள் மற்றும் தமிழ் ஈழ ஆதரவாளர்கள் 80 பேரை கைது செய்தது. புதுவையில் காவல் துறையின் முறைகேடுகளை எதிர்த்து, லோகு அய்யப்பன், அம்பலப்படுத்தி வருவதாலும், தேங்காய் திட்டு துறைமுகத் திட்டத்தினால், மீனவர் வாழ்வுரிமை பாதிக்கப்படுவதால், மக்களோடு இணைந்து போராட்டத்தை நடத்தி வருவதாலும், புதுவை காவல்துறை லோகு அய்யப்பனை பழிவாங்கும் சந்தர்ப்பதை எதிர்நோக்கி இருந்தது.

வெங்கடசாமி என்ற காவல்துறை ஆய்வாளர், லோகு அய்யப்பனை தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்திப் பேசியதைத் தொடர்ந்து, போராட்டத்தில் பங்கேற்க வந்த அனைவரும் கொதித்தெழுந்தனர். கைது செய்யப்பட்ட 80 தோழர்களில் லோகு அய்யப்பன் அழகிரி, ம.தி.மு.க.வைச் சார்ந்த சந்திரசேகர் ஆகியோரை தனிமைப்படுத்தி, பிணையில் வர முடியாத பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து, ஏனைய தோழர்கள் மீது பிணையில் வரக் கூடிய வழக்குகளைப் பதிவு செய்தனர். இதற்கு தோழர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, தங்களையும் பிணையில் வர முடியாத வழக்குகளில் கைது செய் என்று கூறி, காவல் நிலையத்தை விட்டு வெளியேற மறுத்தனர். இரவு முழுதும் பதட்டம் நீடித்தது. திட்டமிட்டபடி காவல்துறை 3 தோழர்கள் மீது மட்டும், பிணையில் வர முடியாத வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. காங்கிரஸ் கட்சியினரின் இந்த ஆணவம், தமிழின உணர்வாளர்களை கொதிப்படையச் செய்துள்ளது. தோழர்கள் லோகு. அய்யப்பன், அழகிரி, சந்திரசேகர் ஆகியோர் புதுவை சிறையில் அடைக்கப்பட்டனர். 77 தோழர்கள் பிணையில் நவம்பர் 3 ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலையான தோழர்களை வரவேற்க பெரும் கூட்டம் கூடியது. 500க்கும் மேற்பட்ட தோழர்கள் அங்கிருந்து ஊர்வலமாக ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், துரோக காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராகவும் முழக்கமிட்டு வந்தனர். பெரியார், அம்பேத்கர், சிங்காரவேலர், சிலைக்கு மாலை அணிவித்தனர். மாவட்ட காவல்துறை அதிகாரியான சிவதாசு என்ற மலையாள அதிகாரி தேங்காய் திட்டு துறைமுகத் திட்டத்துக்கு கழகம் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால் கழகத்தைப் பழிவாங்கத் துடிக்கிறார் என்று புதுவை கழகத் தோழர்கள் தெரிவிக்கிறார்கள்.

**– நமது செய்தியாளர்**

REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ‘ஜெ’யின் மதமாற்றத் தடை சட்டத்தை – எதிர்க்காதது ஏன்?

## திரிபுவாத திம்மன்கள் – யார்? (8)

ஈரோடு மாவட்டம் சதுமுகையில், பெரியார் திராவிடர் கழகத்தினர் இந்து முன்னணியின் பொய் வழக்கை எதிர்கொண்டதை, திராவிடர் கழகத்தினர் எதிர் கொண்டதாக ‘விடுதலை’ தலையங்கம் தீட்டியதை எடுத்துக் காட்டியிருந்தோம். ‘இந்து’ நாளேடு முதலில் தவறாக செய்தி வெளியிட்டு, பிறகு திருத்தம் வெளியிட்டதையும், ஆதாரத்துடன் கடந்த இதழில் தான் சுட்டிக் காட்டியிருந்தோம். கடந்த வாரம் ‘குமுதம்’ வார ஏட்டில் (5.11.2008) ஞாநி எழுதிய ‘பயங்கரவாதத்தின் நிறம் காவி’ என்ற கட்டுரையிலும் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

“2002 இல் ஈரோடு மாவட்டத்தில் சதுமுகை என்ற கிராமத்தில் அம்மன், விநாயகர், முனீஸ்வரன் சிலைகள், கோயில்கள் நாசப்படுத்தப்பட்டன. இதைச் செய்தது **பெரியார் திராவிடர் கழகத்தினர்** என்று காவல்துறையில் இந்து முன்னணியினர் அதிகாரபூர்வமாகப் புகார் செய்தனர். கடைசியில் துப்பு துலக்கியதில் நாசவேலை செய்ததோ இந்து முன்னணியைச் சேர்ந்த செல்வகுமார், மஞ்சுநாதன் என்ற இருவர்தான் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.”

இவ்வளவுக்கும் பிறகு, கடந்த 29 ஆம் தேதி ‘விடுதலை’யில் வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் ஏற்கனவே எழுதிய பொய்யையே மீண்டும் எழுதியிருக்கிறார். வீரமணியின் முதல் பக்க அறிக்கை இவ்வாறு கூறுகிறது.

“தமிழ்நாட்டில் சத்தியமங்கலத்தையடுத்த சதுமுகையில் இந்துமுன்னணியினர் சாமி சிலைகளுக்கு செருப்பு மாலை போட்டதைக் குறிப்பிட்டு, **“திராவிடர் கழகத்தைச்** சார்ந்தவர்கள் மீது பழியைப் போடுவதுதான் அவர்களின் நோக்கம் என்ற குட்டும் உடைபட்டது” என்று எழுதி, ஏதோ ஆதாரத்துடன் எழுதியதாக காட்டிக் கொள்வதற்காக ‘தி இந்து’ (8.2.2002) என்று தேதியையும் வீரமணி குறிப்பிட்டுள்ளார். பிப்.18 ஆம் தேதி வெளியிட்ட அந்த செய்திக்கு மார்ச் 9 ஆம் தேதி ‘இந்து’ திருத்தம் வெளியிட்டு, தவறுக்கு வருத்தம் தெரிவித்ததை நாம் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியும், ‘இந்து’வின் தவறான செய்தியையே தனக்கு சாதகமாக்கிக் கொண்டு எழுதுகிறார் வீரமணி. ‘இந்து’ ஏடு மார்ச் 9–ல் வெளியிட்ட திருத்தம் இதுதான்:

“பிப்.18 ஆம் தேதி, நாங்கள் வெளியிட்ட இரண்டு இந்து முன்னணியினர் கைது என்ற செய்தி தொடர்பாக, விடுதலை இராசேந்திரன் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

“கடவுள் சிலைகளை உடைத்து, பழியை பெரியார் திராவிடர்கழகத்தினர் மீது போட்டனர். அந்த பொய் வழக்கில் பெரியார் திராவிடர் கழகத்தினர் கைது செய்யப்பட்டனர். பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது, பெரியார் திராவிடர் கழகத்தினர் மீது தான். (திராவிடர் கழகத்தினர் மீது அல்ல) என்பதற்கான ஆதாரமாக காவல்துறை முதல் தகவல் அறிக்கையை இணைத்து அனுப்பியுள்ளோம். சத்திய மங்கலம் பகுதியில், மதவெறி சக்திகளுக்கு எதிராக களத்தில் நிற்கும் ஒரே அமைப்பு – தந்தை பெரியார் திராவிடர் கழகம் மட்டுமே” என்று விடுதலை இராசேந்திரன் எழுதியுள்ளார். **தவறான செய்தி வெளியிட்டமைக்கு வருந்துகிறோம்”**

– இது ‘இந்து’ வெளியிட்ட வருத்தம். இவ்வளவுக்குப் பிறகு, கி.வீரமணி, பொய்யை திரும்பத் திரும்பச் சொல்லி, உண்மையாக்கிவிடலாம் என்ற ‘கோயபல்ஸ்’ தந்திரத்தையே பின்பற்றி வருகிறார். ‘அறிவு நாணயம்’ என்ற வார்த்தையை வீரமணி அடிக்கடி பயன்படுத்துவது வாடிக்கை. ‘அறிவு நாணயம்’ பற்றி அடுத்தவர்களுக்கு உபதேசம் செய்கிறவர்கள், தங்களிடம் அதை பரிசோதித்துப் பார்த்துக்கொள்வது நல்லது. இவ்வளவு கீழான நிலைக்கு இறங்கி, இல்லாத பெருமையைப் பொய்யாக சூட்டிக் கொண்டு, தங்களுக்கு தாங்களே ‘சபாஷ்’ போட்டுக் கொள்ள வேண்டிய நிலைக்கு பெரியார் உருவாக்கிய இயக்கம் வந்து விட்டதுதான் வேதனை!

திராவிடர் கழகத்தில் தன்மானமுள்ள தொண்டர்கள் இதை எல்லாம் இனியும் சகித்துக் கொண்டு, தமிழர் தலைவர் புகழ் பாடிக் கொண்டிருக்கப் போகிறார்களா என்பதை, அவர்களின் சிந்தனைக்கே விட்டுவிடலாம். வேதனை என்னவென்றால், இப்படி பொய்யையும், புரட்டையும், கூச்சமின்றி பரப்பி வருகிறவர்கள், பெரியாரின் ‘குடிஅரசு’ தொகுதிகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டால், பெரியார் கருத்துகளை சிதைத்து விடுவார்கள் என்று கூறுவது தான்.

பார்ப்பன ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, அவருக்கு சமூகநீதி காத்த வீராங்கனை பட்டம் தந்து, அவரைப் பாராட்டி, இன்று கலைஞருக்கு புகழாரம் சூட்டுவதுபோல், அப்போதும் நாள்தோறும் புகழாரம் சூட்டி வந்த கி.வீரமணி, ஜெயலலிதாவின் பார்ப்பன இந்துத்துவா செயல்பாடுகளுக்கு எல்லாம் தலையாட்டி, பெரியார் கொள்கைக்கு பெரும் துரோகம் செய்ததை நாடு மறந்துவிடவில்லை. பார்ப்பன சங்கராச்சாரியின் ஆதரவுடன், ஜெயலலிதா மதமாற்றச் சட்டம் ஒன்றை கொண்டு வந்தபோது தமிழகமே கொதித்தது. கடற்கரையில் கூட்டம் போட்டு, காஞ்சி ஜெயேந்திரன் என்ற முன்னாள் சங்கராச்சாரி, ஜெயலலிதாவைப் பாராட்டினார். பா.ஜ.க., இந்து முன்னணிகள் ஜெயலலிதாவுக்கு புகழாரம் சூட்டினர். அக்காலகட்டத்தில், ஜெயலலிதாவின் இந்த ‘இந்துத்துவ ஆதரவை எதிர்த்து களத்தில் நிற்க வேண்டிய பெரியார் இயக்கம் என்ன செய்தது? ஒதுங்கி நின்றது.

திராவிடர் கழகத்தின் மாவட்டக் கமிட்டிகளைக் கூட்டி, அக் கூட்டத்தில் கட்சியின் பிரச்சார செயலாளராக இருந்த துரை சக்கரவர்த்தி, மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்தே பேசினார். கன்யாகுமரி மாவட்டத்தில் மண்டைக் காட்டில் இந்து முன்னணியினர் மதக் கலவரம் நடத்திய போது , அது பற்றி விசாரிக்க நீதிபதி வேணுகோபால் தலைமையில் அன்றைய எம்.ஜி.ஆர். ஆட்சி விசாரணைக் குழு ஒன்றை அமைத்தது. அந்த விசாரணைக்குழு தந்த பரிந்துரைதான் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதாகும். ஜெயலலிதா, இந்த சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு இந்தப் பரிந்துரையைத் தான் காரணமாகக் கூறினார். மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்து அப்போது நீதிபதி வேணுகோபால் எழுதிய கட்டுரையை ‘விடுதலை’ ஏடு வெளியிட்டு பூரித்தது. ஜெயலலிதா மனம் புண்பட்டு விடுமே என்பதால் இந்த ‘இந்துத்துவா’ நடவடிக்கையை கூட பச்சைக் கொடி காட்டி, கொள்கை துரோகத்தை இழைத்தவர் தான் வீரமணி.

‘இந்துத்துவா’வின் மறுவடிவமான இதே ஜெயலலிதாவை, மதச்சார்பற்ற அணியின் தலைவராக, தலை மீது தூக்கி வைத்து ஆடியவர் வீரமணி என்பதை தமிழகம் மறந்துவிடவில்லை.

1996–98 இல் தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், ஈரோடு அருகே உள்ள பண்ணாரி மாரியம்மன் கோயிலில் தீ மிதித்தார் என்றவுடன், முதல்வர் கலைஞர் அதை காட்டுமிராண்டித்தனம் என்று கூறி, சொந்தக் கட்சிக் காரரையே கண்டித்தார். உடனே பார்ப்பன ஜெயலலிதா, கலைஞர் இந்துக்களைப் புண்படுத்தி விட்டார், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஆவேசமாக அறிக்கை வெளியிடவே, ஜெயலலிதாவைக் கண்டித்து, அம்பேத்கர் அமைப்புகளும், பா.ம.க.வும், தேவேந்தர குல வேளாளர் கூட்டமைப்பும் அறிக்கைகள் வெளியிட்டன. வீரமணி, பெரியார் கொள்கைத் தொடர்பான இப்பிரச்சினையில், ஜெயலலிதாவைக் கண்டிக்க முன் வராமல், வாய்மூடி அமைதி காத்தது பெரியார் கொள்கைக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமேயாகும்!

இந்தியாவில், பா.ஜ.க.வின் ஆட்சிக்கு மீண்டும் வழி வகுத்துவிடக் கூடாது என்று இப்போது அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார் வீரமணி. ஆனால் வாஜ்பாய் பிரதமராக வந்தவுடன், அவர் ‘விடுதலை’யில் வெளியிட்ட அறிக்கையில் பா.ஜ.க. வினர் மீதான சந்தேகப் பார்வை தற்காலிகமாக நீங்கியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

“பி.ஜே.பி.யின் மீது இருந்த சந்தேகப் பார்வை தற்காலிகமாக விலகியுள்ளது என்றாலும், இந்தப் போக்கினை விரிவாக்க அது முயல வேண்டும்” – விடுதலை (20.3.98)

நல்ல பாம்பின் ஆபத்து, தற்காலிகமாக நீங்கியுள்ளது என்றாலும், அந்த விஷமுள்ள பாம்பு தன்னை திருத்திக் கொள்ள முன் வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பது போன்றதே, மேற்குறிப்பிட்ட வீரமணியின் அறிக்கையாகும். பெரியார் கொள்கையில் வளர்க்கப்பட்ட எந்த ஒருவரும் இப்படி ஒரு கருத்தை முன் வைப்பார்களா? ஆட்சி அதிகாரத்தில் வந்து அமருவோர் யாராக இருந்தாலும், அது பா.ஜ.க.வாக இருந்தாலும், பார்ப்பனராக இருந்தாலும் உடனே, வீரமணியின் ஆதரவுப் பாசம் மேலோங்கிவிடும்.


அறக்கட்டளைகளையும், வர்த்தக கல்வி நிறுவனங்களையும் நடத்திக் கொண்டு, அதற்கே முன்னுரிமை தந்து கொண்டிருப்பவர்கள், மத்திய அரசை எதிர்க்க எப்படி முன் வருவார்கள்? டெல்லியில் பெரியார் மய்யம் இரண்டு இடங்களில் இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த மய்யங்களில் இப்போது பெரியார் கொள்கை பரப்பும் நிகழ்ச்சிகள் ஏதாவது நடக்கிறதா? பெரியார் இந்திய தேசியப் பார்ப்பனியத்தையும், பார்ப்பன ஆட்சியையும் எதிர்த்துப் போர்ச் சங்கு ஊதிய தலைவர், அந்தத் தலைவர் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்று உரிமை கோருகிறவர்கள் என்ன செய்கிறார்கள்?

பெரியார் உருவாக்கிய திராவிடர் கழகத்தையே அறக்கட்டளையாகப் பதிவு செய்து கொண்டு, தொண்டர்களிடம் ஏதோ, பெரியார் கொள்கைகளை முன்னெடுக்கும் புரட்சிகர இயக்கமாக பொய் பரப்பி வருகிறார்கள். திராவிடர் கழகத்தை உருவாக்கிய பெரியார் அதைப் பதிவு கூட செய்யவில்லை. ஆனால், வீரமணி அறக்கட்டளையாக்கி விட்டார். திராவிடர் கழகம் அறக்கட்டளையாகிவிட்டதா என்று ஆச்சரியப்படும் தோழர்கள், ‘முரசொலி’ (அக்.30) நாளேட்டைப் பார்த்தால் உண்மை புரியும். திராவிடர் கழக அறக்கட்டளை சார்பில் கி.வீரமணி, தமிழக முதல்வரிடம் ஈழத் தமிழர் நிவாரண நிதி வழங்கியுள்ள செய்தி அதில் பதிவாகியுள்ளது.

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

## கழக எதிர்ப்பால் அவினாசி ஆர்.எஸ்.எஸ். ஊர்வலம் தடை

அவினாசி நகரத்தில், 12.10.2008 ஆர்.எஸ்.எஸ். ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தப் போவதை அறிந்து பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு, அதன் விளைவால் அந்த ஊர்வலத்திற்கு தடை விதிக்கப்பட்டது.





ஊர்வலச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் கிளாகுளம் செயலாளரும், அவினாசி ஒன்றிய அமைப்பாளருமான செந்தில்குமார் மூலம் ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்தை தடை செய்யுங்கள். இது ஒரு வன்முறை இயக்கம். இந்த ஊர்வலம் நடந்தால், இப் பகுதியில் மதக்கலவரம் உருவாகிவிடும். பொது மக்களின் நலன் கருதி இதனைக் காவல்துறை தடை செய்ய வேண்டும். இல்லையெனில் எங்களது தலைமைக் கழகத்தின் அனுமதி பெற்று, அதே நாளில் எதிர் ஊர்வலம் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக நடத்துவோம் என ஒரு விண்ணப்பத்தை அவினாசி காவல் நிலையத்தில் கழக சார்பில் கொடுக்கப்பட்டது. அத்துடன் ‘ஆர்.எஸ்.எஸ். அடையாளம் காண்பீர்’ என்ற பெயரில் அது குறித்த செய்திகளடங்கிய சுவரொட்டி அவினாசி நகரம், ஒன்றியம் முழுவதும் 10 ஆம் தேதி இரவு ஒட்டப்பட்டது. அது அவினாசிமுழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அத்துடன் மாநில ஒருங்கிணைப்பாளர் அங்ககுமார் மூலம் 19.10.08 அன்று ஊர்வலம், பொதுக் கூட்டம் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக நடத்த காவல்துறையில் அனுமதி கேட்டு ஒரு விண்ணப்பம் கொடுக்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 6th October 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 நவம்பர் 13, 2008 புரட்சி 7 முழக்கம் 46 விலை : ரூ.2.50


### உண்மைகள் வெளியே வருகின்றன

## இந்தியா போரை நிறுத்தச் சொல்லவில்லை

போரை நிறுத்துமாறு எந்தக் கோரிக்கையும் இந்தியா, இலங்கையிடம் வைக்கவில்லை. அத்துடன் கடல் பகுதியில் சிங்கள கப்பல் படைக்கு உளவு வேலை பார்த்து, விடுதலைப் புலிகள் படகுகளையும், கப்பல்களையும் அழிப்பதற்கு உதவி வருகிறது என்ற செய்திகள் வெளி வந்துள்ளன.

தமிழ்நாட்டில் - இலங்கை அரசின் தமிழினப் படுகொலையை ஆதரிப்பதோடு, இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் நேரடி தொடர்பு கொண்டு, அவரின் ஊதுகுழலாகவும் இயங்கி வருகிறது, ‘இந்து’ நாளேடு. அந்த நாளேடு நடத்தும் மாதம் இருமுறை ஆங்கில ஏடு ‘பிரன்ட் லைன்’, இப்போது வெளி வந்துள்ள அந்த ஏட்டில் (நவம். 21, 2008) அண்மையில் ராஜ பக்சேயின் தூதராக அவரது சகோதரர் பசில் ராஜ பக்சே டெல்லியில் மன்மோகன் சிங்கை சந்தித்தது பற்றியும், சென்னையில் முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டம் தொடர்பாக, மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் இலங்கைக்கு இந்தியா செய்து வரும் ராணுவ உதவிகள் பற்றியும் பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அதன் விவரம்:

தனது சிறப்பு தூதரை டெல்லிக்கு அனுப்பியமைக்காக, ராஜபக்சேவுக்கு இந்தியா மிகுந்த பாராட்டுகளைத் தெரிவித்து, மகிழ்ச்சி அடைந்துள்ளது. சிறிலங்காவின் 13வது சட்டத் திருத்தத்தின்படி தமிழர் பகுதிகளுக்கு சில கூடுதல் அதிகாரங்களை வழங்கலாம் என்ற யோசனையை இந்தியா பசில் ராஜபக்சேயிடம் முன் வைத்தது.

வடக்குப் பகுதியில் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள ராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு, இந்தியா இதுவரை எந்த திட்டவட்டமான கோரிக்கையையும், இலங்கையிடம் முன் வைக்கவில்லை என்றே, சிறீலங்கா பிரச்சினையைக் கவனித்து வருவோர் கூறுகின்றனர். உண்மையில், கொழும்பில் அக்டோபர் இரண்டாவது வாரத்தில் பேட்டி அளித்த பசில் ராஜபக்சே, “விடுதலைப் புலிகளை முற்றாக நசுக்குவதற்கு, இந்தியா எவ்வளவு அதிகம் உதவ முடியுமோ, அந்த அளவு உதவிகளை செய்து வருகிறது” என்று குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் 800 இலங்கை ராணுவத்தினருக்கு காடுகளில் போராடுவது பற்றியும், போராளிகளை எதிர்கொள்வது பற்றியும் இந்தியா பயிற்சிகளை அளித்து வருகிறது. இந்திய வெளியுறவு அமைச்சகம் கடந்த பிப். 2007-இல் வெளியிட்ட அறிக்கையில், “இலங்கை ராணுவத்துக்கான, பெரும் அளவிலான பயிற்சி இந்தியாவில் வழங்கப்பட்டு வருகிறது” (A major part of training of Srilanka Armed forces is carried out in India) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக இந்திய கப்பல்படையின் உளவுத் துறை, கடல் பகுதிகளில் உளவு வேலைப் பார்த்து, இலங்கை கப்பல் படைக்கு பல ரகசிய தகவல்களைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. (இந்திய கடல் பகுதியில் ராடார் கருவியை அமைத்துள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அண்மையில் சென்னையில் அளித்த பேட்டியில் ஒப்புக் கொண்டுள்ளார். அந்த ராடார் கருவி இப்படி உளவு சொல்வதற்குத்தான் பயன்படுகிறது. - ஆர்) இந்திய கப்பல் படை தந்த தகவல்களினால் இலங்கை கப்பல் படை விடுதலைப் புலிகளின் படகுகளையும், கப்பல்களையும் அழித்துள்ளன. அவர்களுக்கு வந்த ஆயுதங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆறு மாதத்திற்கு ஒரு முறை இந்திய கடலோரக் காவல்படை அதிகாரிகளும், இலங்கை கப்பல் படை அதிகாரிகளும் சந்தித்து, இது தொடர்பான அழித்தொழிப்பு நடவடிக்கைகளுக்கு திட்டமிடுகின்றனர்.

இது தவிர, இந்தியாவும், இலங்கையும் ‘பாதுகாப்பு கூட்டுறவு உடன்பாடு’ ஒன்றை உருவாக்கியுள்ளன. இரு தரப்பினரும் அதில் கையெழுத்திடும் நிலை வந்தபோது, கடைசி நேரத்தில் அய்க்கிய முன்னணி ஆட்சி, கூட்டணிக்கு பாதிப்பு வரக்கூடும் என்பதால், கையெழுத்திடாமல் தள்ளிவைத்துள்ளது. “அரசியல் தீர்வு” என்று ஒரு பக்கம் கூறிக் கொண்டு, மற்றொரு பக்கத்தில் ராணுவ உதவிகளை வழங்கி வரும் இரட்டை கொள்கையை இந்தியா பின்பற்றி வருகிறது - என்று அந்த ஏட்டில் அதன் செய்தியாளர் ஜான் செரியன் எழுதியுள்ளார்.

## டெல்லியில் மாணவர்கள் எழுச்சிப் பேரணி




டெல்லியில், பல்கலைக்கழக மாணவர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக, கடந்த நவ.9 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை எழுச்சியான பேரணியையும், பேரணியின் முடிவில் ஈழத் தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாட்டையும் நடத்தினர். ஜவகர்லால் தேசிய பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம், ஜாமியா பல்கலைக்கழக மாணவர்கள் 500 பேர் - இந்தப் பேரணியில் பங்கேற்று, இலங்கை அரசு நடத்தும் இனப் படுகொலைகளைக் கண்டித்து முழக்கமிட்டனர். பேரணி டெல்லியில் மண்டி இல்லம் பகுதியில் காலை 10 மணிக்கு தொடங்கி ஜந்தர் மந்தரில் 11 மணிக்கு முடிவடைந்தது. தொடர்ந்து, அதே பகுதியில் தமிழர் வாழ்வுரிமை மீட்பு மாநாடு தொடங்கியது. மாநாட்டு அமைப்பாளரும், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக ஆய்வு மாணவருமான கலையரசன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் தமிழர் தேசிய கூட்டமைப்பைச் சார்ந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜி லிங்கம், ஸ்ரீகாந்தா ஆகியோரும், மாநிலங்களவை உறுப்பினரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளருமான டி.ராஜா, பேராசிரியர் சரசுவதி, புதுவை சுகுமார், பல்கலைக்கழக மாணவிகள் பல்லவி, பிரியா, பேராசிரியை விஜயலட்சுமி, ராசாராம் உள்ளிட்டோர் பேசினர். தமிழகத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தின் தீர்மானத்துக்குப் பிறகும் சிங்களப் பேரினவாத அரசு தமிழர்கள் மீதான போரைத் தொடருவதையும், அதை தட்டிக் கேட்காத மத்திய அரசையும், மாநாட்டில் உரையாற்றியோர் வன்மையாக கண்டித்தனர்.

பேராசிரியர் சரசுவதி பேசுகையில், “ஈழத் தமிழர்கள் தேசிய சுயநிர்ணய உரிமையையே வலியுறுத்தி வருகிறார்கள். தேசிய சுயநிர்ணய உரிமை என்பது அய்.நா. அங்கீகரித்துள்ள சர்வ தேச உரிமையாகும். உலகில் சுய நிர்ணய உரிமைக்காக நடந்த போராட்டங்களை அய்.நா. அங்கீகரித்துள்ளது. இந்த உரிமைக்கு இந்தியாவும், அய்.நா.வில் ஏற்பளித்துள்ளது. எனவே, போர் நிறுத்தப்பட்டு, தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வுகளை முன்னெடுப்பது ஒன்றுதான் - ஈழத் தமிழர் பிரச்சினைக்கான சரியான தீர்வாக இருக்க முடியும்” என்று குறிப்பிட்டார்.

பிற்பகல் 3.30 மணி வரை மாநாடு நீடித்தது. பின்னர், சிவாஜிலிங்கம் செய்தியாளர்களிடம் பேசுகையில், தமிழர்கள் மீதான போரை நிறுத்தாமல், நிவாரணப் பொருட்களை வழங்குவதால் எந்தப் பயனும் ஏற்படாது என்றும், போரை நிறுத்துமாறு இந்திய அரசு இலங்கையை வற்புறுத்த வேண்டும் என்றும் கூறினார்.

### மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி

புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் கல்லூரி மாணவர்களுக்காக –

1) தமிழ்த் தேசத் தன்னுரிமை 2) பெண்ணியமும் பெரியாரும் 3) கல்வி வணிகக் கொள்கையும் கண்மூடி அரசுகளும் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்துகிறது. 8 பக்கங்களுக்கு மிகாமல், ஒருவர் ஒரு தலைப்பில் மட்டும் கட்டுரை எழுதலாம். முதல் பரிசு ரூ.2000; இரண்டாம் பரிசு ரூ.1500; மூன்றாம் பரிசு ரூ.1000; அய்ந்து கட்டுரைகளுக்கு ரூ.500 வீதம் ஆறுதல் பரிசு உண்டு.

நவம்பர் 31 ஆம் தேதிக்குள் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

தமிழேந்தி, வள்ளுவர் இல்லம், 44 இராசாசி வீதி, அரக்கோணம் – 631 001. தொடர்புக்கு: 9443432069

**தலையங்கம்**

## வெள்ளை மாளிகை கதவு திறந்தது

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் ஒரு கறுப்பர் அதிபராக முதன்முறையாக நுழைந்திருக்கிறார். இவர் அமெரிக்காவின் 44வது அதிபர், ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதி, கடந்த இரண்டு ஆண்டுகளாகவே ஊடகங்களின், அன்றாடச் செய்திகளாகிவிட்ட ஓபாமாவின் இந்த வெற்றியை உலகம் முழுதும் கருப்பின மக்கள் கொண்டாடுகிறார்கள். ஓபாமாவின் வெற்றி அமெரிக்காவின் அடிப்படையான 'எசமானத்துவப் போக்கை' மாற்றி விடும் என்ற நம்பிக்கையால் அல்ல. ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் கொடூரமான யுத்தங்களை நடத்தி, அமெரிக்காவின் பொருளாதாரத்தை நெருக்கடிக் குள்ளாக்கிய புஷ் தோற்றார் என்ற மகிழ்ச்சி ஒரு காரணம். அமெரிக்காவில் 'ஆப்பிரிக்க – அமெரிக்கர்' ஒருவர் முதன்முறையாக அதிபராகியிருக்கிறார் என்பது மற்றொரு காரணம்.

47 வயதான ஓபாமா அமெரிக்காவின் இளம் தலைமையின் பிரதிநிதி, புதிய வாக்காளர்களின் பெரும்பான்மை வாக்குகள் இவருக்கு ஆதரவாகவே கிடைத்துள்ளன. அமெரிக்காவில் வாழும் அமெரிக்க ஆப்பிரிக்கர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைக்கப் பெற்றதே 1965 ஆம் ஆண்டில் தான்.

"வெள்ளை நிற சிறுவர்களும், கறுப்பு நிற சிறுமிகளும் ஒன்றாக கைகோர்த்து நிற்கும் நாள் ஒன்று வரும் என்பதே என் கனவு" என்று 1961 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் தேதி கறுப்பர் உரிமைக்குப் போராடிய மார்டின் லுதர்கிங் அறிவித்த போது ஓபாமாவும் கறுப்பினச் சிறுவன் தான். அப்போது அவனுக்கு 2 வயது.

ஓபாமா பெயருக்குள்ளே மறைந்துள்ள 'உசேன்' என்ற பெயரைப் பயன்படுத்தி அவரை இஸ்லாமியராக்கிடும் 'இந்துத்துவ' பார்ப்பனப் பிரச்சாரங்களும் ஓபாமாவுக்கு எதிராக அமெரிக்காவில் நடத்தப்பட்டன. அந்த வெறுப்புப் பிரச்சாரம் எடுபடவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சோனியாவை எதிர்த்து, இங்கே உள்ள பார்ப்பன வகுப்புவாத சக்திகள், அவர் இத்தாலி நாட்டுக்காரர், கிறித்துவர் என்றெல்லாம் பிரச்சாரத்தை முன் வைத்தனர். தன்னை இந்தியாவின் மருமகளாக சோனியா கூறினாலும், பார்ப்பன சக்திகள் அதை பார்ப்பனியப் பார்வையில் புறந்தள்ளிவிட்டன. ஆனால், கென்யா நாட்டின் கறுப்பு தந்தைக்கும், கான்சாஸ் மாநில வெள்ளைத் தாய்க்கும் பிறந்த ஒருவர் இப்போது உலகத்தின் உயர்ந்த அதிகாரமுள்ள பதவியில் அமர்ந்துள்ளதை இந்தியாவின் பார்ப்பன வகுப்பவாத சக்திகள் கண்திறந்து பார்க்க வேண்டும். 'மரத்திலிருந்து மனிதன் பிறந்தான்', 'பூமியை ஒரு ஆமை சுமந்து நிற்கிறது' என்ற இந்து புராண கதைகளடங்கிய 'ஆரிஜின்ஸ்' என்ற நூலை சிறு வயதில் ஓபாமாவுக்கு அவரது தாயார் வாங்கித் தந்தார். நூலைப் படித்த ஓபாமா, அந்த ஆமை எதன் மீது நின்றுக் கொண்டு உலகைத் தாங்கிப் பிடித்தது? என்ற கேள்விகளைக் கேட்டதாக அவரது வரலாறு கூறுகிறது. ஆனாலும் இப்போதும் தனது சட்டைப் பைக்குள் 'விநாயகன்' சிலை ஒன்றை வைத்திருப்பதாகவே செய்திகளை வெளியிட்டு பார்ப்பன ஏடுகள் மகிழ்கின்றன.

ஈராக்கிலே – அமெரிக்காவின் ராணுவம் நடத்தி வரும் யுத்தத்தை ஓபாமா தனது தேர்தல் பிரச்சாரத்திலே எதிர்த்ததோடு, பதவி ஏற்ற 16 மாதங்களுக்குள்ளே அமெரிக்க துருப்புகளைத் திரும்பப் பெறுவேன் என்றும் அறிவித்தார். புஷ் ஆட்சி கட்டவிழ்த்த அடக்கு முறைகள் ஏராளம்! பாலஸ்தீன மக்களின் நியாயமான உரிமைகளை இஸ்ரேல் பறிப்பதற்கு துணை போனார் புஷ். நியாயமான பாலஸ்தின மக்களின் உரிமைக்கு புதிய ஆட்சி வழி வகுக்குமா? இலங்கையில் சுய நிர்ணய உரிமைக்குப் போராடும் தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்கும் சிங்களப் பேரினவாத ஆட்சிக்கு எதிரான நியாயமான குரலையும் ஓபாமா ஒலிப்பாரா? கியுபா மீது அமெரிக்கா விதித்துள்ள அநியாயமான பொருளாதாரத் தடை நீக்கப்படுமா? அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தென் அமெரிக்க நாடுகளான பொலிவியா, வெனிசுலா, ஈக்குவேடார் நாடுகளில் சுதந்திரக் காற்று வீசத் தொடங்கியிருப்பதை அங்கீகரிகுமா? இப்படிப் பல பிரச்சினைகள் ஓபாமாவின் முன் நிற்கின்றன.

முதலாளித்துவம் கடுமையான வீழ்ச்சிகளை சந்திக்கத் தொடங்கியுள்ள காலகட்டத்தில் அதிகாரத்துக்கு வந்திருக்கும் ஓபாமா மாறிவரும் சூழல்களைக் கவனத்தில் கொள்வாரா? "கறுப்பர்" என்ற ஒடுக்கப்பட்ட அடையாளத்தை அரசியல் கொள்கையாக்குவாரா? அல்லது வழக்கமான அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆணவத்தில் பயணிப்பாரா? இதற்கு எதிர்காலம் விடை கூறும் என்றாலும், உலகம் முழுதும் வாழும் ஒடுக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதியாக உயர்ந்து நிற்கும் ஓபாமாவை – உலக ஒடுக்கப்பட்ட மக்களோடு இணைந்து நாமும் பாராட்டுவோம்!

### மக்களிடம் விளக்குவோம்

# சகோதர யுத்தத்தை உருவாக்கியது யார்?

*தமிழக முதல்வர் கலைஞர் 'சகோதர யுத்தம்' காரணமாக ஈழத் தமிழர் பிரச்சினையில் பின்னடைவு ஏற்பட்டள்ளது என்ற குற்றச்சாட்டை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இப்படி பல்வேறு குழுக்களை உருவாக்கி, அவர்களுக்குள் மோதலை உருவாக்கியதே இந்தியாவின் 'ரா' உளவு நிறுவனம் தான். இது பற்றி உண்மையை வெளிச்சப்படுத்துகிறது - இக்கட்டுரை.*

'ரா' உளவு நிறுவனம், அவ்வப்போது, பல ஈழத் தமிழர் குழுக்களை உருவாக்கி, விடுதலைப் புலிகளுக்கு எதிராக, அந்தக் குழுக்களைப் பயன்படுத்தி வருவது கல்லில் செதுக்கப்பட்ட உண்மையாகும். ஆனால், விடுதலைப்புலிகளை முழுமையாக அழிக்கும் இலக்கில் தோல்வி அடைந்து, இந்திய ராணுவம் இந்தியா திரும்பிவிட்டது. அதன் பிறகு விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை - இந்திய ராணுவத்துக்கு பதிலாக, இந்திய உளவுத் துறையே ரகசியமாக நடத்தி வருகிறது என்பதே பல ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஆனாலும், விடுதலைப்புலிகள் - மக்கள் பேராதரவோடு சிறிலங்கா ராணுவ ஒடுக்கு முறைகளை எதிர்த்து - உலகமே வியக்கும், விடுதலைப் படையாக போராட்டக்களத்தில் நிற்கிறது. 1983 ஆம் ஆண்டிலிருந்து, வலிமை மிக்க இந்திய ராணுவமும், ஏகாதிபத்திய நாடுகளின் ராணுவ உதவிகளைப் பெற்ற சிறிலங்கா ராணுவமும், தமிழ் மக்கள் மீது நடத்திய ராணுவத் தாக்குதல்கள், குண்டு வீச்சுகள், அழித்தொழிப்புகளை எதிர் கொண்டு, தமது தாயகத்துக்கான விடுதலை போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. பார்ப்பன-பனியா அதிகாரவர்க்கத்தின் ஆதிக்கத்தில் இயங்கும் உளவு நிறுவனம் - தனது முழு ஆற்றலையும் பன்படுத்தி, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நிலைகுலையச் செய்யும் முயற்சிகளில் முனைப்பாக பங்காற்றி வருகிறது.

விடுதலைப்புலிகளை ஒழிக்க வேண்டுமெனில் அவர்களின் மக்கள் ஆதரவுத் தளத்தை அழித்தொழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, பல போராளிக் குழுக்களை 'ரா' உளவு நிறுவனமே உருவாக்கியது.

'டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற அமைப்புகள் ஈழத்தின் விடுதலைக்காக - ஆயுதம் ஏந்திப் போராடும் அமைப்புகளாக தங்களை அறிவித்துக் கொண்டவை. 'டெலோ' அமைப்பின் தலைவர் சிறீ சபா ரத்தினம். அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுட்டுக் கொல்லப்பட்ட சிறி சபாரத்தினத்துக்கும் 'ரா' உளவு நிறுவனத்துக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெளிவந்த நூலிலிருந்தே இதற்கு சான்று காட்டலாம். எம்.ஆர். நாராயணசாமி, ஆங்கிலத்தில் எழுதி, உளவு நிறுவனங்களால் பெரிதும் போற்றப்படும் நூல் 'Tigers of Lanka'. நூலில் இவ்வாறு நூலாசிரியர் குறிப்பிடுகிறார்:

"1983-ல் 'ரா' தமிழ்ப் போராளி குழுக்களுக்கு ராணுவப் பயிற்சி தந்தது. அப்போதே பல்வேறு குழுக்களுக்கிடையே பகைமையையும், முரண்பாடுகளையும் 'ரா' உருவாக்கியது. செயலிழந்த குழுக்களுக்கு 'ரா' உயிரூட்டும் முயற்சிகளில் இறங்கியது. இதனால் எல்.டி.டி.ஈ. கவலைக் கொண்டது. 'டெலோ'வை 'ரா' ஊக்குவித்தது. 'ரா'வுக்கு மிகவும் நெருக்கமான குழு 'டெலோ' தான் என்றும், அந்தக் குழுவைத்தான் 'ரா' உண்மையாக ஆதரிக்கிறது என்றும், 'ரா' கருத்துகளைப் பரப்பி, 'டெலோ'வை உற்சாகப்படுத்தியது. இதனால், ஒவ்வொரு ராணுவ நடவடிக்கையையும் - சிறீசபா ரத்தினம் 'ரா'வோடு கலந்து ஆலோசித்தார். ஒவ்வொரு தாக்குதலுக்கும், எத்தனை போராளிகள் தேவை என்பதைக்கூட 'ரா'வின் ஆலோசனைகளைப் பெற்றே செயல்பட்டார். (நூல்: பக். 326)"

இப்படி, 'டெலோ'வின் மூளையாகவே செயல்பட்டது 'ரா' உளவு நிறுவனம் தான்.

ஈ.பி.ஆர்.எல்.எப். - இந்திய ராணுவத்தின் மற்றொரு செல்லப் பிள்ளை. மக்கள் ஆதரவற்ற அந்த அமைப்பு இந்திய ராணுவத்தின் வலிமையில் தான் ஆட்சியில் அமர முடியும் என்ற நிலையில், இந்திய ராணுவம் இந்தியா திரும்பியவுடனேயே அந்த அமைப்பினரும், அந்த அமைப்பின் சார்பில் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் முதல்வராக அமர வைக்கப்பட்ட வரதராஜப் பெருமாளும் இந்திய ராணுவத்துடனேயே இந்தியாவுக்கு கரை சேர்ந்து விட்டனர். அவர்களை பத்திரமாக கரை சேர்த்தது இந்திய உளவுத் துறை தான்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக - அப்போது உளவு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மற்றொரு அமைப்பு 'ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி' என்று அழைக்கப்படும் 'ஈ.என்.டி.எல்.எப்.' அமைப்பாகும்.

இந்த அமைப்பை உருவாக்கியது யார்? எப்படி உருவாக்கப்பட்டது? 'இந்து', 'பிரன்ட் லைன்', 'சண்டே லீடர்' போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வரும். செய்தியாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் கட்டுரையிலிருந்து இதற்கு விடை தர முடியும். அவர் எழுதுகிறார்:

"ஈ.என்.டி.எல்.எப். - உருவான கதை மிகவும் சுவையானது. (இதன் தலைவராக உள்ள) பரந்தன் ராஜன் என்பவர் ஆரம்பத்தில் 'புளோட்' அமைப்பில் இருந்தார். லெபனான் நாட்டுக்குப் போய் பயிற்சி பெற்றவர். இவர் புளோட்டில் - ராணுவத் தளபதி பதவியை எதிர்பார்த்தார். ஆனால், 'புளோட்' தலைவர் உமாமகேசுவரன் அப்பதவியை வேறு ஒருவருக்கு தந்ததால் - பரந்தன் ராஜன் வெறுப்படைந்து, தனது ஆதரவாளர்களுடன் வெளியேறினார். இப்படி வெளியேறிய குழுவினரும், ஏற்கனவே 'டெலோ', 'ஈ.பி.ஆர்.எல்.எப்.' அமைப்புகளிலிருந்து அதிருப்தியுற்று வெளியேறிய குழுவினரும் இணைந்து - 'மூன்று நட்சத்திரங்கள்' (Three Stars) என்ற பெயரில் ஒரு குழுவை உருவாக்கினார். மூன்று அமைப்புகளின் அதிருப்தியாளர்கள் உருவாக்கிய குழு என்பதால் - மூன்று நட்சத்திரம் என்று பெயர் சூட்டப் பெற்றது. பிறகு 'புளோட்' அமைப்பிலிருந்து ஈசுவரன் என்பவர் தலைமையில் மற்றொரு அதிருப்தி குழு விலகியது. அதேபோல் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பிலிருந்து பத்மநாபா தலைமையில் ஒரு குழுவும், டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஒரு குழுவும் ஆக, 2 குழுக்கள் விலகின. அப்போது 'ரா' 1987-ல் மூன்று நட்சத்திர அமைப்பையும், டக்ளஸ், ஈசுவரன் தலைமையிலான குழுக்களையும் ஒன்றாக்கி ஈ.என்.டி.எல்.எப். என்ற அமைப்பை உருவாக்கியது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்குப் பிறகு பரந்தன் ராஜனிடமிருந்து டக்ளஸ் தேவானந்தா விலகி ஈழம் மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) என்ற அமைப்பை தனியே ஏற்படுத்திக் கொண்டார். இதனால் - 'ஈ.என்.டி.எல்.எப்.' பரந்தன்ராஜனின் முழுக் கட்டுப் பாட்டுக்குள் வந்தது - இதுதான் ஈ.என்.டி.எல்.எப். தோன்றிய கதை. இந்த அமைப்பை உருவாக்கியது இந்தியாவின் 'ரா' உளவு நிறுவனம்."

டெல்லியிலிருந்து வெளிவரும் 'டெகல்கா' ஆங்கில வார ஏட்டில் (ஜுலை 1, 2006) பி.சி. வினோஜ்குமார் எழுதிய கட்டுரையிலும் -

"பரந்தன்ராஜன் தலைமையிலான ஈ.என்.டி.எல்.எப். என்ற அமைப்பு விடுதலைப் புலிகள் செல்வாக்கைக் குறைப்பதற்காக 'ரா' உளவு நிறுவனத் தால் உருவாக்கப் பட்டதாகக் கூறப்படு கிறது"

- என்றும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான குழுக்களை ஒருங்கிணைக்கும் மய்யப்

(4 ஆம் பக்கம்)

# பார்ப்பன மடத்தைத் தாக்கியதாக வழக்கு

# ஈரோடு மாவட்ட கழகத் தோழர்கள் விடுதலை



6.12.2006 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கத்தில் தந்தை பெரியாரின் சிலை உடைக்கப்பட்டதற்கு எதிர்வினையாக 8.12.2006 அன்று ஈரோடு கருங்கல் பாளையத்திலுள்ள பார்ப்பனர் பஞ்சாபிகேசன் நடத்தி வரும், "பாதுகா மண்டபம்" தாக்கப்பட்டது. அங்கிருந்த கடவுளர் படங்கள் உடைத்து துவம்சம் செய்ததாகக் கூறி, ஈரோடு மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் ஏழு பேரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்தது காவல் துறை. அங்கு வைத்து பூசை செய்து வந்த பெரிய சங்கராச்சாரியின் 'பாதுகை'யை (செருப்பு மரத்திலானது) உடைத்துவிட்டதாகவும் புகார் மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு ஈரோடு 4வது அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, விசாரணை முடிவில் தோழர்கள், இராம. இளங்கோவன் (மாவட்ட செயலாளர்), வெ.குமரகுருபரன் (மாவட்ட அமைப்பாளர்), இரா. முருகானந்தம் (ஈரோடு நகரச் செயலாளர்), க. அர்ச்சுனன் (பெருந்துறை ஒன்றிய செயலாளர்), கழக உறுப்பினர்கள் சு.ரஜினி, பெ. சங்கர், பா.செல்லத்துரை ஆகிய ஏழு தோழர்களும் 6.11.08 அன்று வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். வழக்கில், "இந்த ஏழு தோழர்கள்தான் செய்தனர் என்பதற்கு போதிய ஆதாரம் எதுவும் இல்லாததால், இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுகின்றார்கள்" என நடுவர் தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டார்.

கழகத் தோழர்கள் சார்பாக வழக்கறிஞர் ப.பா.மோகன் மிகச் சிறப்பாக வாதாடினார். இவருக்கு துணையாக வழக்கறிஞர் பாவேந்தன் ஒத்துழைத்தார். வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் நடுவர் முன்பு வழக்கறிஞர் ப.பா.மோகன், தனது வாதுரையில் பெரியார் குறித்து ஆழமான கருத்துகளை பதிவு செய்தார். பெரியார் பார்ப்பனியத்திற்குத் தான் எதிரியே ஒழிய, தனிப்பட்ட பார்ப்பனர்களுக்கு எதிரி அல்ல. எடுத்துக்காட்டாக 'ராஜாஜி' போன்ற பார்ப்பனர்கள் அவருக்கு நெருங்கிய நண்பர்களாகவே இருந்தனர் என்று வழக்கறிஞர் ப.பா. மோகன் கூறியபோது, நடுவர் இடைமறித்து, அதென்ன பார்ப்பனியம்? பார்ப்பான் என்றால் யார்? பார்ப்பனீயம் என்றால் என்ன? இரண்டுக்கும் என்ன வேறுபாடு? என்று வினவ, வழக்கறிஞர் இதுதான் சமயம் என்று விரிவாக பார்ப்பனியத்தைப் பற்றி எடுத்துரைத்தார். வர்ணாஸ்ரமதர்மம் குறித்தும், 4 வகை வர்ணங்களைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். நடுவர் மிகக் கவனமாக இதனை செவிமடுத்தார். நடுவர் உட்பட ஏராளமான வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணையை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தனர். பார்ப்பன வழக்கறிஞர்கள் மிகுந்த ஆவலுடன் கவனித்தனர். வழக்கறிஞர் ப.பா. மோகன், வாதுரை மூலமாக பெரியாரையும், அவருடைய கொள்கையையும் விரிவாகத் தெரிந்து கொள்ள இவ்வழக்கு வாய்ப்பாக அமைந்தது.

விடுதலையானவுடன் வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கும், அவருக்கு துணையாக இருந்த வழக்கறிஞர் பாவேந்தனுக்கும் நன்றி கூறிவிட்டு, ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். வழக்கறிஞர் ப.பா.மோகன் வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் எதுவும் வேண்டாம் என மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர். பழகுவதற்கு எளியவராகவும், தோழமையுடன், கொள்கை உணர்வுடன் நடந்து கொள்பவர். ஏழை மக்களால் மதிக்கப்படுபவர், பலருக்கு கட்டணம் வாங்காமலேயே வழக்கு நடத்தி, வெற்றி பெற்றுத் தரும் மிகச் சிறந்த பொதுவுடைமைவாதி, மனித நேயர்.

**– நமது செய்தியாளர்**

# கள்ளக் குறிச்சி, தூத்துக்குடியில் கழக ஆர்ப்பாட்டங்கள்





25.10.2008 சனிக்கிழமை காலை 11 மணியளவில் தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பாக சிங்களருக்கு வழங்கிய படைக் கருவிகளை திரும்பப் பெறக் கோரி, கள்ளக்குறிச்சி மந்தவெளி பெரியார் சிலையிலிருந்து அம்பேத்கர் சிலை வரை இந்திய அரசை வலியுறுத்தி, தங்க. செந்தில்குமார் தலைமையில் பேரணி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பேரணிக்கு மு.வ. நடராசன், வெ. அமிர்தலிங்கம், சி. சாமிதுரை, சி. ஆசைத்தம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தை எதிர்த்து கள்ளக்குறிச்சி வட்டார காங்கிரஸ்காரர்கள் 25 பேர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை கைது செய் என்று கோஷமிட்டனர். சிறிது நேரத்திலேயே காவல்துறையினர் ஆர்ப்பாட்டக்காரர்களை களைந்து போக செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் க. நடராஜன் (தலைமை செயற்குழு உறுப்பினர்), ராசேந்திரன் சுகுமார் (ம.தி.மு.க.), பாம.க. பொறுப்பாளர் பொன். மகாதேவன், ஒன்றிய செயலாளர் சரவணன், ராமச்சந்திரன், தி.மு.க. தோழர் லியாகத் அலி, கழக மாவட்ட தலைவர் ப. கண்ணன், எம்.வெற்றிவேல், திருமால் மணியழகன், புலவர் மோகன், இரா.மா.பிரபு, ஆ.அருள், ராதாகிருஷ்ணன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

150க்கும் மேற்பட்ட தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். பேரணியில் சிங்கள படையினரால் படுகொலை செய்யப்பட்ட இளம் சிறார்களின் கோர காட்சியை பார்த்து, பொது மக்கள் உணர்ச்சி வயப்பட்டனர். நிகழ்ச்சியை ந. அய்யனார் ஒருங்கிணைப்பு செய்தார்.

தூத்துக்குடி மாநகர கழகத்தின் சார்பாக, ஈழத் தமிழர்களை கொன்று குவிக்கும் சிங்கள பேரினவாதத்தைக் கண்டித்து, கண்டன ஆர்ப்பாட்டம் 22.10.08 மாலை 4 மணி அளவில் தூத்துக்குடி, மாநகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது.

தூத்துக்குடி மாநகரத் தலைவர் கோ.அ.குமார் தலைமையில், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ரா.வே. மனோகர் துவக்கி வைத்தார். நெல்லை மாவட்ட கழகத் தலைவர் ப.அரியமுத்து, தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு ஆகியோர் கண்டன உரையாற்றினர். கிறித்துவர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பாக ஜார்ஜ் வில்பிரட், சுந்தரி மைந்தன் ஆகியோரும், தமிழ்தேசிய பொதுவுடைமைக் கட்சியின் மு.தமிழ் மணி, புரட்சிப் புலிகள் சார்பில் கிட்டு பாலு, தமிழக மாணவர் கழகம் சசி. தமிழ்ச் செல்வன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் இரா. தமிழரசன், தலித்திய சமூக நீதி பேரவையின் தவராசு பாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆறுமுக நயினார் ஆகியோர் கண்டன உரையை பதிவுசெய்தனர். இறுதியாக தலைமை செயற்குழு உறுப்பினர் பால்.பிரபாகரன் ஆர்ப்பாட்ட விளக்கவுரையாற்றினார். மாநகர துணைத் தலைவர் சா.த.பிரபாகரன் நன்றி கூறினார். ஈழத்தில் தமிழ் மக்கள் தாக்கப் படுவதை அடையாளப்படுத்தும் விதமாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'காயக்கட்டுகளுடன்' முழக்கம் எழுப்பினர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பிரணாப் முகர்ஜியின் இரட்டை வேடம்!

*(தமிழ்நெட் வெப்டுனியா இணையதளம் அண்மையில் பிரணாப் முகர்ஜி, ஈரானில் வெளியிட்ட கருத்தை முன் வைத்து வெளியிட்டுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகள்)*

ஈரான் தலைநகர் டெஹ்ரானில், 'இந்தியா ஸ்ரீ ஈரான்; தொன்மையான நாகரிகங்களும், நவீன தேசங்களும்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றியுள்ள இந்திய அயலுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, "இறையாண்மையுடன் கூடிய சுதந்திர நாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற பாலஸ்தீன மக்களின் அபிலாசைகள் நிறைவேறுவதற்கு இந்தியா உறுதுணையாக இருக்கும்" என்று கூறியுள்ளார்.

இது மட்டுமல்ல, "பாலஸ்தீன மக்களின் உரிமைகள் இன்று வரை நிலைநிறுத்தப் படவில்லை என்கின்ற நிலை இந்தியாவிற்கு முக்கியமான கவலையாக உள்ளது. அது நிலைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்" என்றும் அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசியுள்ளார்.

1974 ஆம் ஆண்டிலேயே பாலஸ்தீன விடுதலை அமைப்பு (பி.எல்.ஓ.) முதலில் அங்கீகரித்து பாலஸ்தீன மக்களின் உரிமைக் குரலுக்கு பலம் சேர்த்த நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பிறகு, 1988 ஆம் ஆண்டில் பாலஸ்தீன நாட்டை அங்கீகரித்து, அதன் தூதரகம் டெல்லியில் அமைக்க ஆதரவளித்த நாடு இந்தியா.

ஒரு பக்கம், பாலஸ்தீனத்தை அழித்து விடுவதே தங்களுக்கு உறுதியான, பாதுகாப்பான நிலைத் தன்மையை உருவாக்கும் என்று இராணுவ, விமானப்படைத் தாக்குதலை நினைத்த போதெல்லாம் தொடுத்து வரும் இஸ்ரேலுடன் உறவை (வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது) ஏற்படுத்திக் கொண்ட போதிலும், பாலஸ்தீனம் தொடர்பான தனது நிலைப்பாட்டில் இந்தியா எள்ளளவும் பிசகாமல் ஆதரவு நிலையில் உறுதியாகவுள்ளது.

பாலஸ்தீன நாட்டை அங்கீகரித்து அதனை ஏற்றுக் கொண்டு அதனுடனான தனது சிக்கலிற்கு இஸ்ரேல் தீர்வு காண வேண்டும் என்று தான் இந்தியா கூறி வருகிறது. இந்தியாவின் இந்த நிலைபாட்டிற்கு சர்வதேச அளவில் மரியாதை உள்ளது. பாலஸ்தீனர்கள் தங்கள் மண்ணிலேயே ஒடுக்கப்பட்ட நிலையில், மேற்குக் கரை, காசா, கோலன் மலைப்பகுதி என்று பிரிந்து கிடந்தாலும் அவர்களின் வரலாற்று ரீதியான உரிமையை எதிர்க்கும் அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா எதிர்த்தே வந்துள்ளது.

பாலஸ்தீன மக்களுக்கு அவர்களின் பாரம்பரிய தாயகத்தில் எப்படியெல்லாம் உரிமை மறுக்கப்பட்டு ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனரோ அதே நிலைதான் இலங்கையிலும் நிலவுகிறது. இன்றல்ல, நேற்றல்ல, சற்றேறக்குறைய அரை நூற்றாண்டுக்காலமாக, அங்கு வாழும் தமிழர்கள் அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டுள்ளது. அதனைப் பெறுவதற்கு நடந்த போராட்டங்களின் விளைவாக ஆளும் சிங்கள அரசு தமிழர் தலைவர்களுடன் போட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் கிழித்தெறியப்பட்டன.

ஆனால், இப்பிரச்சினையை வேறொரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை யாகவே மத்திய அரசு பார்க்கிறது. தனது நாட்டு மக்களின் மீதே ஈவிரக்கமின்றி விமானத்தின் மூலம் குண்டு வீசிக் கொல்லும் (இலங்கை) அரசின் இறை யாண்மையைப் பற்றி இந்தியா அக்கரையுடன் பேசுகிறது. அரை நூற்றாண்டுக் காலமாக சிங்கள இனவாத அரசியலால் அம்மக்கள் இன ரீதியாக மிதிக்கப்படுவதை கண்டு கொள்ளாமல், அதனை பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்று அந்நாடு சொல்வதையே நியாயமாக எடுத்துக் கொண்டு, அதற்கு ஆதரவும் அளிக்கிறது. அந்நாட்டின் பாதுகாப்பிற்கு உதவியும் செய்கிறது. அதில் நமது நாட்டின் பாதுகாப்பு உள்ளது என்றும் கூறுகிறார் அயலுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி!

இஸ்ரேலிற்கு எதிராக போராடி வரும் பாலஸ்தன விடுதலை இயக்கங்கள் பலவற்றை அமெரிக்காவும், இஸ்ரேலும் பயங்கரவாத இயக்கங்கள் என்றே முத்திரை குத்தியுள்ளன. ஆயினும் அவற்றிற்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல்களை இந்தியா கண்டிக்கிறது. கண்டித்து வந்துள்ளது. அது மட்டுமின்றி, அம்மக்களின் நியாயமான உரிமைகள் பாலஸ்தீன விடுதலையின் மூலம் மட்டும்தான் நிலைநிறுத்தப்படும் என்பதை ஆணித்தரமாகவும் எடுத்துரைத்துள்ளது. அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் பேச்சு மிக வலிமையானது.

ஆனால், பாலஸ்தீன மக்களைவிட கடுமையான ஒடுக்குதலிற்கு ஆளாகிவரும் ஈழத் தமிழர்களுக்கு அந்த வாழ்வுரிமையும், சுதந்திரமும் பெற்றுத்தர நடைபெறும் போராட்டத்தை ஏன் ஆதரிக்க மறுக்கிறது? என்பதே இவ்விரண்டு பிரச்சினைகளையும் ஒப்பிட்டு நோக்கும் எவர் மனதிலும் எழக் கூடிய கேள்வி.

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

புள்ளியாக இந்த அமைப்பு திகழுகிறது என்றும் குறிப்பிடுகிறார்.

இதில், இந்திய உளவுத் துறையின் ஆதரவோடு செயல்பட்ட டக்ளஸ் தேவானந்தாவைப் பற்றி குறிப்பிட வேண்டும். யார் இந்த டக்ளஸ் தேவானந்தா?

ஈ.பி.டி.பி.யின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா - இலங்கையில் இப்போது சமூக நலத்துறை அமைச்சர் - 1986-ல் சென்னையில் இவர் தங்கியிருந்தபோது, பொது மக்களிடம் ஏற்பட்ட தகராறில் இவர் துப்பாக்கியால் சுட்டபோது ஒருவர் இறந்தார். நான்கு அப்பாவி பொது மக்கள் காயமடைந்தனர். சென்னை சூளைமேட்டில் இந்த சம்பவம் நடந்தது. அப்போது அவர் மீதும், அவரது ஆதரவாளர்கள் 9 பேர் மீதும் தமிழக காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. வழக்கு இப்போதும் நிலுவையில் இருக்கிறது. ஆனாலும், இந்திய உளவு நிறுவனத்தின் முழு ஆதரவோடு இவர் செயல்பட்டு வருகிறார்.

இதே டக்ளஸ்தான் சென்னையில் 10 வயது பையனைக் கடத்திப் போய், ரூ.7 லட்சம் பணம் கேட்டார் என்று ஒரு வழக்கு கீழ்ப்பாக்கம் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவர் 1989-ல் சென்னையில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். ஓராண்டு கழித்து விடுதலை செய்யப்பட்டார். இவரை விடுதலை செய்ய வைத்து, அதன் பிறகு இந்திய ராணுவ விமானத்தில் யாழ்ப் பாணத்துக்கு அனுப்பி விடுதலைப்புலி களுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை களில் ஈடுபட வைத்தது - இந்திய உளவு நிறுவனமாகிய 'ரா' தான் என்று 'டெகல்கா' வார ஏடு (ஜூலை 1, 2006) எழுதியுள்ளது. (Sources say, it was 'R&AW' which Air lifted Devananda to Jaffna on an Indian Army helicopter to pit him against the LTTE) *(தொடரும்)*

- 'ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி' நூலிலிருந்து

# கீதையின் மறுபக்கமா? கீதையின் பக்கமா?

## திரிபுவாத திம்மன்கள் – யார்? (9)

'கடமையை செய்; பலனை எதிர்பார்க்காதே' என்ற கீதையின் தத்துவம், உழைக்கும் மக்களுக்கு எதிரானது என்று நடிகர் ரஜினிகாந்த் மிகச் சரியாகவே அண்மையில் கூறியிருந்தார். சென்னையில் தனது ரசிகர்களுடன் சந்திப்பு நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்த ரஜினிகாந்த், மேடையில், 'கடமையைச் செய்; பயனை எதிர் பார்' என்ற முழக்கத்தை பதாகையில் எழுதி நிறுவி யிருந்தார். 'விடுதலை' நாளேடு ரஜினிகாந்தின் இந்த சரியானப் புரிதலை பாராட்டி தலையங்கம் தீட்டியிருந்தது.

ஆனால், 'கீதையின் மறுபக்கம்' நூலை எழுதி, கீதையை கடுமையாக விமர்சித்திருந்த கி.வீரமணி, 'வாழ்வியல் சிந்தனை'யில் கீதையின் ஆதரவாள ராகி விடுகிறார் என்பதுதான் விநோதம். பெரியார் சமூக மாற்றத்துக்கான புரட்சிகர சிந்தனைகளை மக்களிடம் விதைத்து, தமிழர்களுக்கு உணர்வூட்டினார். கி.வீரமணியோ, வாழ்வியல் சிந்தனைகள் என்ற பெயரில் பகுத்தறிவு கருத்துகளுக்கு மாறான கருத்துகளைப் பரப்பி வருகிறார். பெரியார் சிந்தனைகளை ஏற்று, அந்த இயக்கத்துக்கு வந்த தோழர்களிடம், தனது வாழ்வியல் சிந்தனைகளை அதுவும் பெரியார் தொடங்கிய 'விடுதலை' நாளேட்டிலேயே எழுதி, இயக்கத்தின் கொள்கையாகவே மாற்றும் புரட்டுகளை செய்து வருகிறார். திராவிடர் கழகத்தின் கொள்கை பெரியார் சிந்தனைகளா? அல்லது வீரமணியின் வாழ்வியல் சிந்தனைகளா என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல், அக்கழகத்தின் தோழர்கள், "வீரமணி சொன்னால் ஏற்க வேண்டியதுதான்" என்ற அடிமை மனப்போக்கில் அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். எதையும், ஏன், எதற்கு என்று சிந்தியுங்கள் என்று பெரியார் முன் வைத்த பகுத்தறிவை வீரமணியின் வாழ்வியல் சிந்தனைக்குப் பொருத்திப் பார்த்தால் அவர்கள் "கழகத்தின் துரோகிகளாகி" விடுவார்கள்.

வீரமணியின் 'வாழ்வியல் சிந்தனைகள்' ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படு கிறதாம். மதுரை மடாதிபதி வாழ்வியல் சிந்தனை நூல்களை வாங்கி பரப்பி வருகிறாராம். 'இந்துத்துவா' கூட்டம்கூட வீரமணியின் வாழ்வியல் சிந்தனைகளை தடையின்றி ஏற்றுக் கொள்ளலாம். காரணம், அந்த வாழ்வியல் சிந்தனை எதிர்ப்பு களையும், போராட்ட உணர்வுகளையும் முடக்கி, 'அடங்கி வாழ்வதற்கான' அறிவுரைகளையே முன் வைக்கின்றன.

'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற கீதையின் தத்துவத்தை, வீரமணியே வாழ்வியல் சிந்தனையாகத் தரும்போது, பார்ப்பனர்களும், இந்தத்துவா வாதிகளும் அதை ஏன் எதிர்க்க வேண்டும்? ஆச்சரியப்பட வேண்டாம்.

கடந்த செப்டம்பர் முதல் தேதி 'விடுதலை'யில் வெளிவந்த வாழ்வியல் சிந்தனையில் கி.வீரமணி இவ்வாறு எழுதியுள்ளார்.

> "பணம் சம்பாதிப்பதைவிட – மனிதர்களை – மனிதர்களின் அன்பினை – நன்றியினை சம்பாதிப்பது தானே முக்கியம். எனவே பணியில் ஈடுபடும்போது, பணக் கணக்கு வேண்டாம். மகிழ்ச்சி தருமா என்ற மனக்கணக்குடன் ஈடுபட வேண்டும்." – கி.வீரமணி, செப்.1, 2008 'விடுதலை'

பலனை எதிர்பார்க்காமல், கடமையைச் செய் என்ற கீதையின் தத்துவம் தான் கி.வீரமணியின் வாழ்வியல் சிந்தனையாக வெளி வருகிறது. இவர்களே 'கடமையை செய் – பலனை எதிர்பார்' என்று கூறிய ரஜினிகாந்தைப் பாராட்டி, தலையங்கமும் தீட்டுகிறார்கள். கி.வீரமணியின் இந்த சிந்தனையையும் பாராட்டி தலையங்கம் தீட்டுவார்களா?

மனிதர்களின் அன்பினை, பாசத்தை, நன்றியினை சம்பாதிப்பதற்குத்தான் – உழைப்புக்கான ஊதியத்தை எதிர்பாராமல், இடுப்பில் துண்டைக் கட்டி, கைக் கட்டி வாய் பொத்தி 'ஆண்டைகளிடம்' அடிமை வேலை செய்து கொண்டிருந்தது, நமது சமூகம். பயனை எதிர்பாராத அந்த 'அன்பும்', 'பாசமும்' ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலைநாட்டிய அடிமைத்தனத்தை எதிர்த்து, 'காரி உமிழ்', 'ஆத்திரம் கொண்டு அடி' தலைநிமிர்ந்து நில் என்ற கோப ஆவேசத்தை பெரியார் இயக்கம் ஊட்டியது. 'மனக் கணக்குகளுக்கும்', 'பணக் கணக்குகளுக்கும்' உள்ள பொருளியல் உறவுகளைப் புரிந்து கொண்ட எவரும் இப்படிப்பட்ட உளறல்களை, சிந்தனைகளாக முன் வைக்க மாட்டார்கள்.

வாழும் உலகத்துக்கேற்ப உனது வாழ்க்கையை தகவமைத்துக் கொள் என்ற உபதேசத்தை சாமியார்களும் , சங்கராச்சாரிகளும், தான் கூறுவார்கள். தங்களை 'புரட்சிப் படை', 'போர்ப்படை' என்று கூறிக் கொள்கிறவர்கள் கூறலாமா? இதைவிட பெரியார் கொள்கைப் புரட்டு வேறு இருக்க முடியுமா?

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

## நன்கொடை


தென் சென்னை மாவட்ட கழகப் பொருளாளர் கு. அன்பு தன சேகரின் சகலை கிருஷ்ணகுமார், சென்னை ஓட்டேரியில் புது இல்லம் வாங்கியதின் மகிழ்வாக ரூ.500 'புரட்சி பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக வழங்கினார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 14th November 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 நவம்பர் 20, 2008 புரட்சி 7 முழக்கம் 47 விலை : ரூ.2.50

# போர் நிறுத்தம் கோரி 14 நாட்கள் பரப்புரைப் பயணம் தொடங்கியது

ஈழத் தமிழர் மீது சிங்கள ராணுவம் நடத்தி வரும் இனப் படுகொலைகளை நிறுத்திட மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, அனைத்து மாணவர்கள் இளைஞர் கூட்டமைப்பு சார்பில் ஊர்தி பிரச்சாரப் பயணம் இன்று காலை10 மணியளவில் சென்னை இராயப்பேட்டை பெரியார் சிலை அருகிலிருந்து தொடங்கியது. மாநிலங் களவை உறுப்பினர் கனிமொழி கொடி அசைத்து பயணத்தைத் தொடங்கி வைத்தார்.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமா வளவன், திராவிட இயக்க தமிழ்ப் பேரவை அமைப்பாளர் சுப. வீர பாண்டியன், உணர்ச்சிக் கவிஞர் காசி. ஆனந்தன், பொள்ளாச்சி உமாபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மருத்துவர் எழிலன் தலைமையில் 17 தோழர்கள் இந்தப் பிரச்சாரப் பயணத்தில் பங்கேற்கின்றனர். 18 ஆம் தேதி சென்னையில் தொடங்கும் பயணம் டிசம்பர் 1 ஆம் தேதி கோவையில் நிறைவடைகிறது. 14 நாள் பரப்புரை பயணத்தில் 80 ஊர்களில் பரப்புரை நடைபெறுகிறது. பெரியார் திராவிடர் கழக சார்பில் தமிழகம் முழுதும் பயணக்குழுவினருக்கு வரவேற்புக் கூட்டங்கள் ஈழத் தமிழர் ஆதரவு விளக்கக் கூட்டங்களாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## பெரியார் நூல்கள் ஏன் நாட்டுடையாகவில்லை?

### *விசாரணையில் நீதிபதி கேள்வி!*

பெரியாரின் 'குடிஅரசு' தொகுதிகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடக் கூடாது என்றும், 15 லட்சம் ரூபாய் தங்களுக்கு இழப்பீடு தரவேண்டும் என்றும், சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சார்பில் அதன் ஆயுள் செயலாளர் கி.வீரமணி, உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நீதிபதி சிவக்குமார் முன்னிலையில் கடந்த 14 ஆம் தேதி விசாரணைக்கு வந்தது. கழக சார்பில் வழக்கறிஞர் துரைசாமி, இளங்கோ ஆகியோர் நேர் நின்றார்கள். (ஆஜர்) இந்த வழக்கில் தன்னையும் இணைத்துக் கொள்ளு மாறு, (கி.வீரமணி சார்பில்) மனுதாக்கல் செய்திருந்தார் தஞ்சை இரத்தினகிரி.

"இரத்தினகிரி இந்த வழக்கில் ஏன் இணைத்துக் கொள்ள வேண்டும்? அவர் எந்த வகையில் பாதிக்கப்பட் டுள்ளார்?" என்று அதற்கு முன் நடந்த விசாரணையில் நீதிபதி கேட்டபோது, அடுத்த விசாரணை நாளில் இரத்தின கிரியின் வழக்கறிஞர், இதற்கு பதில் அளிப்பார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள். ஆனால் 14 ஆம் தேதி விசாரணையில் ரத்தினகிரியின் வழக் கறிஞரான ராஜேந்திரன் வரவில்லை.

14 ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்த உடனேயே நீதிபதி, பெரியார் நூல்கள் ஏன் தேசிய மயமாக்கப்பட வில்லை என்ற கேள்வியை எழுப்பினார். வழக்கறிஞர் துரைசாமி கூறுகையில், அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நீதிமன்றத்தில் வெளிப் படையாகக் கூற முடியாது, என்றார்.

பெரியார் நூல்கள் முழுமையாக இன்னும் வெளி வராமல் இருக்கிறதா என்று நீதிபதி கேட்டபோது - பெரியார் கைப்பட எழுதிய நாட்குறிப்பே வெளி வரவில்லை. அதில் 60 ஆண்டுகால வரலாறு அடங்கியிருக்கிறது என்று வழக்கறிஞர் துரைசாமி கூறினார். தொடர்ந்து வழக்கில் வாதிட எவ்வளவு மணி நேரம் தேவைப்படும் என்று நீதிபதி கேட்டபோது, ஒரு மணி நேரம் போதும் என்று வழக்கறிஞர் துரைசாமி கூறினார். கி.வீரமணி சார்பில் நேர் தோன்றிய வழக்கறிஞர் வீரசேகரன், தங்களுக்கு 2 மணி நேரம் தேவை என்று கூறினார்.

நீதிபதி டிசம்பர் 12 ஆம் தேதி மதியம் 2.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்து, வழக்கைத் தள்ளி வைத்தார்.

*விற்பனைக்குத் தயார்!*

**"ஒப்பந்தங்களை சீர்குலைத்தது யார்?"**

- ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாறு; சிங்களர்களின் துரோகங்கள்; பறிக்கப்பட்ட உரிமைகளை விளக்கிடும் நூல்.

நூலின் விலை : ரூ.20

தலைமைக் கழகத்திடமிருந்து நூல்களைப் பெற்று தோழர்கள் பரப்பிட வேண்டுகிறோம்.

**– இது பெரியார் திராவிடர் கழக வெளியீடு.**

## கதை அளக்கிறார் பீட்டர் அல்போன்ஸ்

தமிழக சட்டமன்றத்தில் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் - ஒரு கற்பனைக் கதையை அவிழ்த்துவிட்டிருக்கிறார். ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்துக்குப் பிறகு, பிரபாகரன், மூப்பனாரை சந்தித்தாராம். மூப்பனார், பிரபாகரனை ராஜீவிடம் அழைத்துச் சென்றாராம். அப்போது ராஜீவ் தனது பாதுகாப்புக் கவசத்தை பிரபாகரனுக்கு வழங்கியதாக மூப்பனார், பீட்டர் அல்போன்சிடம் கூறினாராம்.

உண்மைக்கு சிறிதும் தொடர்பில்லாத அப்பட்டமான கற்பனை இது. ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்துக்குப் பிறகு பிரபாகரன், தமிழ் நாட்டுக்குள் வரவே இல்லை. புதுடில்லியிலிருந்து தனி விமானத்தில் அழைத்து வரப்பட்ட பிரபாகரன், பிறகு மீண்டும் ஈழத்துக்கு புறப்பட்டு விட்டார். ஒப்பந்தத்துக்குப் பிறகு இந்தியாவுக்கோ, தமிழ் நாட்டுக்கோ வராத பிரபாகரன், எப்போது மூப்பனாரை சந்தித்தார்? எப்படி ராஜீவை சந்தித்தார்? பிரபாகரன் மீது அவ்வளவு அக்கரை கொண்டிருந்தார் ராஜீவ் என்ற பொய்யை வலியுறுத்துவதற்காக, இப்படியெல்லாம் கதைகளை உருவாக்குகிறார்கள். "After all two thousand boys" என்று விடுதலை புலிகள் பெரிய சக்தியே இல்லை என்று கேலி பேசி, இந்திய ராணுவத்தை அனுப்பி யவர் தான் ராஜீவ் காந்தி. ராஜீவ் காந்தி செய்த துரோகங்கள் தான் ஒன்றா, இரண்டா?

- "தமிழ் ஈழத்தின் ஒரே பிரதிநிதியாக உங்களைத்தான் அங்கீகரித்திருக்கிறோம்" - என்று பிரபாகரனிடம் பொய்யான வாக்குறுதி தந்து, ரகசியமாக தயாரிக்கப் பட்டிருந்த ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக அவரை, தனி விமானத்தில் டெல்லிக்கு அழைத்து வந்தார்கள். அப்படி ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கும் செய்தியே பிரபாகரனிடம் கூறப்படவில்லை. பிரபாகரனிடம் பொய்யான தகவலைக் கூறியவர் - இந்திய அரசின் முதன்மைச் செயலாளர் பூரி.
- பிரபாகரனை டெல்லி அசோகா ஓட்டலில் தங்க வைத்தப் பிறகுதான் ஜெ.என். தீட்சத் (இந்தியாவுக்கான இலங்கைத் தூதர்) ஒப்பந்தத்தைக் காட்டினார். உடனிருந்த பாலசிங்கத்திடம் ஆங்கிலத்தில் இருந்த ஒப்பந்தத்தைப் படித்து, தமிழில் பிரபாகரனுக்கு கூறும்படி உத்தரவிட்டு, இரண்டு மணி நேரம் கெடுவைத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாக வேண்டும் என்று மிரட்டினார்.
- தங்களின் தனி நாட்டுக்காக தமிழர்கள் போராடியபோது, தமிழர்களிடம் கலந்து ஆலோசிக்காமலேயே, சிங்கள அரசுடன் தன்னிச்சையாக ஒப்பந்தம் போட்டு, தமிழர்கள் மீது திணித்தவர்தான் ராஜீவ்.
- இப்படி திணிக்கப்பட்ட ஒப்பந்தத்தை தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். விரும்ப வில்லை, சென்னையில் ஒப்பந்தம் செய்தமைக்காக ராஜீவ்காந்திக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில், பங்கேற்காமல் தவிர்க்க விரும்பி, அமெரிக்கா பயணமாக எம்.ஜி.ஆர். முடிவு செய்தார். அவரது உடைமைகள் எல்லாம் விமானத்தில் ஏற்றப்பட்ட நிலையில், எம்.ஜி.ஆரை வற்புறுத்தி, தனது பாராட்டு விழாவில் பங்கேற்க நிர்ப்பந்தப்படுத்தியவர்தான், ராஜீவ்.
- ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் நம்பிக்கை இல்லை என்று அறிவித்த பிரபாகரன், ஆனாலும், 'இந்தியா நேச நாடு. ராஜீவிடம் எங்கள் தமிழ் மக்களின் பாதுகாப்பை ஒப்படைத்து, ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்" என்று யாழ்ப்பாணம் அருகே முதுமலை என்ற இடத்தில் நடந்த மாபெரும் கூட்டத்தில் அறிவித்தார். ராஜீவ் காந்தியை நம்பி ஆயுதங்களை ஒப்படைத்த பிறகு என்ன நடந்தது?
- சென்னையில் அலுவலகத்தைக் காலிசெய்துவிட்டு, அலுவலகப் பொருள்களை கப்பலில் ஏற்றிக் கொண்டு நிராயுதபாணியாக ராஜீவ் -ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை நம்பி, யாழ்ப்பாணம் நோக்கி வந்த 13 விடுதலைப்புலிகளின் தளபதிகளை சுற்றி வளைத்து, கைது செய்தது சிங்கள ராணுவம். தங்களைக் கைது செய்தது ஒப்பந்தத்துக்கு எதிரானது. ராஜீவ் தலையிட்டு ஜெய வர்த்தனாவிடம் எடுத்துக் கூறி, தங்களை விடுவிக்க வேண்டும் என்று விடுதலைப்

(3 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# கல்லூரிக்குள் சாதிவெறி

*சென்னை அம்பேத்கர் சட்டக்கல்லூரி மாணவர் விடுதியில் சட்டம் பயில வந்த மாணவர்கள் சாதி வெறியில் தங்களுக்குள் நடத்திய 'யுத்தத்தை' தொலைக்காட்சியில் நேரில் பார்த்தவர்கள் பதறிப் போனார்கள். இந்த இளம் தலை முறையையும் சாதிவெறி ஆட்டிப் படைப்பது தமிழகத்துக்கு மிகப் பெரும் தலைகுனிவு. காவல்துறை இந்தக் கொலை வெறித் தாக்குதல்களை பார்வையாளர்களாக வேடிக்கை பார்த்து நின்றது, மகாக் கேவலம்! இதற்கெல்லாம் எந்த சமாதானத்தையும் கூறிட முடியாது.*

*ஆனாலும், தலித் மாணவர்களை மட்டுமே குற்றம்சாட்டி விடவும் முடியாது என்றே கலவரத்தைத் தொடர்ந்து வெளிவரும் செய்திகள் கூறுகின்றன. கல்லூரியில் சாதியமைப்பின் தூண்டுதலால், 'முக்குலத்தோர் மாணவர் பேரவை' என்ற அமைப்பு சட்டக் கல்லூரியில் செயல்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. இவர்கள் டாக்டர் அம்பேத்கர் பெயரை சென்னை சட்டக்கல்லூரிக்கு சூட்டியிருப்பதையே ஏற்க மறுத்து 'தேவர் ஜெயந்தி'க்காக வெளியிட்ட சுவரொட்டியில் 'அரசு சட்டக் கல்லூரி' என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

*முத்துராமலிங்க தேவர் மீது பக்தியும், அதே நேரத்தில் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவரும், தலை சிறந்த மேதையுமான டாக்டர் அம்பேத்கர் மீது வெறுப்பும் கொண்டவர்களாக மாணவர்கள் சிந்தனையில் சாதிவெறி படிந்து நிற்கிறது. தலித் மாணவர்களானாலும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களானாலும், இரு பிரிவினருமே 'பார்ப்பன மனுதர்மத்துக்கு' அடிமையாக்கப்பட்டு, கல்வி உரிமை மறுக்கப்பட்டவர் களாகவே இருந்தனர். டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் மட்டுமல்ல. பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு அரசியல் சட்டத்தின் வழியாக உறுதிப்படுத்தியவரும், டாக்டர் அம்பேத்கர் என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும்.*

*பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் சமூகத்தினரும், பார்ப்பனியத்தால் அடிமைப்பட்டிருந்த சமூகம் தான். தன்னுடைய சமூக மக்களின் மேம்பாட்டிற்காக அவர் உழைத்தார் என்பதை மறுப்பதற்கில்லை. அடிமைத்தளையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்கள் பல்வேறு தடைகளை சந்தித்துதான் முன்னேறி வந்திருக்கின்றன. ஒட்டு மொத்தமாக இந்த சமூகப் போராட்டத்துக்கு வழியமைத்துத் தந்த பெருமைக்குரியவர் பெரியார். சாதி மதக் கடவுள் பெயரால் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத மக்களை தீண்டப்படாதவர்களாகவும், 'சூத்திரர்களாகவும்' நிலைநிறுத்தப்பட்டிருப்பதை எதிர்த்துப் பெரியார் போர்க் குரல் கொடுத்தபோது, அதன் நியாயத்தைப் புரிந்து நேசக்கரம் நீட்டியவர் டாக்டர் அம்பேத்கர். ஆனால், பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் அணுகுமுறையோ மாறுபட்டிருந்தது. 'தேசியத்தோடு தெய்வீகத்தை' இணைத்த அவர், சாதி, மத, கடவுள் எதிர்ப்புகளுக்கு எதிராகவே விளங்கினார். பெரியார் – அண்ணாவின் கருத்துகளை கடுமையாக சாடியவர் முத்துராமலிங்க தேவர். ஒரு சமூகம் விழிப்புற்று, தனது மீட்சிக்குப் போராடுவது என்பது வேறு. அதே சமூகம் தங்களைப் போல் உரிமைக்குப் போராடுகிற சக மக்களை சகோதரர்களாக, போராட்ட இலக்கில் பங்கேற்கும் சக தோழர்களாக பார்க்க வேண்டும். அத்தகைய புரிதல் உருவாக்கப்படாமல், தென் மாவட்டங்களில் நீண்ட நெடுங் காலமாக ஆதிக்க சாதியினரின் கீழ் தலித் மக்கள் அடங்கிப் போக வேண்டியவர்களாகவே வைக்கப்பட்டிருந்தனர். இதற்கு முத்துராமலிங்க தேவர் மீதான 'பக்தியும்' துணையாய் நின்றது. முதுகளத்தூர் கலவரம் உட்பட பல்வேறு சாதி கலவரங்களில் தென் மாவட்டங்களில் ரத்த ஆறு ஓடிய கறை படிந்த வரலாறுகளை மறந்துவிட முடியாது.*

*கல்வி, வேலை, அரசியல் என்று அனைத்து மட்டங்களிலும் பல்வேறு சாதிப் பிரிவினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையான நோக்கமே சமூக சமத்துவத்தை உருவாக்கி, அதன் மூலம் சமூக மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான்; அதுதான் சமூக ஜனநாயகம்.*

*சமூகத்தில் வேறு எந்த அங்கீகாரமும் கிடைக்கப் பெறாத காலத்தில் "சாதிப் பெருமை"யை மட்டும் தலையில் தூக்கி வைத்து ஆடிக் கொண்டிருந்தார்கள். அதே சமூகம் – இன்று, கல்வி, உத்தியோகம், தொழில், உடைமை, வளர்ச்சி என்று பல்வேறு 'சமூகப் பெருமைகளை' பெற்ற பிறகும், போலியான சாதிப் பெருமையை கை கழுவ மறுப்பது ஏன்? அதை விட்டுவிடவே கூடாது என்று கடந்த காலங்களில் சாதி வெறியைப் பிடித்துத் தொங்கியவர்கள் இப்போதும் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் அரசியலும், வாக்கு வாங்கியை குறி வைத்து, அதை நோக்கியே போய்க் கொண்டிருக்கிறது என்பதும் மிகப் பெரும் அவலமாகும்.*

*தமிழகத்தின் சட்டக் கல்லூரிகளில் ஆரோக்கியமான கல்விச் சூழல் கல்விக்கான கட்டமைப்புகள் பாடத் திட்டங்கள் உருவாக்கப்படவில்லை என்ற கருத்தும் உண்டு. பொறியியல் படிக்கும் மாணவர்களைப் போலவோ, மருத்துவம் படிக்கும் மாணவர்களைப் போலவோ, சட்டம் படிக்கும் மாணவர்களுக்கான கல்வியமைப்புகள் இல்லாததும், கல்லூரி வருகை இல்லாமலே மாணவர்கள் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுவிடக் கூடிய சூழல் நிலவுவதும், சட்டக் கல்லூரிகளில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கக் காரணமாகி விடுகிறது என்று கல்வியாளர்கள் தரப்பில் கூறப்படும் கருத்தை புறக்கணித்து விட முடியாது.*

*சாதியமைப்பைப் புறந்தள்ளி, அதை எதிர்க்கக்கூடியவர்களாகவும், சமத்துவத்தை பேணக் கூடியவர்களாகவும், சமூகம் பற்றிய கவலையும், அக்கறையும் உள்ளவர்களுமாக மாணவர்கள் வளர்த்தெடுக்கப்படுவதுடன் அதற்கேற்ற கல்வி அமைப்பையும், கல்வி வளாகச் சூழல்களையும் உருவாக்கிட வேண்டும். ஒரு காலத்தில் அரசியல் களமாகத் திகழ்ந்த சட்டக் கல்லூரிகள் இப்போது சாதிக் களமாக மாறிப் போனதற்கான காரணம் அரசியலே சாதியாக்கப்பட்டு, அரசியல் பின்னுக்குத் தள்ளப்பட்டு, சாதி வெறி மேலே வரத் தொடங்கிவிட்டதுதான். இதில் அரசியல் கட்சிகளுக்கும் பொறுப்பு உண்டு.*

*பிறப்பின் அடிப்படையில் சமூக மதிப்பீடுகளை கட்டமைத்த சாதியை கடந்த தலைமுறைகளோடு விடை கொடுத்துவிட்டு, புதிய தலைமுறை, விரிந்த பார்வையைப் பெறவேண்டும். கல்லூரி வளாகத்துக்குள் 'தேவர் பேரவை', 'நாடார் சங்கம்', 'கவுண்டர்கள் கழகம்' என்றெல்லாம் சாதியமைப்புகள் முளைப்பது சமூக ஆரோக்கியமல்ல!*

*இத்தகைய அமைப்புகளை தடை செய்வது பற்றிகூட அரசு பரிசீலிக்க வேண்டும்!*

*தலித் – பிற்படுத்தப்பட்டோர் மோதல் பார்ப்பனியத்தை உறுதிப்படுத்தி வருகிறது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.*

## மக்களிடம் விளக்குவோம்

# சகோதர யுத்தத்தை உருவாக்கியது யார்?

*சென்ற இதழ் தொடர்ச்சி*

ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்கவில்லை என்றாலும், இந்தியாவை பகைத்துக் கொள்ள விரும்பாமல், தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்க முன் வந்தனர். ஆனாலும், விடுதலைப் புலிகள் இயக்கம் எந்தக் காலத்திலும் இந்தியாவுக்கு அடிபணியாது என்று 'ரா' உளவு நிறுவனம், உறுதியான முடிவுக்கு வந்துவிட்டது. எனவே, ஆயுதங்களை ஒப்படைத்துவிட்ட விடுதலைப்புலிகளை, பலவீனமாக்கி செயலிழக்கச் செய்யும் திட்டங்களை உருவாக்கியது. இந்திய ராணுவத் தின் தளபதியாக இருந்த லெப்டினென்ட் ஜெனரல் தீபிந்தர் சிங் பிரபாகரனை சந்தித்தபோது, பிரபாகரனே அவரிடம் நேரில் நடத்திய உரையாடலை இந்திய ராணுவத் தளபதியாக இலங்கையில் செயல்பட்ட தீபிந்தர் சிங் தனது நூலில் பதிவு செய்துள்ளார்:

"1987 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதி, யாழ்ப்பாணத்தில் பிரபாகரனை நான் சந்தித்தபோது, தங்களுக்கு நம்பகமான ஒரு தகவல் கிடைத்துள்ளது என்றார். நாங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டதால், மிகவும் பலவீனமாகி விட்டோம் என்று 'ரா' உளவு நிறுவனம் கூறி வருவதோடு, எங்களோடு ராணுவ மோதலை நடத்துமாறு, ஏனைய தமிழ் குழுக்களைத் தூண்டிவிட்டு வருகிறது. குறிப்பாக அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று நட்சத்திரக் குழுக்களை எங்களுக்கு எதிராகப் பயன்படுத்த 'ரா' திட்டமிட்டுள்ளது என்று பிரபாகரன் என்னிடம் கூறினார். இது மிகக் கடுமையான குற்றச்சாட்டு என்பதால், அன்று மாலையே இந்திய ராணுவத் தலைமையகத்துக்கு தெரிவித்து, இது பற்றி விசாரிக்குமாறு கூறினேன். அது உண்மையல்ல என்று அடுத்த நாள் எனக்கு பதில் வந்தது. அதை பிரபாகரனை சந்தித்துத் தெரிவித்தேன். எனது மறுப்பைக் கேட்ட பிரபாகரன் மிகவும் அமைதியாக பதில் சொன்னார். நீங்கள் உண்மையானவராக இருக்கிறீர்கள். ஆனால், டெல்லியிலிருந்து உங்கள் மூலமாக தரப்பட்ட தகவல் உண்மையல்ல; நான் கூறியதுதான் உண்மை என்று தனது குற்றச்சாட்டில் உறுதியாக இருந்தார்."

- லெப்டினன்ட் ஜெனரல் தீபிந்தர்சிங் எழுதிய "The I.P.K.F. in Srilanka" நூல் - பக்.56

பிரபாகரன் கூறியதுதான் நடந்தது. போட்டிக் குழுக்களை உருவாக்கி சகோதர யுத்தத்தை தொடங்கி வைத்ததே 'ரா' நிறுவனம் தான். அதற்காகவே டக்ளஸ் தேவானந்தாவை சென்னை சிறையிலிருந்து விடுவித்து, இந்திய ராணுவ விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தது 'ரா'.

தனது கட்டுப்பாட்டுக்குள் வர மறுத்து - தமது இலக்கில் உறுதியாகத் திகழ்ந்த விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்தி, அவர்களுக்கு எதிராக போட்டிக் குழுக்களை உருவாக்கியும், அதில் வெற்றி பெற முடியாமல் கரியைப் பூசிக் கொண்டு, 1990-ல் இந்திய ராணுவம், இந்தியா திரும்பிய போது, 'ரா' உருவாக்கிய ஈ.என்.டி.எல்.எப்., ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய குழுக்களையும் இந்தியாவுக்கு தங்களுடனே அழைத்து வந்துவிட்டது உளவுத் துறை. அப்போது இந்தப் போட்டிக் குழுக்களுக்கு முழு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தது, இந்திய உளவு நிறுவனம் தான். ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்தைக் குலைக்க 'ரா' எவ்வளவு முறைகேடுகளை செய்தது என்பதற்கு இவைகள் சாட்சியங்கள்!

இதற்கான ஆதாரங்கள் - ராஜீவ் கொலையில் அன்னிய சதி பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணையத்தின் அறிக்கையில் அரசு ஆவணங்களோடு பதிவாகியுள்ளன. போட்டிக் குழுக்களையும் தமிழகத்துக்கு அழைத்து வருவதை தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி தலைமையில் நடந்த தி.மு.க. ஆட்சி எதிர்த்தது. இப்படிப் போட்டிக் குழுக்கள் தமிழகத்துக்கு வந்தால், தமிழ்நாட்டில் சகோதர யுத்தங்கள் நடக்கும் ஆபத்துகள் இருப்பதை முதல்வர் கலைஞர் கருணாநிதி சுட்டிக் காட்டினார். அன்றைய பிரதமர் வி.பி.சிங்குக்கும் இதை கடிதம் மூலம் எழுதினார். ஆனால், இந்திய உளவுத் துறை இதை செவி மடுக்காமல் போட்டிக் குழுக்களை இந்தியாவுக்குக் கொண்டு வருவதில் தீவிரம் காட்டியது.

மத்திய அரசிடமுள்ள உளவுத் துறை தொடர்பான ஆவணங் களில் இது குறித்து, ஏராளமான செய்திகள் பதிவாகியுள்ளன. அவற்றை சுருக்கமாகப் பார்க்கலாம். (தொடரும்)

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கவில்லை. கதையும் முடிந்து விடுகிறது. பொதுவாக வேதாளம் கதை சொல்லி முடித்ததும், கதையைக் கேட்ட விக்கிரமாதித்தனிடம் சில கேள்விகளைக் கேட்கும் என்றும் அதற்கு விக்கிரமாதித்தன் சரியான பதிலைச் சொல்லவில்லையென்றால் அவனுடைய தலை வெடித்துச் சிதறிவிடும் என்றும் வேதாளம் கூறும். அது இந்தக் கதையில் ஏன் நடைபெறவில்லை?

இங்கு வேதாளமும், விக்கிரமாதித்தனும் கேள்வி பதிலாகவே கதை கூறி முடிக்கின்றனர். கதையைப் படிப்பவர்களின் காதில் இதமாக பூ சுற்றவேண்டும் என்பதற்காகவே விக்கிரமாதித்தன் கேள்விகளைத் தவிர்க்கின்றான். எனவே, கதை சொல்லி முடித்துவிட்டப் பின் வேதாளம் சந்தோஷமாக 'மீண்டும்' முருங்கை மரம் ஏறிவிடுகிறது. விக்கிரமாதித்தன் தனது பணி முடிந்த 'திருப்தியோடு' நாடு திரும்பி விடுகின்றான்.

மீண்டும் விக்கிரமாதித்தன் அந்த கொழும்புக் காட்டுப்பகுதி வழியாக செல்வான். அப்பொழுதும் அவனைப் பார்த்து அந்த வேதாளம் சிரிக்கும், என்னவென்று கேட்பான், கதையை சொல்லும் வேதாளம். அது ஆங்கிலத்தில் தலைப்புக் கதையாகவும், கலந்துரையாடலாகவும் வெளி வரும்.

அதுவரை ஆவலுடன் காத்திருப்போமாக...

# இனப்படுகொலைக்கு எதிராக கழகத்தின் போராட்டங்கள்

## உடுமலை

சிங்கள இனவெளி அரசின் இராணுவத்தால் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டு வரும் ஈழத் தமிழர்களின் அவலத்தை விளக்கியும், தொப்புள் கொடி உறவான தமிழ் நாட்டுத் தமிழர்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் கூறிடும், "எமக்காகவும் பேசுங்களேன்" குறுந்தகடுகள் உடுமலைப்பேட்டை பகுதியில் கழகத்தால் இலவசமாக விநியோக்கப் பட்டது.

உடுமலைப் பேட்டை நகரத்தில் கடைவீதிகளுக்கும் பொது மக்களுக்காக 1000 குறுந்தகடுகளும் காரத் தொழுவு, கணியூர், மடத்துக்குளம் பகுதியிலுள்ள கடைகள் ஒவ்வொன்றிற்கும் 500 குறுந்தகடுகளும் கழகத்தோழர்கள் 30.10.2008 அன்று முதல் விநியோகிக்கப்பட்டது.

கழக மாவட்டச் செயலாளர் கா. கருமலையப்பன் தலைமையில் கழக மாநில தகவல் தொடர்பாளர் ந. பிரகாசு, உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன், காரத் தொழுவு மயில்சாமி, ஜோத்தம்பட்டி மோகன், சின்னவீரம்பட்டி சிவக்குமார், தமிழ் வேந்தன், கொங்கு மண்டல ஆய்வு மையம் இரா. இரவிக்குமார் உள்ளிட்ட தோழர்கள் குறுந்தகடு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறையில் ராஜபக்சே உருவ பொம்மை எரிப்பு

மயிலாடுதுறை நகர பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக 12.11.08 புதன் அன்று மாலை 3 மணியளவில் சிங்கள இனவெறியின் ராஜபக்சே உருவ பொம்மையை கழகத் தோழர்கள் எரித்தனர்.

மாலை 3 மணியளவில் மயிலாடுதுறை மணிக்கூண்டு அருகிலிருந்து புறப்பட்ட கழகத் தோழர்கள், இனவெறியின் ராஜபக்சே உருவ பொம்மையை ஊர்வலமாக எடுத்து வந்தனர். உருவ பொம்மையை செருப்பால் அடித்தும், "இரத்த கரை படிந்த இனவெறி ராஜபக்சேவே இந்தியாவை விட்டு வெளியேறு" என்று முழக்கமிட்டவாறு மயிலாடுதுறை தலைமை அஞ்சலகம் முன்பாக ராஜபக்சே உருவ பொம்மையை எரித்தனர்.

மயிலாடுதுறை நகர செயலாளர் அன்பு தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில், நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர், நகரத் துணைத் தலைவர் இராஜராஜன், நகர துணைச் செயலாளர் முகிலன், குத்தாலம் ஒன்றியச் செயலாளர் இயற்கை, மாவட்ட செயலாளர் மகேசு, இரமேசு, இராஜா மற்றும் தமிழர் உரிமை இயக்க தோழர் இராஜு ஆகிய 9 தோழர்களை மயிலாடுதுறை காவல் துறையினர் கைது செய்தனர். பின்பு 7 மணிக்கு அனைவரையும் விடுதலை செய்தனர்.

போராட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒன்றிய பொறுப்பாளர்கள் மோகன்குமார், மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கண்டன பேரணி – ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறையில் ஈழத் தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் படுகொலை செய்யும் சிங்கள இனவெறி அரசையும், அதற்கு துணை போகும் இந்திய அரசையும் கண்டித்து, அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்கள் அடங்கிய "ஈழத் தமிழர் ஆதரவு ஒருங்கிணைப்புக் குழு" சார்பாக 25.10.08 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கண்டன பேரணி - ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எழுச்சிமிகு கண்டன பேரணியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டச் செயலாளர் இரெ. இரும்பையன் துவக்கி வைத்தார். அனைத்து கட்சிகளையும் சார்ந்த ஆண்கள் - பெண்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். கண்டன பேரணி காந்திஜி சாலை, காமராஜர் சாலை, கண்ணாரத் தெரு ஆகிய முக்கிய வீதிகளில் வந்து இறுதியில் சின்னக் கடைவீதியை வந்தடைந்தது. பேரணியில் கலந்து கொண்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் அனைவரும் பறை சாற்றும் வண்ணம், காயக்கட்டுகளுடன் வந்து, "இலங்கைக்கு ஆயுதம் அனுப்பாதே! ராடாரை திரும்பப் பெறு! ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து சிறைச் சென்ற சீமானுக்கும், அமீருக்கும், வைகோவிற்கும் நன்றி கூறுகிறோம்!" என்ற முழக்கங்களோடு தோழர்கள் அணி வகுத்து வந்தனர்.

உணர்ச்சிப் பூர்வமாக அமைந்த கண்டன பேரணியில் ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காக அரசியல் கட்சிகள் ஒன்றாக இணைந்து குரல் கொடுத்தது, பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பையும், பாராட்டையும் பெற்றது.

பின்பு சின்னக் கடைவீதியில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தங்க. அய்யாசாமி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வேலு. குபேந்திரன், பகுஜன் சமாஜ் கட்சியின் மாவட்ட பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சங்கர், பெரியார் திராவிடர் கழக நாகை மாவட்ட துணைத் தலைவர் ரசீத்கான் மற்றும் சீர்காழி நகர செயலாளர் பெரியார் செல்வம், தமிழர் உரிமை இயக்க அமைப்பாளர் பேரா. முரளிதரன், தமிழின உணர்வாளர் பேராசிரியர் த. ஜெயராமன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒன்றியச் செயலாளர் மோகன்குமார் ஆகியோர் சிங்கள அரசையும், இந்திய அரசையும் கண்டித்து, கண்டன உரையாற்றினர். இறுதியாக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் மு.க.பெரியசாமி கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட அமைப்பாளர் நா. இளையராசா தொகுத்து வழங்கினார். முடிவில் மயிலாடுதுறை நகரச் செயலாளர் ஏகலைவன் அன்பு நன்றி கூறினார்.

கண்டன பேரணி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கழகத் தோழர்கள் : மாவட்ட செயலாளர் தெ. மகேசு, மாவட்ட அமைப்பாளர் நா. இளையராஜா, நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர், நகரத் துணைத் தலைவர் இராஜா, நகர துணைச் செயலாளர் முகிலன், குத்தாலம் ஒன்றியத் தலைவர் ஜீவா, ஒன்றியச் செயலாளர் இயற்கை, சந்துரு, தெ. இரமேசு, கே.ஜி.ஆர். உதயகுமார், ம. ஸ்ரீதர், வா. வினோத், முத்தழகன், இராஜா, புத்தகச் சோலை விஜி, குணராஜ், கவி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கொட்டும் மழையிலும் ஈழக்காட்சிகள் ஒளிப்பரப்பு

மயிலாடுதுறை கழகம் சார்பில் 20.10.08 திங்கள் அன்று மாலை 6 மணி முதல் இரவு 10.30 மணி வரை இலங்கை இனவெறி ராணுவத்தால் அப்பாவி ஈழத் தமிழர்கள் படும் நெஞ்சை உலுக்கும் துயரங்கள் அடங்கிய வீடியோ காட்சிகள் மயிலாடுதுறையில் ஒளிபரப்பப் பட்டது.



மாலை 6 மணியளவில் சின்னக் கடைவீதியிலும், இரவு 7.30 மணியளவில் முத்து வக்கீல் சாலையிலும், இரவு 9 மணியளவில் இரயிலடி கடைவீதியிலும் வீடியோ காட்சிகள் ஒளிபரப்பப்பட்டது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கழகத்தோழர்கள் மழையில் நனைந்து கொண்டு வீடியோ காட்சிகளை விளக்கி பிரச்சாரம் செய்தது, பொது மக்களிடம் வரவேற்பை பெற்றது. ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து சிறைச் சென்ற இயக்குனர் சீமானின் உணர்ச்சிமிகு உரையும் மற்றும் நடிகர் வடிவேலு, இயக்குனர் பாரதிராஜா ஆகியோரது உரையும் அடங்கிய சி.டி.யும் ஒளிபரப்பப்பட்டது.

பிரச்சாரத்தின் போது பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய ஆய்வு நூலான "ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி" என்ற நூலை கழகத் தோழர்கள் விற்பனை செய்தனர். நூலை பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்கி படித்தனர்.

மயிலாடுதுறை பகுதியில் ஈழத் தமிழர்களின் அவலங்களை படம் பிடித்துக் காட்டும் வீடியோ காட்சிகளை பெரியார் திராவிடர் கழகம் பிரச்சாரம் செய்ததை பொது மக்களும், அனைத்து அரசியல் கட்சிகளின் பொறுப்பாளர்களும் கழகத் தோழர்களை வெகுவாக பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர்: நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர், செயலாளர் ஏகலைவன் அன்பு, நகரத் துணைத் தலைவர் ராஜா, துணைச் செயலாளர் முகிலன், மாவட்டத் துணை தலைவர் ரசீத்கான், அமைப்பாளர் நா. இரயராசா, செயலாளர் தெ.மகேசு, குத்தாலம் ஒன்றியத் தலைவர் ஜீவா, செயலாளர் இயற்கை, புத்தகச்சோலை விஜி, குணராஜ், உதயகுமார், முரளி, இராஜா, கார்த்திக், தமிழர் உரிமை இயக்க அமைப்பாளர் பேரா. முரளிதரன், பேரா. ஜெயராமன் ஆகியோரும் மற்றும் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

*புலிகள் தரப்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை ராஜீவும், அவரது தூதுவர்களும் காதில் போட்டுக் கொள்ளாததால், 13 விடுதலைப் புலிகளும் உயிருடன் சிங்கள ராணுவத்தின் பிடியில் சிக்கிக் கொள்ள விரும்பா மல், சைனைட் விஷக் குப்பிகளைக் கடித்து, வீரமரணமெய்தினர். ராஜீவை நம்பி, ஏற்றுக் கொண்ட ஒப்பந்தத்துக்காக ராஜீவ் காந்தி தந்த பரிசு இதுதான்!*

- *ஒப்பந்தத்தை ஏற்று, விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து வரும் போது இந்திய இராணுவம் வேறு சில குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கும் துரோகத்தை செய்தது. போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக அறிவித்த ஜெயவர்த்தனா, அதை அமுல்படுத்த மறுத்தார். ஒப்பந்தத்துக்கு எதிராக ஜெயவர்த்தனா செயல்படுவதை சுட்டிக்காட்டி, இந்தியா தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துதான் அகிம்சை வழியில் திலீபன் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்தார்.*
- *திலீபன் உண்ணாவிரதம் தொடங்கிய நாள் 1987 செப்.15. செப்டம்பர் 24 ஆம் தேதி பிரபாகரன், ராஜீவ் காந்திக்கே கடிதம் எழுதி, திலீபன் உண்ணாவிரதத்தின் கோரிக்கையை செவிமடுக்குமாறு கேட்டுக் கொண்டார். ராஜீவ் புறக்கணித்தார். பலாலி வரை வந்த இந்தியத் தூதர் தீட்சத்தை மரணத்துடன் போராடும் திலீபனை வந்து சந்திக்குமாறு கேட்டுக் கொண்டபோது, தீட்சத் சந்திக்கவே மறுத்தார். ராஜீவுக்கு பிரபாகரன் கடிதம் எழுதிய அடுத்த இரண்டாவது நாளிலேயே திலீபன், வீரமரணத்தை தழுவினார். ராஜீவை நம்பி ஆயுதங்களை ஒப்படைத்ததற்கு ராஜீவ் வழங்கிய மற்றொரு பரிசு இது!*
- *ஈழத்தில் நுழைந்த இந்திய ராணுவம் முதலில் தமிழர்கள் நடத்திய 'ஈழ முரசு', 'முரசொலி' நாளேடுகளின் அலுவலகங்களில் குண்டுகளை போட்டு தகர்த்து, தகவல் தொடர்புகளை துண்டித்தது. அந்த நிலையில், 1987 அக்.25 ஆம் தேதி பிரபாகரன், ராஜீவுக்கு மற்றொரு கடிதம் எழுதினார். "எங்களைத் தாக்காதீர்கள்; போரை நிறுத்துங்கள்" என்று அக்கடிதத்தில் வேண்டுகோள் விடுத்தார். ராஜீவிடமிருந்து எந்த பதிலும் இல்லை. 1988 ஜனவரி, 12 ஆம் தேதியும், மார்ச் 9 ஆம் தேதியும் பிரபாகரன் நியாயம் கேட்டு ராஜீவுக்கு கடிதங்கள் எழுதினார். எந்த பதிலும் இல்லை.*
- *கடலில் கப்பலில் வந்த 13 புலிப்படை தளபதிகள் இறந்த பிறகு, இந்தியாவிலிருந்து ஜானி என்ற விடுதலைப் புலியை இந்திய அரசே தூதராக அனுப்பி, பிரபாகரனிடம் பேசச் சொன்னது. உளவுத் துறையையும், ராஜீவையும் நம்பி, தூதராக சென்ற ஜானியை ஈழத்தில் அவர் காட்டுக்குள் வந்தபோது இந்திய ராணுவமே சுட்டுக் கொன்றது. 'நான் இந்தியாவின் தூதராக வருகிறேன்' என்று கூறிய நிலையிலும் ஆயுதமின்றி, உளவுத் துறையின் தூதராக வந்த விடுதலைபுலியை இந்திய ராணுவமே சுட்டுக் கொன்றது.*

*இவ்வளவு துரோகத்துக்கும் காரணமாக இருந்தவர் ராஜீவ் என்பது கரை படிந்த வரலாறு. பீட்டர் அல்போன்சு போன்றவர்கள் உண்மைகளுக்கு மாறான கற்பனைகளை பேசினால், இந்த வரலாற்று உண்மைகளை நாம் பட்டியலிட்டுத் தானே ஆக வேண்டும்!*

PURATCHI PERIYAR MUZHAKKAM    TAMIL WEEKLY    REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# தனது முயற்சியில் மனம் தளராத விக்கிரமாதித்தன்

*‘இந்து’ நாளேடு வெளியிட்ட ராஜபக்சே சிறப்புப் பேட்டியின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தி ‘வெப்டுனியாடாட்காம்’ இணையதளம் வெளியிட்ட கட்டுரை.*

விக்கிரமாதித்தன் கதை என்பது மிகவும் சுவராசியமானது - சிறுவர்களுக்கு மட்டுமல்ல, இளைஞர்களுக்கும் முதிர்ந்தவர்களுக்கும் கூட - அது சுவராசியமானது.

அந்தக் கதை இப்படி ஆரம்பிக்கும், “தனது முயற்சியில் என்றுமே மனம் தளராத விக்கிரமாதித்தன், காட்டைக் கடந்து சென்றுக் கொண்டிருந்தான். ஒரு முருங்கை மரத்தை அவன் கடந்து கொண்டிருந்தபோது, அதில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பிணத்தைக் கண்டான். அதனை இறக்கி அடக்கம் செய்வதற்காக மரத்திலேறி, பிணம் தொங்கிக் கொண்டிருந்த கயிற்றை அறுத்து, அதனை தனது தோளில் சுமந்து கொண்டு இறங்கியபோது, அதற்குள் இருந்த வேதாளம் லக்க லக்கவென்று சிரித்தது.

ஏன் சிரிக்கிறாய் வேதாளமே? என்று விக்கிரமாதித்தன் கேட்க, ஏற்றுக் கொண்ட முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தா, இப்படித்தான் அன்றொரு நாள்... என்று கூறி, ஒரு கதையை சொல்லத் துவங்கும். வேதாளத்தின் கதையைக் கேட்டு முடித்த விக்கிரமாதித்தனிடம் அந்த வேதாளம் சில கேள்விகளைக் கேட்கும். அந்த கேள்விகளுக்கு விக்கிரமாதித்தன் சரியான பதிலை கூறா விட்டால் அவனுடைய தலை சுக்கு நூறாக வெடித்துவிடும் என்று எச்சரிக்கும்.

கதையை நன்கு புரிந்து கொண்டு கேட்ட விக்கிரமாதித்தன், வேதாளத்தின் கேள்விகளுக்கு சரியான பதிலைத் தருவான். அவனுடைய பதிலைக் கேட்டு அசந்து போகும் வேதாளம் அவனை பாராட்டிவிட்டு, தான் குடி கொண்டிருந்த அந்த உடலை விட்டு வெளியேறி மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்ளும்.. இப்படி முடியும் அந்தக் கதை.

இந்தக் கதைக்கு இன்றைக்கு என்ன அவசியம் வந்தது என்று கேட்கத் தோன்றுகிறதா? இப்படிப்பட்ட கதைகளுக்கு அடிப்படை உள்ளதா? வேதாளம் எப்படி பேசும்? என்றெல்லாம் அறிவுப்பூர்வமான கேள்விகளை எழுப்பினால் இந்தக் கதை இனிக்காது. கேள்விகளைக் கேட்காமல், அதில் கூறப்படுவதையெல்லாம் நம்பி, படித்துக் கொண்டே வந்தால் மட்டுமே சுவராசியமாக இருக்கும்.

எனவே, சொல்லுவதையெல்லாம் கதைகளையெல்லாம் நம்பும் ‘மன பக்குவம்’ உள்ள நிலையிலேயே இதையெல்லாம் படித்து நாமும் வளர்ந்துள்ளோம். என்றாலும், இன்றைக்கு நாம் இந்தக் கதைகளையெல்லாம் படித்து நமது அறிவு நிலையை உயர்த்திக் கொள்ள முயற்சிப்பதில்லை. ஆனால், இப்படிப்பட்ட கதைகளை நம்பும் மனோ நிலை அல்லது முதிர்ச்சி இருந்தால் மட்டுமே இன்றைய உலகில் நடக்கும் பல விடயங்களை நம்மால் ‘உண்மை’யென்று நம்பி ஏற்றுக் கொள்ள முடியும்.

இராஜதந்திரம் என்றும், பத்திரிகை தர்மம் என்றும் கூறிக் கொண்டு நமக்கு சொல்லப்பட்டு வரும் செய்திகளையும், பேட்டிகளையும் படிக்கும்போது, விக்கிரமாதித்தன் கதை படிக்கும் சிறுவர்கள் என்று நம்மை இவர்கள் நினைக்கின்றனரோ என்றே நினைக்கத் தோன்றுகிறது.

நமது நாட்டின் பாரம்பரியம் மிக்க ஒரு பத்திரிகை சிறிலங்க அதிபர் ராஜபக்சேயை சந்தித்து, மிகுந்த சிரத்தையுடன் பேட்டி கண்டு அதனை வெளியிட்டிருப்பதைப் படிக்கும் போது வேதாளமும், விக்கிரமாதித்தனும் நடத்திய உரையாடலைப் படிக்கும் ‘ஃபிலிங்’ நமக்கு ஏற்பட்டது. அந்த அளவிற்கு அந்தப் பேட்டியில் ‘உண்மை’ குறட்டை விட்டுக் கொண்டு உறங்கியது. *(தூங்கும் எதனையும் தமிழர்கள் எழுப்ப மாட்டார்கள். அது உண்மையாக இருந்தாலும் என்ற அதீத நம்பிக்கையுடன்)* இருவர் நடத்திய உரையாடல் இங்குள்ளவர்களால் சிரத்தையுடன் விவாதிக்கப்பட்ட போது நமக்கு மூடில்லாமலேயே சிரிப்பு வந்தது.

இலங்கைத் தலைநகர் கொழும்புவில் ஒரு அமைதியான சூழலில் எடுக்கப்பட்ட அந்தப் பேட்டியில், சிறிலங்க அதிபர் மகிந்த ராஜபக்சே கூறுகிறார், “தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் ரிதியான தீர்வு காண்பதென்று நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் மொழி, அரசியல் உள்ளிட்ட உரிமைகளை உள்ளடக்கிய அதிகாரப் பகிர்வின் மூலம் சிறிலங்காவின் ஒற்றுமைக்கு உட்பட்டு, அந்த அரசியல் தீர்வு இருக்கும்” என்று கூறியதை தலைப்புச் செய்தியிட்டு வெளியிட்டது அந்தப் பாரம்பரிய நாளிதழ்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உறுதியுடன் உள்ளதாகக் கூறும் தாங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக முறித்துக் கொண்ட போது, “தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையின் வாயிலாக ஒரு அரசியல் தீர்வு உருவாகும் வழி பிறந்துள்ளது” என்று கூறினீர்களே? அதன் பொருள் என் என்று கேட்கவில்லை. *(வேதாளம் கதைவிடும் போது விக்கிரமாதித்தன் இடைமறித்து எதுவும் பேசினானா? இல்லையே. அதனால் கேட்கவில்லை)*

“எனது தமிழ் சகோதரர்களுக்கு ஜனநாயக, அரசியல், மொழி உரிமைகள் அந்தத் தீர்வில் இருக்கும்” என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், உங்களது இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, “சிறிலங்கா சிங்களவர்களின் தேசம். தொன்றுதொட்டு இங்கு சிங்கள அரசர்கள்தான் ஆண்டு வந்தனர். பெரும்பான்மையாக உள்ள சிங்களவர்களின் மேலாதிக்கத்தை தமிழர்கள் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்” என்று பேசியது அல்லாமல், செய்தியாளர்கள் கேட்கும்போது அதனை நியாயப்படுத்தியும் பேசினாரே? அதற்கு உங்கள் பதிலென்ன என்றும் வினவவில்லை. தமிழ் சிஸ்டர்ஸ் அண்ட் பிரதர்ஸ் என்று விவேகானந்தர் ரேஞ்சுக்கு பேசுகிறீர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்தப் பிறகு தானே கொழும்புவிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர் என்றும் கேட்கவில்லை. 1500 பேர் கடத்தப்பட்டு காணடிக்கப்பட்டதாக ஐ.நா. மனித உரிமை அமைப்பு அறிக்கை கொடுத்ததே ஏன்? என்றும் கேட்கவில்லை. *(வேதாளம் பேசுகிறது, விக்கிரமாதித்தன் கேட்டுக் கொண்டிருக்கின்றான், நாமும் கதையை மேற்கொண்டு படிப்போம்)*

“ஒரு அரசியல் பிரச்சினைக்கு இராணுவ தீர்வு இருக்காது. இருக்கவும் முடியாது. இதில் நான் எப்போதும் உறுதியாக இருந்துள்ளேன். பயங்கரவாதிகள்தான் இராணுவத் தீர்வு. இந்நாட்டில் வாழும் மக்களுக்குத் தேவை அரசியல் தீர்வு தான்” என்று ஆணித்தரமாக ராஜபக்சே கூறியுள்ளார்.

இவ்வளவு உறுதியாக உள்ள நீங்கள் இதனை உங்களுடைய தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளீர்களா? என்று கேட்கவில்லை. அது மட்டுமா? தமிழர்களுக்கு தற்பொழுதுள்ளதை விட எந்த ஒரு கூடுதல் உரிமையும் தரக் கூடாது என்று கூறி வரும் சிங்கள பேரினவாத கட்சியான ஜனதா வி முக்தி பெரமுணாவுடன் எந்த அடிப்படை யில் கூட்டு வைத்துப் போட்டியிட் டீர்கள் என்றோ அல்லது அவர்களின் ஆதரவுடன் எந்த அடிப்படையில் ஆட்சி அமைத்தீர்கள் என்றோ கேட்க வில்லை. *(தொடர்ந்து கதையைப் படியுங்கள்)*

“இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க எங்களது அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13வது சட்ட திருத்தத்தினைக்கூட நடைமுறைப் படுத்த முடியாததற்குக் காரணம் பிரபாகரனும் அவருடைய ஆட்களும் தான்” என்று ராஜபக்சே கூறியதும், இயற்கையாகவே இரண்டு கேள்விகளை எழுப்பியிருக்க வேண்டும். ஒன்று, அந்த அரசமைப்புத் திருத்தத்தை எதிர்த்து ஜனதா விமுக்தி பெரமுணா தொடர்ந்த வழக்கில், அத்திருத்தம் செல்லாது என்று சிறிலங்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இரண்டு, கடந்த வாரம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தமிழர் பிரச்சினை தொடர்பாக *(தமிழ் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பின் காரணமாக)* விவாதம் நடந்தபோது பேசிய ஜனதா விமுக்தி பெரமுணா கட்சி உறுப்பினர் விஜித ஹெராத், “இந்தியாவின் வற்புறுத்தலுக்குப் பணிந்து 13வது சட்ட திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவீர்களா?” என்று கேட்டதற்கு, அயலுறவு அமைச்சர் ரோஹித போகல்லகாமா, “அனைத்துக் கட்சி பரிந்துரைக்குப் பின் அதைப் பரிசீலிப்போம்” என்று வழுக்கலாக பதிலளித்துள்ளாரே? என்று கேட்டிருக்கலாம். *(ஆனால் விக்கிரமாதித்தன் குறுக்கிடவில்லை, கதைதொடர்கிறது)*

மீனவர் பிரச்சினையில் தான் எவ்வளவு தெளிவு! “நான் மீன் வளத்துறை அமைச்சராக இருந்துள்ளேன். அப்பொழுது எல்லையைக் கடந்து சென்ற மீனவர்கள் *(இந்திய கடலோரப் படையால்)* பிடித்துச் செல்லப்பட்டபோது நான் அங்கு வந்து பேசியிருக்கிறேன். அவர்களுக்கு சர்வதேச கடல் எல்லை என்பதெல்லாம் தெரியாது. மீன் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்குச் சென்று அவர்கள் மீன் பிடிப்பார்கள். இது மனிதாபிமான பிரச்சினை. இதனை நாங்கள் ‘நன்கு’ புரிந்து கொண்டுள்ளோம். எனவே மீனவர்களை தண்டிக்கலாமா?” என்று கூறியவரிடம், அப்படியானால் நீங்கள் சிறிலங்க அதிபராக வந்தப் பிறகும் ஏராளமான தமிழக மீனவர்களை உங்கள் கடற்படை தொடர்ந்து சுட்டுக் கொன்றது ஏன்? என்று கேட்கவில்லை *(கதை சுவாரஸ்யம் கெட்டு விடுமல்லவா?)*

“சிங்களர், தமிழர், முஸ்லிம், கிறித்துவர் என்று இங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் சிறிலங்கா சொந்தம். எல்லா மத, மொழி, இன மக்களும் சம உரிமையுடனும், சுதந்திரத்திடனும் வாழ வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம். அதனால் தான் ஐ.நா.வில்கூட நான் தமிழில் பேசினேன்” என்று கூறி முடிக்கும் போதும், அப்படியானால் தமிழர்களுக்கு எந்த உரிமையையும் அளிக்கக் கூடாது என்று கூறும் கட்சிகளான ஜனதா விமுக்தி பெரமுணாவும், ஜாதிக ஹேல உருமையாவும் உங்களையும், உங்கள் ஆட்சியையும் ஆதரிப்பதேன்? என்று

(2 ஆம் பக்கம்)

**அன்பான வேண்டுகோள்!**

**செய்திகள் - படங்களை தோழர்கள் கணினி வழியாக இல்லாமல் அஞ்சல் வழியாகவே அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**- ஆசிரியர்**

**திரிபுவாத திம்மன்கள் – யார்?**
**கட்டுரைத் தொடர்**
**அடுத்த வாரம்**


## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கழகம் பங்கேற்பு

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த 17 ஆம் தேதி சென்னையில் ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக சென்னையில் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கழக சார்பாக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றார். ஈழத்தில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி நவம்பர் 25 ஆம் தேதி மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஈழத்தில் போரை நிறுத்த மறுக்கிறது இலங்கை அரசு. “தீவிரவாதத்துக்கு” எதிரான போரைத் தொடருமாறு மத்திய அரசு கூறி, போர் நிறுத்தம் கோரும் தமிழக மக்களின் ஒருமித்த உணர்வை புறந்தள்ளி விட்டது. எனவே மத்திய அரசை நிர்ப்பந்தித்து, கண்டித்து, தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்க அனைத்துக் கட்சிக் கூட்டம் முடிவு செய்தது. கூட்டத்துக்கு தலைமையேற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன், இது தமிழக அரசு கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு போட்டியான கூட்டமல்ல. அந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தப் போர் நிறுத்தக் கோரிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டம் என்று விளக்கியதோடு, அரசியல் கருத்து மாறுபாடுகளை ஒதுக்கி, தமிழகத்தின் ஒருமித்த குரலாக ஒலிப்போம் என்று குறிப்பிட்டார்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 20th November 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 நவம்பர் 27, 2008 புரட்சி 7 முழக்கம் 48 விலை : ரூ.2.50


## பாடையில் ஏற்றப்பட்டார் இராஜபக்சே

தமிழர்களை கொன்று குவிக்கும் சிங்கள வெறியன் - கொலைகாரன் இராஜபக்சேயை பாடைகட்டித் தூக்கும் போராட்டம் நடந்தது.




பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் ஈரோட்டில் எம்.ஜி.ஆர். சிலை அருகே, கொலைகாரன் சிங்கள வெறியன் ராஜபக்சே இந்தியா வந்துள்ளதை கண்டித்து, இராஜபக்சேவை பாடைகட்டி தூக்கி ஊர்வலமாக வந்தனர். சங்கு ஊதிக் கொண்டும், சேகண்டி அடித்துக் கொண்டும், மேளம் அடித்துக் கொண்டும் ஊர்வலமாக 100க்கும் மேற்பட்ட தோழர்கள் வி.எஸ்.பி. தியேட்டர் முன்பாகப் புறப்பட்டு வந்தனர். ஊர்வலம் எம்.ஜி.ஆர். சிலையை வந்தடைந்தபோது காவல் துறை இடைமறித்து அனைவரையும் கைது செய்தது.

"இராஜபக்சேவே திரும்பிப் போ... கொலைக்காரன் இராஜபக்சேவே திரும்பிப் போ" என்பது போன்ற முழக்கங்கள் தோழர்களால் மிகுந்த உக்கிரத்துடன், வீரியத்துடன் முழங்கப் பட்டன. காவல்துறை அந்த இராஜ பக்சே உருவ பொம்மையை கைப் பற்ற முனைந்தபோது நூற்றுக் கணக் கான தோழர்களும் அதனைச் சூழ்ந்து கொண்டு செருப்பால் அடித்து துவைத்தனர். உருவ பொம்மையும் அதனை வைத்து எடுத்து வந்த பாடையும் தூள்தூளாகியது.

இந்த கண்டன ஊர்வலத்தினை பெரியார் திராவிடர் கழகம் ஒருங் கிணைப்பு செய்து நடத்தியது. இந் நிகழ்ச்சியில் பெரியார் திராவிடர் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழகம் நகரமன்ற உறுப்பினர் இளவல் வேலு மற்றும் இராம கிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் மாநகரச் செயலாளர் விநாயகமூர்த்தி, தமிழ் தேசியப் பொதுவுடைமைக் கட்சி சுவடி இளங்கோ, தமிழர் பண் பாட்டுக் கழகம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 68 தோழர்கள் கைதாகினர்.

## வெடிகுண்டு வைக்கும் பார்ப்பன பயங்கரவாதம்

இந்தியாவில் பல்வேறு மாநிலங் களில் நடந்த குண்டுவெடிப்புகளுக்கு எல்லாம் இசுலாமியர்களே காரணம் என்று இதுவரை செய்யப்பட்டு வந்த பிரச்சாரம் - இப்போது சுக்கு நூறாக உடைந்து போய்விட்டது. ஆன்மீகம் என்றும் இந்துமதம் என்றும் கலாச் சாரம் என்றும் கூறி வந்த ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன அமைப்புகள், நாட்டில் வெடிகுண்டுகளை வைத்து, பல அப்பாவி முஸ்லீம்களைக் கொன்று குவிக்கத் திட்டமிட்டது வெளிச்சத் துக்கு வந்துள்ளது.



2006 இல் போபாலில் 'துர்கா வாகினி' எனும் விசுவ இந்து பரிசத் பெண்கள் அமைப்பு ஆயுதப் பயிற்சி எடுக்கும் காட்சி

மகாராஷ்டிரா மாநிலம் மாலே கானில் நடந்த குண்டுவெடிப்பு தொடர் பாக இந்து பெண் துறவி பிரக்யா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பல அதிர்ச்சியான தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பெண் பயங்கரவாதிதேயாடு குண்டு வெடிப்பில் தொடர்புடைய சிவ் நாராயண் சிங் கல்சாஸ்ரா மற்றும் சியாம் பாவாலால் என்ற இரு இந்து பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர் களின் கைதைத் தொடர்ந்து மராட்டிய காவல்துறையின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு மேலும் 6 பேரைக் கைது செய்துள்ளது. இதில் இரண்டு பேர் ராணுவ அதிகாரிகள். இதில் ஒருவர் தற்போது பணியில் உள்ள ராணுவ அதிகாரி. பெயர் கஞ்சால் நீகார்த் புரோகித் எனும் பார்ப்பனர். மற்றொருவர் ஓய்வு பெற்றவர். பெயர் ரமேஷ் உபாத்யாயா எனும் பார்ப்பனர். குண்டு வெடிப்புக்கு பயன்படுத்தப் பட்ட 'மோட்டார் பைக்' பெண் துறவி பிரக்யாவுக்கு சொந்தமானது. இவர்கள் மேலும், பல குண்டு வெடிப்புகளில் தொடர்புடையவர்கள் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. எல்லாவற்றுக்கும் மூளையாக செயல் பட்ட 'ராம்ஜி' எனும் பயங்கரவாதியை போலீஸ் தீவிரமாக வலை வீசி தேடி வருகிறது. மகாராஷ்டிரா மாநிலத்தில் இசுலாமியர்கள் பகுதியில் குண்டுகள் வெடித்ததற்கு இசுலாமிய தீவிரவாதி களே காரணம் என்று இதுவரை காவல்துறை கூறி வந்தது உண்மையல்ல என்றும், இந்து பயங்கரவாத கும்பல் ஒன்று தொடர்ந்து இந்த பயங்கரவாத செயலில் ஈடுபட்டுக் கொண்டு, முஸ்லீம்கள் மீது பழி போட்டு வந்ததும் இப்போது அம்பலமாகியிருக்கிறது.

கைது செய்யப்பட்ட பெண் துறவி பிரக்யா, பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்குடன் சேர்ந்து எடுத்த புகைப் படங்களை பத்திரிகைகள் வெளியிட் டுள்ளன. முதலில் குண்டுவெடிப்பை பா.ஜ.க. கண்டித்தாலும், பிறகு ஆர்எ.ஸ்.எஸ். முகாமிலிருந்து வந்த அழுத்தத்தைத் தொடர்ந்து, பா.ஜ.க. தனது குரலை மாற்றிக் கொண்டு, பயங்கரவாதிகளை பாதுகாக்க முன் வந்துள்ளது. கட்சியின் பிரதமர் வேட் பாளராக பா.ஜ.க.வால் அறிவிக்கப் பட்டுள்ள அத்வானி, பிரதமர் மன் மோகன்சிங்குடன் தொலைபேசியில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாகப் பேசியிருப்பது பா.ஜ.க.வின் சுய ரூபத்தை அடையாளம் காட்டி விட்டது. விசாரணையில் கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகள் சித்திரவதை செய்யப்படுவதாக அத்வானி கூறிய புகாரை மன்மோகன் சிங் மறுத்துள்ளார். பிரதமரின் பாது காப்பு ஆலோசகரான எம்.கே.நாரா யணன் அத்வானியை நேரில் சந்தித்து, காவல்துறை விசாரணை முறைகளை விளக்கியுள்ளார். விசுவ இந்து பரிஷத் போன்ற அமைப்புகள் தடை செய்யப் படுமா என்று, செய்தியாளர்கள் எம்.கே.நாராயணனைக் கேட்டபோது, அவர்கள் மீது பயங்கரவாத குற்றச் சாட்டுகள் ஏதுமில்லை. எனவே தடைசெய்யப்பட மாட்டாது என்று அரசியல்வாதியைப் போல பார்ப்பன உணர்வோடு சில நாட்களுக்கு முன் பதிலளித்தவர் தான் இந்த எம்.கே. நாராயணன் என்பது குறிப்பிடத்தக்கது.

சூரத்தில் கைது செய்யப்பட்ட 36 வயது பெண் துறவி பிரக்யாசிங், குண்டு வைத்த பயங்கரவாதியிடம் தொலை பேசியில் பேசும் போது, "ஏன், இறந்தவர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளது? கூட்டமாக உள்ள பகுதியில் ஏன் குண்டு வைக்கவில்லை?" என்று கேட்டுள்ளார். இந்த உரையாடலை நீதிமன்றத்தில் புலன் விசாரணைத் துறை ஆதாரமாக சமர்ப்பித்துள்ளது. இந்த பெண் துறவி, முதலில் பா.ஜ.க.வின் மாணவர் அமைப்பான 'ஏபிவிபி'யில் (அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்), பின்னர் 'துர்கா வாகினி' என்றும்,


(3 ஆம் பக்கம்)


## சு.சாமி, ஜெயலலிதா, துக்ளக் சோ - மவுனம் சாதிப்பது ஏன்?

# உளவு நிறுவனத்தின் சதியை அம்பலப்படுத்தினார், கலைஞர்

*சென்ற இதழ் தொடர்ச்சி*

1990 மார்ச் மாதத்திலிருந்து (இந்திய ராணுவம் ஈழத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து) தமிழ்நாட்டுக்கு வரும் ஈழத் தமிழ் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்தது. வழக்கமாக ராமேசுவரம் வழியாகவே வந்து சேருவார்கள். ஆனால், கன்னியாகுமரி வழியாக அதிகம் வரத் துவங்கினர்; சில நியாயமான காரணங்களுக்காக தி.மு.க. அரசு, போட்டிக் குழுக்களின் வருகையை எதிர்த்ததே இதற்குக் காரணம்.

அப்படி கன்னியாகுமரியில் வந்து இறங்கியவர்களுக்கு உரிய பாதுகாப்பு தந்து, அவர்களை தமிழ்நாடு - கேரளா எல்லையோர மாவட்டங்களுக்குக் கொண்டு போவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க ஏராளமான 'ஏஜெண்டுகள்' இருந்தனர். பெரும்பாலோர் கேரளாவின் இடுக்கி மாவட்டத்துக்குக் கொண்டு போகப்பட்டனர். (உளவு நிறுவனம் உருவாக்கிய - தமிழ்க் குழுக்களுக்கு அன்றைய கலைஞர் அரசு எதிர்ப்பு தெரிவித்ததால், உடனே கேரளாவுக்கு அவர்களை அனுப்பி வைத்தது உளவு நிறுவனங்களின் ஏற்பாடுதான். அதற்காக ஏஜெண்டுகளும் நியமிக்கப்பட்டார்கள்.)

ராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சி, தமிழர்கள் அகதிகளாக 1983 ஆம் ஆண்டு முதல் வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அவர்கள் அகதிகளாக பதிவு செய்யப்பட்டு, முகாம்களில் வைக்கப்படுகிறார்கள். இது வழமையான நடைமுறை.

ஆனால், விடுதலைப் புலிகளுக்கு எதிராக குழுக்களை உருவாக்கிய இந்திய உளவு நிறுவனமே தனியாக கப்பல்களையும், விமானங்களையும் ஏற்பாடு செய்து, அந்தப் போட்டிக் குழுக்களை அழைத்து வந்தது என்பது தான் முக்கியமான பிரச்சினை.

கப்பல்களில் வரும்போது, அவர்கள் துறைமுகம் வழியாக இறங்க வேண்டும். துறைமுக விதிகளின்படி கடவுச் சீட்டு, தமிழகத்தில் நுழைவதற்கான முறையான அனுமதி போன்றவை அவசியமாகும். ஆனால், உளவு நிறுவனங்கள் இந்த விதிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. சென்னைத் துறைமுகத்தில் தான் உருவாக்கிய போட்டிக் குழுவினை இறக்க முயன்றபோது, துறைமுக அதிகாரிகள் உரிய ஆவணங்களைக் கோரினர்; அவை இல்லாததால், துறைமுகத்தில் இறங்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

இந்திய உளவுத் துறையின் ஆதரவுக் குழுக்கள் திருகோண மலையிலிருந்து சென்னை துறைமுகத்துக்கு இரண்டு கப்பல்களில் வருகிறார்கள் என்ற தகவல், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையருக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டது. இதனால் மாநில அரசின் 'சி.அய்.டி.' பிரிவு துறைமுகத்தில் கண்காணிப்புப் பணிகளை முடுக்கிவிட்டிருந்தது. ஆக, இவர்களை கப்பல்களில் அழைத்து வந்தது உளவு நிறுவனம் தான் என்பது, இதன் மூலம் உறுதியாகியது. அதனால் தான் காவல்துறை அதிகாரிகளோடு முன் கூட்டியே பேச முடிந்திருக்கிறது.

இந்திய அரசின் பொதுத் துறை நிறுவனமான இந்திய கப்பல் வாரியத்துக்கு சொந்தமான 'ஹர்ஷ வர்த்தனா', 'திப்பு சுல்தான்' என்ற இரண்டு கப்பல்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'ரா' உளவு நிறுவனத்தின் அமைப்பான 'ஈ.பி.ஆர். எல்.எப்.' குழுவினரும், அவர்களது குடும்பத் தினருமாக 747 பேருடன் 8.3.1990-ல் 'ஹர்ஷ வர்த்தனா' கப்பல் சென்னை துறைமுகம் வந்தது. உரிய ஆவணங்கள் இல்லாமையால் தமிழ்நாட்டில் இறங்க அவர்கள் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் கப்பல் எரிபொருளை நிரப்பிக் கொண்டு, விசாகப்பட்டினம் துறைமுகத்துக்குப் புறப்பட்டது.

அதே போல் 'ரா' உருவாக்கிய மற்றொரு குழுவான 'ஈ.என்.டி.எல்.எப்' குழுவினரை ஏற்றிக் கொண்டு வந்த 'திப்பு சுல்தான்' கப்பல் 10.3.90-ல் விசாகப் பட்டினம் வந்து சேர்ந்தது. இரண்டு கப்பல்களிலும் வந்த இரண்டு குழுக்களைச் சார்ந்த 1324 பேரும் தனிப் பேருந்துகளில் ஏற்றப்பட்டு ஒரிசாவின் மால்கங்கிரி, சத்திகுடா என்ற இரு வெவ்வேறு பகுதிகளில் தங்க வைக்கப் பட்டனர். (இத் தகவல்கள் ஜெயின் ஆணையத்தின் முன் அன்றைய சென்னை மாநகர காவல்துறை இயக்குநர் சிறீபால் தாக்கல் செய்த அறிக்கையிலும் அரசு ஆவணங்களிலும் இடம் பெற்றுள்ளன.

ஏற்கெனவே சென்னையிலிருந்த, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப். குழுவினர் ஒரிசாவுக்குப் போய் அங்கே இருந்த தங்களது குழுவினரை, தமிழ்நாட்டுக்குக் கொண்டு வருகிறார்கள் என்ற செய்தி உளவுத் துறை மூலம் தமிழக அரசுக்குக் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர், ஒரிசா மாநில அரசின் தலைமைச் செயலாளருக்கு 11.3.1990ல் தொலைவரி மூலம் (Telex) ஒரு அவசர செய்தியை விடுத்தார். "தமிழ்நாட்டில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை தலைதூக்காமல் இருக்க, ஒரிசாவில் உள்ள ஈழத் தமிழ்க் குழுக்களை தமிழ்நாட்டுக்கு வராமல் தடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கலைஞர் விரும்புகிறார்" என்று அந்த செய்தி எச்சரிக்கை செய்தது.

கப்பலில் கொண்டுவரப்பட்டவர்களைத் தவிர, 11.3.1990-ல் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா உட்பட அக்குழுவைச் சார்ந்த 295 பேரை இந்திய உளவு துறை விமானத்திலும் ஒரிசாவுக்கு அனுப்பியது.

ஆனால், தமிழக அரசின் கண்காணிப்புகளையும் மீறி உளவுத்துறை உருவாக்கிய குழுக்கள் ஒரிசாவில் தங்கள் முகாம்களை மூடிவிட்டு, தமிழகத்துக்குள் நுழைந்து விட்டனர். இதை 'கியு' பிரிவு போலீசின் ரகசிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி - பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கு ஒரு கடிதம் (26.4.1990) எழுதினார். அதில், ஒரிசாவில் மால்கங்கிரி முகாமில் இருந்த இலங்கை அகதிகள், அங்கிருந்து, தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டார்கள் என்றும், அதனால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை தலைதூக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். கடிதத்தில் முதல்வர் கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டுள்ள மற்றொரு கருத்து மிகவும் கவனிக்கத் தக்கதாகும்.

"ஒரிசா முகாமிலிருந்து, தமிழ்நாட்டுக்குள் நுழைந்த அகதிகள் மீது குடியேற்றச் சட்டத்தின் கீழோ, அல்லது 'பாஸ்போர்ட்' சட்டத்தின் கீழோ தான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், இந்தப் பிரச்னையில் அப்படி வழக்குகள் தொடர முடியாது என்று எங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. காரணம், இவர்கள், இந்தியா வுக்கு சொந்தமான கப்பல்களில், இந்தியத் துறைமுகமான விசாகப்பட்டினம் வழியாக வந்தவர்கள் என்பதால், அவர்களை அகதிகளாகவே கருத வேண்டும் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது"

"But we have been advised that such prosecution cannot be sustained in this particular case, as they were brought by Indian Ships to an Indianport."

- என்று முதல்வர் கலைஞர் கருணாநிதி அக் கடிதத்தில் சுட்டிக் காட்டியிருந்தார். உளவு நிறுவனத்தின் அத்துமீறல்கள் எல்லை மீறி நடந்துள்ளதை, இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

- **தங்களின் தாயக விடுதலைக்குப் போராடும் விடுதலைப் புலிகளை – ராணுவ ரீதியாக ஒடுக்க முயன்று, தோல்வி கண்டார்கள்.**
- **விடுதலைப் புலிகளுக்கு எதிராக – விரக்தி யடைந்த குழுக்களைத் திரட்டி – ஆயுதம் வழங்கி, சகோதர யுத்தத்தைத் தூண்டி விட்டார்கள்.**
- **ஈழத்தில் துப்பாக்கி முனையில் – தங்களது எடுபிடி ஆட்சியை நிறுவினார்கள்.**
- **இந்திய ராணுவம் – அரசியல் நெருக்கடிகளால் திரும்ப வேண்டிய சூழ்நிலையில் – தாங்கள் உருவாக்கிய குழுக்களையும் இந்தியாவுக்கு அழைத்து வந்தனர்.**
- **அதற்கு இந்திய அரசு கப்பல்களையும், விமானங் களையும் பயன்படுத்தினர்.**
- **அன்றைக்கு தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அந்த எதிர்ப்பைப் புறக்கணித்து, வேறு மாநிலத்தில் தங்க வைத் தார்கள்.**
- **'ரா' உளவு நிறுவனத்தின் இந்த அடாவடி நடவடிக்கைகளில் அரசியல் நேர்மை ஏதேனும் இருக்கிறதா? என்று கேட்கிறோம்.**

பின்னர் - தமிழ்நாடு சட்டமன்றத்தில் இது பற்றிய விவாதம் வந்தது. உளவு நிறுவனங்கள் இப்படி போட்டிக் குழுக்களை உருவாக்கி, சகோதர யுத்தங்களைத் தொடங்கி வைத்ததை காங்கிரஸ், அ.தி.மு.க., சி.பி.அய்., (எம்) கட்சிகள் கண்டிக்க முன்வரவில்லை. முறைகேடாக கப்பல்களில் விமானங்களில் ஏற்றி இந்தியாவுக்கு உளவு நிறுவனங்கள் போட்டிக் குழுக்களைக் கொண்டு வந்ததைக் கண்டிக்கவில்லை. மாறாக தி.மு.க ஆட்சியில் விடுதலைப்புலிகள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள் என்ற பார்ப்பன ஏடுகளின் குரலையே இவர்கள் எதிரொலித்தார்கள். இதற்கு பதிலளித்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி -

**"'ரா' உளவு நிறுவனம் தான் இந்தக் குழப்பங்களை உருவாக்குகிறது. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே மோதலை உருவாக்குவதே 'ரா'வின் நோக்கமாக இருக்கிறது. எனவே இதில் பிரதமர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈழத் தமிழ்க் குழுக்களிடையே கடந்த காலங்களில் பல்வேறு குழுக்களை உருவாக்கியதற்கு 'ரா' தான் காரணமாக இருந்தது. இப்போது அதே வேலையை மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே செய்து கொண்டிருக்கிறது"**

***"Sri Karunanithi, on 8th May 1990, on the floor of the Assembly is reported to have accused the Research and Analysis Wing (RAW) of trying to create a rift between the Centre and the State appealed to the Prime Minister to take appropirate action. He alleged that the RAW which was responsible in the past for creating divisions among various Tamil Groups of Srilanka was doing the same between the Centre and the State"***

(ஆதாரம்: ஜெயின் ஆணைய அறிக்கை)

- என்று வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார்.

தமிழகத்தின் முதலமைச்சர் ஒருவராலேயே சட்டமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட கருத்து இது!

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்த அச்சப்படி அதற்குப் பிறகுதான் தமிழ்நாட்டில் பத்மநாபா படுகொலையும், சகோதர யுத்தங்களும் தொடர்ந்தன.

இப்படித்தான் உளவு நிறுவனங்களின் பார்ப்பன சதித் திட்டம் உருவானது. இதற்கு தளம் அமைத்துத் தந்தது 'ரா' உளவு நிறுவனம் தான்!

உளவு நிறுவன மிரட்டலுக்கு தி.மு.க. பணிய மறுத்தது. உடனே ஜெயலலிதா, சுப்ரமணியசாமி, எம்.கே.நாராயணன் என்று உளவு நிறுவன பார்ப்பன சக்திகள் தீட்டிய திட்டத்தின்படி தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

சகோதர யுத்தங்களை உருவாக்கியதே உளவு நிறுவனங்கள்தான் என்பதற்கு இதைவிட ஆதாரங்கள் வேண்டுமா? ●

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 27.11.2008**

## பயங்கரவாதிகளை பயிற்றுவிக்கும் பார்ப்பனப் பள்ளி

மராட்டிய மாநிலம் நாசிக்கில் போனிஸ்லா என்ற தனியார் பள்ளியில் தான் வெடிகுண்டு வைப்பதற்கான பயிற்சிகளும், ராணுவ பயிற்சிகளும் பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு தரப்படுகிறது. இந்தப் பள்ளி 1936 இல் ஆர்.எஸ்.எஸ்.சை தொடங்கியவர்களில் ஒருவரான டாக்டர் பி.எஸ்.மூஞ்சே எனும் சித்பவன் பார்ப்பனரால் தொடங்கப்பட்டதாகும். ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரமும், ராணுவப் பயிற்சியும் இந்தப் பள்ளியில் தரப்படுகிறது. ஆரம்பக் கல்வியிலிருந்து மேல்நிலைக் கல்வி வரை மாணவர்கள் படிக்கிறார்கள். ஓய்வு பெற்ற ராணுவத்தினர், ராணுவப் பயிற்சி தருகிறார்கள். நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பில் இந்தப் பள்ளி அமைந்துள்ளது. பள்ளி சுவர்களில் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் படங்கள் வரையப்பட்டுள்ளன.

# 17 ஆண்டுகாலம் சிறையில் வாடும் — பேரறிவாளன் உயிரைக் காப்பாற்றுங்கள்!

உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவை ஒட்டி தமிழக சிறையில் உள்ள மரண தண்டனை சிறைவாசி ஏ.ஜி.பேரறிவாளனுக்கு மரண தண்டனையை இரத்து செய்யக் கோரி தமிழக முதல்வர் மாண்புமிகு கருணாநிதி அவர்களுக்கு 19.8.08 தேதி எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்.

வணக்கத்திற்குரிய திருகருணாநிதி அவர்களுக்கு, நான் உங்களில் சிறப்பான நிர்வாகத் திறமை மற்றும் மிடுக்கான செயல்பாடுகளின்மீது மிகப் பெரிய மதிப்பும் மரியாதையையும் கொண்டுள்ளேன். நான் தங்களுக்கு அரிதாகவே கடிதங்கள் எழுதியுள்ளேன். ஆனால், தற்போது ஒரு உயிரைக் காப்பாற்றக் கோரி இக்கடிதம். மகாத்மா காந்தியில் தொடங்கி மனிதாபிமானமுள்ள எல்லா மனிதர்களும் மரண தண்டனையை இரத்து செய்யக் கோரி வந்துள்ளனர். ஐக்கிய நாடுகள் சபை இந்த தண்டனைக்கு எதிராக இருந்து வருகிறது. இந்திய பண்பாடும் மரண தண்டனைக்கு எதிரானதே. நீதிமன்றங்கள் மரண தண்டனை வழங்கியபோதும் அதனை மாற்றுகின்ற அதிகாரத்தையும் நம் அரசியல் அமைப்பு கொண்டுள்ளது. நீதிமன்றம் விதித்த மரணதண்டனையை மாநில முதலமைச்சர் மற்றும் மத்திய உள்துறை அமைச்சரின் பரிந்துரைகளால் மாநில ஆளுநரும், நாட்டின் குடியரசுத் தலைவரும் மாற்ற முடியும். உச்சநீதிமன்றத்தில் மரணதண்டனை உறுதி செய்யப்பட்ட பலர் மாநில ஆட்சியாளர்களின் கைகளிலுள்ள மன்னிக்கும் அரசியல் அமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவிக்கப்பட்டுள்ளதை நான் நன்கு அறிவேன்.

இந்த மன்னிக்கும் அதிகாரம் மாநில ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவரின் கைகளில் இருக்கின்ற போதும் அது மாநில முதல்வர் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் மூலம் நிறைவேற்றப்படக் கூடியது.

தங்கள் மாநிலத்தின் மரணதண்டனை கைதிகளாக உள்ள ஏ.ஜி.பேரறிவாளன் என்பவருக்கு அரசியல் அமைப்பு வழங்கிய அதிகாரத்தை பயன்படுத்தி தாங்கள் அவரை மரணதண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும். தங்களின் கருணையைக் காட்ட நல்ல பல காரணங்கள் இந்த வழக்கில் உள்ளது. திரு.ஏ.ஜி.பேரறிவாளன் கடந்த 17 ஆண்டுகளாக தனிமைச் சிறையில் வாடி வருகிறார். நான் முன்பு ஒருமுறை குறிப்பிட்டுள்ளது போன்று, தனிமைச் சிறைவாசம் என்பது கொடுமையான சித்திரவதையாகும். கடந்த 17 ஆண்டுகளாக இந்த நிலையில் அதுவும் மரண தண்டனை எதிர்நோக்கிய ஒருவரின் துயரம் மிகக் கொடியது. உச்சநீதிமன்றம் இவ்விதமான நிலைக்கு உட்பட்டவர்களை மரண தண்டனையில் இருந்து விடுவித்துள்ளது.

ஒரு பொறுப்புள்ள குடிமகன் என்ற முறையில், ஒரு உணர்வு மிக்க நீதிமானாக, உச்சநீதிமன்றத்தில் பணியாற்றிய அனுபவமிக்க நீதிபதியாகிய நான், 17 ஆண்டுகளாக தனிமை சிறையில் வாடும் திரு.ஏ.ஜி. பேரறிவாளனின் மரண தண்டனையை மாற்ற வேண்டுகோள் வைப்பது எனது கடமை எனக் கருதுகிறேன். அவர் வெகுநாட்களாக சிறைப்பட்டுள்ளார். அவரின் வயதான பெற்றோர்கள் வேதனையில் வாடி வருகிறார்கள். உலகம் மாறுகிறது. ஆனால் அவருக்கோ நான்கு சுவர்களும், இரும்புக் கம்பிகளும் மட்டுமே பார்க்கவும், உணரவும் மிச்சமுள்ளது. இதுவே கனமான, கண்ணீரை வரவழைக்கும் சோகமாகும்.

தற்போது நல்ல தருணம் வந்துள்ளது. அது சிறந்த மனிதாபிமானவாதியான திருஅண்ணாதுரையின் நூற்றாண்டு. அவர் ஒரு சிறப்பான தலைவர். அரிதான முதலமைச்சர். அச்சிறந்த மனிதர் தன் நிறை வாழ்வினை வாழாது, நோயினால் இயற்கை எய்தியவர். அவரின் நூற்றாண்டின் பிறந்த நாளில் மாண்புமிகு கருணாநிதி அவர்களே! மனிதாபிமான மிக்க முதல்வரான தாங்கள் தங்களின் வழியே மாநில ஆளுநருக்கு வேண்டுகோள் வைத்து திருஏ.ஜி.பேரறிவாளனை விடுவிக்க வேண்டுகிறேன். தாங்கள் கருணை மிக்கவர். தங்கள் மாநில ஆளுநர் மாண்புமிகு சுர்ஜித் சிங் பர்னாலா மென்மையான மனிதர். எனக்கு தற்போது தொடர்பு விடுபட்டுப் போயிருந்தாலும் எனது பழைய நண்பர்.

மனிதத் தன்மை அடிப்படையில் நான் தங்களுக்கும், மாநில ஆளுநர் பர்னாலாவுக்கும் வைக்கும் வேண்டுகோளானது, ஒரு உயிரைக் காப்பாற்றுங்கள் என்பதுதான். அந்த உயிர் பல ஆண்டுகளாக தனிமைச் சிறையில் சொல்ல முடியாத பல துயரை அனுபவித்து வருகிறது. அந்த மனிதர் சுதந்திரமான காற்றை தனது தாய் மண்ணில் சுவாசிக்க தகுதியுள்ளவர். அவர் சிறையாளி மற்றும் என்னை சந்தித்த அவரின் தாயாரின் கண்ணீரின் கனத்த பாதிப்புகளுடன் நான் தங்களுக்கு மேற்கண்ட வேண்டுகோளை வைக்கின்றேன்.

மனிதாபிமான உணர்வும், கருணையைக் காட்டும் செயலும் "கருணா" என்ற சொல்லுக்கு உரியது.

**நன்மதிப்புகளுடன்... தங்கள் நேர்மையுள்ள வி.ஆர்.கிருஷ்ணய்யர் (முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி)**

# சேலம் நகரில் கழகப் பிரச்சாரம்



16.11.08 ஞாயிறு அன்று சேலம் நகரம் மூணாங்கரடு தண்ணீர் தொட்டி அருகில் மேட்டூர் டிகே.ஆர். இசைக்குழுவினர் பாடல்களோடு கழகப் பிரச்சாரம் தொடங்கியது. சிற்பிராசன் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியில் சாமியாரின் பித்தலாட்டங்களை தோலுரித்தார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஈழத் தமிழர்களுக்கு உதவுங்கள் என்ற தலைப்பில் இனமான எழுச்சி உரையாற்றினார். தலைவரும், சிற்பிராசனும் அரை மணி நேரம் மாறி மாறி சிறப்புரையாற்றினார்கள். கழகத் தோழர் ப. பழனி தலைமை வகித்தார். தோழர் சரவணன் நன்றி கூறினார்.

23.10.2008 வியாழன் அன்று சேலம் பெரியார் திடல் தாதகாப்பட்டி கேட்டில் கழகப் பிரச்சாரக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. மேட்டூர் டிகே.ஆர். குழுவினர் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து, கழகத் தோழர் பொள்ளாச்சி நாகராசு, மதவெறி சக்திகளின் பித்தலாட்டங்களை தோலுரித்து, இன துரோகிகளின் முகமூடிகளை கிழித்து இனமான சிறப்புரை ஆற்றினார்கள். தொடர்ந்து சிற்பி இராசன் அவர்களின் மந்திரமா, தந்திரமா? நிகழ்ச்சி சிறப்புடன் நடந்தது. தோழர் ராஜசேகரன் தலைமை தாங்கினார்.

மாணவரணி தோழர் குமார் நன்றி கூறினார். ஏராளமான விளம்பரத் தட்டிகளும், கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. பெரும் திரளாக மக்கள் கூடியிருந்தனர். **செய்தி : ந. விசு**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

'விசுவ இந்து பரிஷத்' பெண்கள் அமைப்பிலும் இருந்துள்ளார். மாணவராக இருந்தபோது மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் சாகசங்களை செய்து வந்த இவர், 2006 இல் சன்னியாசி வேடம் தரித்து, பயங்கரவாதத்தில் ஈடுபாடு உள்ள இந்து சாமியார்களிடம் தொடர்பு கொண்டு ஒருங்கிணைப்பை உருவாக்கிடும் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

ராணுவ அதிகாரியான சிறிகாந்த் பிரசாத் புரோகித் எனும் பார்ப்பனர் தான் குண்டுகளில் பயன்படுத்துவதற்கான சக்தி வாய்ந்த 'ஆர்டிஎக்ஸ்' வெடி மருந்தை ராணுவ ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து திருடி வழங்கியுள்ளார். வெடி மருந்தைப் பெற்ற ராம்ஜி, குண்டு வெடிப்புக்கு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார். ராணுவமே, இந்து பயங்கரவாதிகளின் ஊடுருவலுக்கு இடமளித்துள்ளது. நாடு முழுதும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

2006 ஏப்ரல் மாதத்தில் மகாராஷ்டிராவில் நந்திர் எனும் நகரில் ஒரு வீட்டில் வெடிகுண்டு செய்தபோது அது வெடித்து இரண்டு பேர் இறந்தனர். அப்படி வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்ட இருவரும் முறையே பஜ்ரங்தள் மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்தவர்கள். அப்போதே காவல்துறை இந்தப் பிரச்சினையில் உரிய கவனம் செலுத்தியிருக்குமானால், மாலேகான் குண்டு வெடிப்பு நிகழ்ந்திருக்காது.

கடந்த ஆகஸ்டு மாதத்தில் 'தானே' பகுதியில் நடந்த குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். துணை அமைப்புகளைச் சார்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் விசாரணை நடத்தி வரும் அதிகாரி ஒருவர் கூறுகையில் - இந்துத்துவாவைப் பாதுகாக்க வேண்டும் என்ற போர்வையில் இந்து பண்டிகைகளின் போது வெறியூட்டும் பேச்சுகளைப் பேசி, இந்தப் பயங்கரவாத அமைப்புகள் தங்களுக்கு வலிமையான ஆதரவு சக்திகளை உருவாக்கி வைத்துள்ளன என்கிறார். இந்த பயங்கரவாதத்தில் ஈடுபட்டுள்ள பெரும்பாலோர், எந்த வேலையும் இல்லாதவர்கள். மதவெறியின் அடிப்படையில் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள் என்கிறார், அந்த அதிகாரி.

அபிநவ் பாரத் என்ற இந்து பயங்கரவாத அமைப்பை இப்போது போலீசார் கண்காணித்து வருகிறார்கள். காந்தியார் கொலையில் மூளையாக செயல்பட்ட வி.டி.சவர்க்கார், 1904 ஆம் ஆண்டு தொடங்கிய அமைப்பு இது. அதே பெயரில் அமைப்பைத் தொடங்கி, பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டுவரும் ஹிமானி சவர்க்கார் என்பவர் - காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்சேவுக்கும், காந்தி கொலையில் தொடர்புடைய வி.டி.சர்க்காருக்கும் நெருக்கமான உறவினர். மராட்டிய மாநிலத்தில் காந்தி கொலையை விமர்சித்து நடந்த ஒரு நாடகத்தில் குண்டு வீசியது இந்த அமைப்புதான் என்று கூறப்படுகிறது. இந்தப் பார்ப்பன பயங்கரவாதத்துக்கு கால்கோள் நடத்தியது மராட்டிய மாநிலம் தான். திலகர் தான் இதன் முன்னோடி. திலகர் வழியில் வந்த பார்ப்பன கோட்சே வாரிசுகள், மீண்டும் வெடிகுண்டுகளைத் தூக்கியிருக்கிறார்கள். இந்திய ராணுவத்தின் பார்ப்பன அதிகாரிகளும், தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது, நாட்டை அதிரச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் பற்றி வாய் கிழிய பேசும் சுப்ரமணிய சாமி, சோ, ஜெயலலிதா போன்ற பார்ப்பனர்கள், இந்த பார்ப்பன பயங்கரவாதம் பற்றி, மவுனம் சாதிப்பது குறிப்பிடத்தக்கது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# முதுகுளத்தூர் கலவரத்தில் பெரியார் அணுகுமுறை என்ன?


## திரிபுவாத திம்மன்கள் – யார்? (10)

பெரியார் ‘குடிஅரசு’ தொகுப்புகளை பெரியார் சுயமரியாதை பிரச்சாரம் நிறுவனம் மட்டுமே வெளியிட வேண்டும் என்று கூறி, பெரியார் திராவிடர் கழகத்தின் வெளியீட்டுக்கு தடை கோரியவர்கள். அதற்காக சில சொத்தை வாதங்களை முன் வைத்தார்கள். ‘விடுதலை’யின் ‘அனல் பறக்கும்’ எழுத்தாளர் மின்சாரம், இதற்காக மிகவும் ஆராய்ச்சி செய்து, தேடிக் கண்டு பிடித்து ஒரு வாதத்தை முன் வைத்தார்.

*“தந்தை பெரியார் மாபெரும் சமூகப் புரட்சியாளர். அவர் தம் படைப்புகளை வெளியிடும்போது* **எங்கள் அளவுக்கு பொறுப்புணர்ச்சி** *மற்றவர்களுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ‘ஜாதி’ என்பது தமிழ்ச் சொல் அல்ல. தமிழர்களிடையே ஜாதி என்பது கிடையாது என்று சொன்னவர் தந்தை பெரியார். தந்தை பெரியார் கருத்துகளைத் தொகுத்த பேராசிரியர் ஒருவர் ‘ஜாதி’ என்று வருகிற இடங்களில் எல்லாம் ‘சாதி’ என்றே தொகுத்துள்ளார். இது எவ்வளவு பெரிய ஆபத்து! தந்தை பெரியார் கருத்துகளை கூறுவதாக நினைத்துக் கொண்டு, தந்தை பெரியார் அவர்களின் கருத்துகளையே* **தலைக்கீழாகப் புரட்டும் தன்மை** *தானே இது” - மின்சாரம் கட்டுரை, ‘விடுதலை’ 25.8.2008.*

‘ஜாதி’ என்பதை ‘சாதி’ என்று பெரியார் எழுத்துகளில் பயன்படுத்துவது எவ்வளவு பெரிய ஆபத்து - கருத்துப் புரட்டு என்றெல்லாம் எழுதியவர்கள் தங்களைப் போல் பொறுப்புணர்ச்சி மற்றவர்களுக்கு இருக்குமா என்று, தங்கள் பொறுப்புணர்ச்சிக்கு தாங்களே நற்சான்று தந்து கொண்டவர்கள் ‘பொறுப்புணர்ச்சி’ எப்படி என்று பார்க்கலாமா?

இதை எழுதிய அடுத்த மாதத்திலேயே சுயமரியாதை பிரச்சார நிறுவனம் நடத்தும் ‘உண்மை’ மாதமிருமுறை ஏட்டில் இவர்களின் “பொறுப்புணர்ச்சி”யைக் காட்டி விட்டார்கள்! ‘என்னைப் பற்றி’ என்ற தலைப்பில், பெரியாரின் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. 2008 செப். 11-30 தேதியிட்ட ‘உண்மை’ இதழில் வெளியிடப்பட்ட கட்டுரையில் இவ்வாறு அச்சேற்றப்பட் டிருக்கிறது.



**தந்தை பெரியார்**

**நா**ன் சாதாரண ஆள்தான் என்றாலும், இன்றைய மந்திரிகளை விட எவ்வளவோ மேலானவன். உலகம் சுற்றியவன். பூரண பகுத்தறிவுவாதி. சொத்து சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லாதவன். சொந்தத்திற்குப் பணம் சேர்க்க வேண்டிய தேவையில்லாதவன். சாதி உணர்ச்சி சாதிப் பற்று இல்லாதவன் என்ன செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டு மென்பவன். 70 ஆண்டு உலக அனுபவம். 30 ஆண்டு வியாபார அனுபவம். 1915, 16, 17, 18, 19 வரை ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஈரோடு வியாபாரச் சங்கத் தலைவன். ...

“(நான்) **சாதி** உணர்ச்சி சாதிப்பற்று இல்லாதவன். என்ன செய்தாவது **சாதியை** ஒழிக்க வேண்டுமென்பவன்”

- இதற்குப் பெயர் என்ன? கட்டுரையாளர் மின்சாரத்தின் வாதப்படி இது பெரியார் கொள்கை தலைகீழ் புரட்டு அல்லவா? இந்தப் புரட்டை செய்யும் உரிமை தங்களுக்குத்தான் உண்டே தவிர, வேறு எவருக்கும் கிடையாது என்று வாதாடப் போகிறார்களா? இவர்கள் எடுத்து வைக்கும் எந்த வாதத்திலாவது கடுகளவு நேர்மை இருக்கிறதா?

‘என்ன செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டும்’ என்ற பெரியார் பின்பற்றிய அணுகுமுறைகளை வீரமணி பின்பற்றுகிறாரா என்பதுதான் மிகவும் முக்கியமானது. **‘ஜாதி – சாதி’** என்ற வார்த்தைகளைவிட முக்கியமானது.

அண்மையில் சென்னை சட்டக் கல்லூரியில் நடந்த மாணவர்களிடையே சாதி அடிப்படையில் நடந்த கலவரம் பற்றி கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் (15.11.2008, ‘விடுதலை) மாணவர்கள் சாதிவெறியில் ஈடுபடக் கூடாது என்று கூறியதோடு, காவல்துறை கல்லூரி முதல்வர் மற்றும் சம்பவத்தை ஒளிபரப்பிய சன் தொலைக்காட்சியைக் கண்டித்துவிட்டு, தமிழக முதல்வர் விரைந்து செயல்பட்டார் என்று புகழாரம் சூட்டி, அறிக்கையை முடித்துக் கொண்டார். ஆதிக்கசாதியினரான தேவர் சாதி மாணவர்கள் சட்டக் கல்லூரிக்கு சூட்டப்பட்டுள்ள அம்பேத்கர் பெயரையே அங்கீகரிக்க மறுப்பது பற்றியும், மாணவர்களிடம் ஆதிக்கசாதியினர் தூண்டிவிடும் சாதி வெறி பற்றியும் ஒரு கண்டன வார்த்தைகூட அந்த அறிக்கையில் இடம்பெறவில்லை. அன்றைக்கே அதே ‘விடுதலை’ நாளேட்டில் சென்னை அருகே உள்ள புழலில் அம்பேத்கர் சிலை அவமதிக்கப்பட்டதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார் வீரமணி. ஆனால், சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்பட்டதை ஏற்க மறுக்கும் சாதிவெறிப் போக்குப் பற்றி மவுனம் சாதிக்கிறார். இத்தகைய சாதிக் கலவரங்கள் நடந்தபோது பெரியார் உண்மையான சாதி ஒழிப்புப் போராளியாக ஆதிக்கசாதியினரின் சாதி வெறிக்கு எதிராக துணிந்து குரல் கொடுத்திருக்கிறார் என்பதுதான் வரலாறு.

1957 இல் அன்றைய ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் தலித் மக்களுக்கு எதிராக தேவர் சாதியினர் சாதிக்கலவரங்களை நடத்தினர். ஆதிக்கசாதியினரின் அடக்குமுறைகளுக்கு எதிராக தலித் மக்களை அணி திரட்டிப் போராடிய இமானுவேல் சேகர் என்ற போராளி படுகொலை செய்யப்பட்டார். ஆதிக்கசாதியினரின் தலைவராகவும், வழிகாட்டியாகவும் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் செயல்பட்டார். ஆனாலும், அவரை விமர்சிப்பதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் அஞ்சினர். கலவரம் வெடித்தபோது, முதலமைச்சராக இருந்தவர் காமராசர். முத்துராமலிங்கதேவரை துணிவுடன் கைது செய்தார், காமராசர். பெரியார் ஒருவர் தான் அன்று ஆதிக்கசாதியினருக்கு எதிராக உறுதியாகக் குரல் கொடுத்தார். காமராசர் எடுத்த நடவடிக்கைகளை தீவிரமாக ஆதரித்தார். முதுகளத்தூர் கலவரத்தில், படுகொலைக்குள்ளான இம்மானுவேல், ஒடுக்கப்பட்ட மக்களின் இதயத் தலைவராக போற்றப்பட்டார். அவரது போர்க்குணத்தைப் பாராட்டி, கிராமங்களில் பெண்கள் நாட்டுப்புறப்பாடல்களைப் பாடுவது இன்று வரை தொடரும் மரபாகும். இந்த வகைப் பாடல்கள் பற்றி ஆய்வு செய்த செ.சண்முக பாரதி என்ற ஆய்வாளர் தமது ஆய்வு நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

*“கலவரத்தை ஒடுக்குவதில் ஆளும் கட்சியான காங்கிரஸ் தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது காங்கிரசின் செயலுக்காகப் பெரியார் காமராசரைப் பாராட்டினார். இக்கலவரத்தில் சமூக விரோதிகளைக் கடுமையாய்த் தண்டித்துச் சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தாவிட்டால் அம்மக்களின் சார்பில் போராட்டத்தில் குதிப்பேன் என்று பெரியார் அறிக்கையும் விட்டார்”*

- என்று சுட்டிக்காட்டுகிறார்.

*“கலவரத்தைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகள் அதிகாரத்தை பிடிக்கவே முயற்சித்த நிலையில் பெரியார் ஒருவர் மட்டும் மறுதலையாக சிந்தித்து எழுதினார்”*

- என்கிறார் அந்த ஆய்வாளர். (இம்மானுவேல் தேவேந்திரர் - கதைப் பாடல் ஆய்வு நூல். பக்.70)

1957 செப்டம்பர் மாதங்களில் கலவரம் நடந்ததைத் தொடர்ந்து, முத்துராமலிங்க தேவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் தான் பெரியாரின் சாதி ஒழிப்புப் போராட்டமும் தொடர்ந்தது. முதுகுளத்தூரில் ஆதிக்கசாதியினர் தலித் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட படுகொலை அடக்குமுறைகளைக் கண்டு குமுறிய பெரியார், அடுத்த ஒன்றரை மாதங்களிலே 1957 நவம்பர் 3 ஆம் தேதி தஞ்சையில் சதி ஒழிப்பு மாநாட்டைக் கூட்டி 23 நாட்கள் இடைவெளியில் நவம்பர் 26 அன்று சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவை எரிக்கும் போராட்டத்தை அறிவித்தார். பெரியார் இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க போராட்டமான சாதி ஒழிப்புப் போராட்டத்தை பெரியார் நடத்துவதற்கு காரணமாக அமைந்ததே முதுகுளத்தூரில் முத்துராமலிங்க தேவர் தலைமையில் தலித் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சாதிக் கலவரமும் படுகொலைகளும் தான்.

விடுதலை தலையங்கமும் (11.11.1957) இதை உறுதிப்படுத்தியது. அந்தத் தலையங்கம் இவ்வாறு கூறியது. “முதுகுளத்தூர் கலவரத்துக்குப் பிறகு தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்கள் அனைவரும் காமராசர் ஆட்சிக்கு எதிராக உள்ள அரசியல் கட்சிகளை நஞ்சாக வெறுத்துவிட்டனர். நூற்றுக் கணக்கான ஆதி திராவிட உயிர்கள் பலியாக்கப்பட்டிருப்பதையும், ஆயிரக்கணக்கான குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டதையும் சிறிதும் பொருட்படுத்தாதபடி “உயர்சாதி”க்காரர்களை போலீசு சுட்டுக் கொன்றது பற்றி கண்ணீர் வடிப்பதும், திரு.மு.தேவரை (முத்துராமலிங்க தேவர்) விடுதலை செய்ய வேண்டுமென்று கடையடைப்பு செய்யவும், இதற்காக சட்டசபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதும், இதற்காக சட்டசபையை விட்டு வெளியேறுவதும் போன்ற நடத்தைகளால் அரசியல் எதிர்க்கட்சிகள் என்பவை ஆதி திராவிட சமுதாயத்திற்கு துரோகம் செய்துவிட்டன. இந்த மன்னிக்க முடியாத குற்றத்திற்காக, ஆதி திராவிட சமூகம் இந்த எதிர்க்கட்சிகள் மீது இன்று ஆத்திரப்பட்டு கொதிப்படைந்து இருக்கிறது” என்று அந்தத் தலையங்கம் துணிவுடன், பிரகடனம் செய்தது.

இந்த வரலாறுகளை நாம் சுட்டிக்காட்டுவதற்கு காரணம் உண்டு. சாதி ஆதிக்கத்தின் குறியீடாக பெரியாரும் விடுதலையும் சுட்டிக்காட்டிய ஒரு தலைவரை பெரியார் கொள்கைக்கு ஒரே வாரிசு தாம் மட்டுமே என்று மார்தட்டும் கி.வீரமணி எப்படிப் பார்த்தார்? பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலைக்கு அவரது பிறந்த நாளில் மாலை போடத் தொடங்கினார். எப்போது? வீரமணி, ஜெயலலிதாவுக்கு, ‘சமூக நீதி காத்த வீராங்கனை’ பட்டம் அளித்து, ‘மதச்சார்பற்ற அணியின் புரட்சித் தலைவியாக’ மகுடம் சூட்டியபோது. அப்படி ஜெயலலிதாவை ஆதரித்த காலத்தில், அவரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும், அவரது ‘மூளையும் இதயமுமாக’ செயல்படும் சசிகலாவிடம் நற்சான்று பெறவும், முத்துராமலிங்க தேவர் சிலைக்கு, அவரது பிறந்த நாளில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி வந்தார் கி.வீரமணி. திராவிடர் கழக மாநாடுகளிலும் முத்துராமலிங்க தேவர் படம் திறக்கப்பட்டது. இவர்தான் பெரியார் திராவிடர் கழகத்தைப் பார்த்து ‘திரிபுவாத திம்மன்கள்’, ‘வரலாற்றுப் புரட்டர்கள்’, ‘பெரியார் கொள்கை துரோகிகள்’ என்று வசைமாரி பொழிகிறார்.

**ஜாதி–சாதி** என்று எழுதுவதே பெரியார் கொள்கைத் திரிபு என்று மிகவும் நுட்பமாக பெரியாரியலை காப்பாற்றுவதாகக் கூறும் இவர்கள் சாதி ஆதிக்கவாதிகளுக்கு பெரியார் கொள்கைக்கு எதிராக துணை போகலாமா? இது கொள்கைப் புரட்டு அல்லவா?

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

*விற்பனைக்குத் தயார்!*

**“ஒப்பந்தங்களை சீர்குலைத்தது யார்?”**

- ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாறு; சிங்களர்களின் துரோகங்கள்; பறிக்கப்பட்ட உரிமைகளை விளக்கிடும் நூல்.

நூலின் விலை : ரூ.20

தலைமைக் கழகத்திடமிருந்து நூல்களைப் பெற்று தோழர்கள் பரப்பிட வேண்டுகிறோம்.

**– இது பெரியார் திராவிடர் கழக வெளியீடு.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th November 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.